மாலா

மார்ச் -1960



விலை 25 காசு

சபாஷ்,
குலாலரே -
இப்போது உங்களுக்கு
ஒரு கப் டீ தேவைதான் !
நான்தான் டீ -
உங்கள் வேலையில்
ஊக்கமளிக்க
உத்தமமான பானம்
TEA BOARD INDIA
PST-215

துரிதமாகத் தயாராகி வருகிறது !

வைஜயந்திமாலா ★ சிவாஜி கணேசன்

மற்றும் பலர் நடிக்கும்

உமா பிக்சர்ஸாரின்

சித்தூர் ராணி பத்மினி

டைரக்ஷன் : Ch. நாராயணமூர்த்தி B.A.,

கதை வசனம் : ஸ்ரீதர்

சங்கீதம் : G. ராமநாதன்

Rights Controlled by :

சண்முகா பிக்சர்ஸ், சென்னை - 17.

மாசற்ற பூப்போன்ற மேனி அழகிற்கு...

For flawless, flowersoft complexion ...

MYSORE Sandal SOAP

GOVERNMENT SOAP FACTORY, BANGALORE 3.

கவர்ன்மெண்ட் சோப் தொழிற்சாலை, பெங்களூர்-3.

748

இனிமையானது!

MODEL 0374

- ஆறு வால்வ்
  ஒன்பது
  இயக்கங்களுடன்
- எல்லா அலை
  நீளங்கள்
- நான்கு பாண்டுகள்
- பியானோ
  சாவி ஸ்விட்ச்
- ரூ. 435.00.



murphy radio

இல்லத்தை மகிழ்விக்கிறது.

மர்பி ரேடியோ ஆப் இந்தியா லிட்., பம்பாய்-12.

STATEMENT ABOUT OWNERSHIP OF THE MALA

(Rule 8 Form IV) Newspapers (Central) Rules, 1956

1. Place of Publication	...3, Southern Avenue, Alwarpet, Madras-18.
2. Periodicity of its Publication	...Monthly
3. Printer's Name	...Sri S. S. Sarma
Nationality	...Hindu
Address	...Sri Sudarsan Press. 111. Mount Road, Madras-6.
4. Publisher's Name	...M. D. Raman
Nationality	...Hindu
Address	...3, Southern Avenue. Alwarpet, Madras-18.
5. Editor's Name	...M. D. Raman, Managing Editor. S. S. Sarma, Editor
Nationality	...Hindu
Address	...3. Southern Avenue. Alwarpet, Madras-18.
6. Name and addresses of individulas who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	...M. D. Raman 3, Southern Avenue, Madras-18.

I, M.D. Raman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated 11-3-'60

M. D. RAMAN.
Publisher.

தந்தி : நாட்டியமாலா போன் : 71669

மாலா

தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகை

போஷகர்:

வைஜயந்திமாலா

நிர்வாக ஆசிரியர் ;

எம். டி. ராமன்

ஆசிரியர் ;

எஸ். எஸ். சர்மா

துணை ஆசிரியர் : த ரா. ரா

★

தனிப் பிரதி 25 காசுகள்

(அணா 4)

வருட சந்தா ரூ. 3/-

பிரதி மாதம் 10ம் தேதி மாலா எங்கும் விற்பனைக்குக்கிடைக்கும்

பர்மா, மலேயா நாடுகளுக்கு மட்டும்

தனிப் பிரதி அணா 6

அந்தந்த ஊர் ஏஜண்டுகளிடம் மாலாவை மாதந்தோறும் வாசகர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா ''ஹிக்கின்பாதம்ஸ்'' "சுதேசமித்திரன்'' ரயில்வே புஸ்தக ஸ்டால்களில் எமது மாலா விற்பனைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.

★

தபால் மூலம் மாலாவை வரவழைத்துக் கொள்ள கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விபரம் : **மாலா**

சதர்ன் அவின்யூ.

ஆழ்வார்பேட்டை.

தபால்-பெட்டி நெ. 1452

மதருஸ்-18.

மாலா

மாலா 9 1 மார்ச் 1960 | மலர் 12

பொருளடக்கம்

★

வரவேற்கிறோம் —தலையங்கம்

கதைகள் :

கைவீசம்மா கைவீசு —ஸ்ரீவத்ஸன்

இரும்பின் கண்ணீர் —கிருஷ்ணு

காலம் விடிந்தது—கார்த்திகேயன்

வாழவைத்தவள் —சுப்பு

நாடகம் :

நினைப்பும் நிகழ்ச்சியும் —திருச்சி வாசுதேவன்

தொடர் கதை

ஆனந்த பைரவி --எல்லார்வி

ஜோதிடப் பகுதி :

ராசிபலன், கேள்வி பதில் —கணபதி ஜோஸ்யர்

கலை அரங்கம் சினிமா விமர்சனம்

செய்திச் சுருள்

மற்றும் இதர அம்சங்கள்.

குறிப்பு—மாலாவில் வரும் பெயர்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் கற்பனையே.

போஷகர் : வைஜயந்திமாலா

மாலா 9 | 1960 மார்ச் | மலர் 12

20883

வரவேற்கிறோம்

பாரதம் முழுவதிலுமுள்ள ஹிந்து மத பொது தர்மச் சொத்துக்கள் சிறந்த முறையிலும், பொருத்தமான விதத்திலும் நிர்வகிக்கப்பட்டு வரும்படி சரிவர கவனித்துக் கொள்ளுவதற்குச் சட்டங்கள் இயற்றவும், பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விசாரணை நடத்தி அரசாங்கத்தாருக்கு யோசனை கூற ஒரு கமிஷனை மத்திய அரசாங்கம் நியமித்துள்ளது. மேற்படிக் கமிஷனுக்கு மிகப் பொருத்தமான நபரை தலைவராக நியமித்துள்ளனர். டாக்டர் ஸி. பி. அவர்கள் தலைவராக அங்கம் வகிக்கிறார். பிரபல நீதிபதி ஒருவர், அட்வகேட் ஜனரல் ஒருவர், பாரத்சாது சமாஜ் காரியதரிசி, முன்னாள் ஹிந்து மத பரிபாலன போர்டு தலைவர் கொண்ட கமிஷன் நன்கு இயங்கி பலனளிக்கும் வகையில் செயல் புரியும் என நம்பலாம்.

மேற்படிக் கமிஷன் தர்ம சொத்துக்களைச் சரியானபடி நிர்வகிப்பது பற்றி சிறந்த யோசனைகளை எடுத்துக் கூறுவார்கள் என்று நம்புகிறோம்.

அங்கங்கே இப்போது இருந்து வரும் ஸ்தாபனங்களில் சில சொத்துக்களை நிர்வகிப்பதில் அவைகள் கடைப் பிடித்து வரும் முறைகள் யாவும் சரியானவையா என்று ஆராய்ந்து, எந்தெந்த முறைகளில், திருத்தங்கள், மாற்றங்கள் வேண்டுமோ அவைகளைத் தெரியப்படுத்த கமிஷன் உதவும் என நம்புகிறோம். ஹிந்து மத பொது தர்ம சொத்து சம்பந்தமாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை விஷயத்திலும் கமிஷன் ஆராயப் போகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். இதில் தொன்று தொட்டு வரும் நல்ல முறைகளையும் புறக்கணிக்காது எந்தெந்த முறைகளில் என்னென்ன முன்னேற்றங்கள் செய்யலாம் என அவர்கள் சிபாரிசு செய்வது பேருதவியாகவிருக்கும். தர்ம சொத்துக்களை விட்டுப் போனவர்கள், விட்டுப் போகையிலே தெரிவித்துள்ள நோக்கங்களுக்கும் பொருத்தமாகவே சொத்துக்கள் பெரும்பாலும் நிர்வகிக்கப்பட்டு வரவேண்டியதை வற்புறுத்தும் நிலையிலும் சிபாரிசுகள் இருக்கும் என்றும் நம்புகிறோம். மொத்தத்தில் இந்த சிறந்த பணியில் பல்துறை அறிஞர் டாக்டர் ஸி. பி. அவர்கள் தலைமை வகிக்கும் கமிஷன், முற்றும் வரவேற்க வேண்டியதொன்றாகும்.

கூத்து பிறந்தது!

தமிழழகன்

கூத்தக் கலையன்று பிறந்தது;—எழில்
கோத்தக் கலையின்று சிறந்தது! (கூத்தக்)

நீத்தக் கடலின் நீரோட்டத்தில்—அதில்
நெளிநெளி யாம் அலைக் கூட்டத்தில்
மூத்த நுரைத்திரள் மூட்டத்தில்—அங்கு
முன்னேறிப் போம்பட காட்டத்தில் (கூத்தக்)

கொல்லையில் தேன்கிண்ணிக் கோலத்தில்—மலர்
கொஞ்சிடும் தென்றலின் ஜாலத்தில்
முல்லையின் பூங்கொடி மூலத்தில்—அதன்
மொட்டிதழ்க் கட்டவிழ் காலத்தில் (கூத்தக்)

சித்திரக் குன்றின் சிகரத்தில்—முகில்
சென்றுசென் றாயும் உயரத்தில்
கைத்திறம் தீண்டாக் ககனத்தில்—ஆடிக்
கலையும் மழைவில்லின் யௌவனத்தில் (கூத்தக்)

பச்சைப் பசேல்நெற் பழனத்தில்—அங்கு
பழகும் கதிரின் நளினத்தில்
கச்சை யிளமான் களினத்தில்—அவர்
கைவழி யூரும் விழிநத்தில் (கூத்தக்)



தொன்றுதொட்டு பண்டை நாட்களிலிருந்து வெளிநாடுகளிலும் புகழ் பரவும்படி நமது நெசவுத் திறன் சிறப்புற்றிருந்தது. நமது ஆடைகள் ஆதி கிரேக்கர்களால் புகழப்பட்ட காலம் உண்டு. வெளிநாடுகளிலும், நம் நாட்டிலும் நெசவுத் தொழிற்சாலைகள், ஆரம்பமானவுடன் இக் கைத்தறி நெசவுக்கு பாதகம் ஏற்பட்டது. 1953ல் அரசாங்கம் கைத்தறிக்கு புத்துயிர் அளிக்க 'செஸ்' நிதியை ஆரம்பித்தது. அகில இந்திய கைத்தறி போர்டு ஸ்தாபனம் இத் தொழிலை நல்ல முறையிலே பொருளாதார முன்னேற்றம்பெற ஆவன செய்வதற்காக நிறுவப்பட்டது. மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் ஆதரவு அளிக்க முற்பட்டன. கைத்தறி உற்பத்தித் துறையிலே 'அம்பர் ராட்டினம்' நல்ல வேலை செய்கிறது. படத்தில் நான்கு சக்கரமுள்ள அம்பர் ராட்டினம் இயங்குவதைக் காணலாம்.

நினைப்பும் நிகழ்ச்சியும்

★★★★★★★★★★★★ திருச்சி வாசுதேவன் ★★★★★★★★★★★

பாத்திரங்கள் .

1. வேலாண்டி (மகன்)
2. மாணிக்கம் (தந்தை)
3. தங்கமுத்து (நண்பர்)
4. நாச்சியப்பன் (மாமா)
5. ரெத்தினம் (நண்பர்)
6. பூவம்மாள் (தாய்)

காட்சி 1.

பூவம் : (மகிழ்ந்து) வாடா என் கண்ணு.

மாணி : (திடுக்கிட்டு) யாரு, வேலாண்டியா வந்திருக்கான் ?

வேலா ; இல்லேலப்பா; வேலப்பா வந்திருக்கேன்.

மாணி : (சினந்து) என்னடா உளறுறே ?

பூவம் : புள்ளே வந்ததும் வராததுமா ஏன் இப்படி மிரட்டுறிங்க?

மாணி : இல்லேன்ன, மேளதாளத்துக்கு ஏற்பாடு செய்யறது தானே, வரவேற்கறதுக்கு!

பூவம் : ஆரம்பிச்சுட்டிங்கல்ல உங்க ராமாயணத்தை! ஒரு வருஷமாப் போயிருந்த புள்ளே ஊடு தேடி வந்திருக்கான்... ஆசையாப் பாசமா வாடான்னு சொல்லாட்டியும்.........

மாணி : (குறுக்கிட்டு) வாயை மூடிக்கிட்டுக் கிடன்னு சொல்ல வர்றியாக்கும்.

பூவம் . ஊரு உலகத்திலே உங்களே மாதிரி யாரும் இப்படிப் பேச மாட்டாங்க!

மாணி : ஆமை, இந்த ஓடுகாலிப் பயலே உசத்தியாப் பேசிக்குவாங்க உன்னே மாதிரி அப்படித்தானே?

வேல : அம்மா...நீங்க ரெண்டு பேரும் ஏன் சண்டையிட்டுக்கணும்? நான் அடுத்த வண்டியிலே ஊருக்குப் போறேன்.

பூவம் : எந்த ஊருக்கு ?

வேலா : எங்கேன்னு. ஏன்னு... நான் இருக்கறதும் ஒண்ணுதான் போயிடுறதும் ஒண்ணுதான்!

பூவம் : அப்பா, வேலாண்டி ! நீ இப்படி வெறுத்துப் பேசறதுக்கா, வரலே வரலேன்னு ராவும் பகலுமாக் கவலேயாக் கிடந்தேன்.

வேலா ; நான் செஞ்சிருக்கற குற்றத்துக்கு உங்க முகத்திலே விழிக்க எனக்கு ஏதும்மா, யோக்கியதை ?

பூவம் : அப்படி என்னத்தை... யாரும் செய்யாத குற்றத்தை செஞ்சுட்டே...

மாணி : (சினத்துடன்) ஏ பூவம்மா, இப்படியே நீ காலத்துக்கும் இடங்கொடுத்து இடங்கொடுத்துத் தான் உருப்படியாவாத காவலிப் பயலா ஆக்கிப்புட்டே! இன்னுமா.

பூவம் : பெத்த அப்பனே இப்படி இளக்காரமாப் பேசினு, மத்தவங்க யாரு மதிப்பா, இவனே?

மாணி : தன்வீட்டு நெருப்புன்னு சுடாதுன்னு நெனப்பா உனக்கு?

பூவம் : நீங்கதான் இப்பொ நெருப்பா எரிஞ்சு பேசுறிங்க! அவமானம் தாங்காமே ஆத்திலேயோ, குளத்திலேயோ நான் விழுந்து சாகணும்.

மாணி : ஏண்டி, நீ சாகணும் ? செக்கு உலக்கைமாதிரி நிக்கிறுனே இந்தத் திருட்டுக் கழுதையில்ல...

பூவம் : (குறுக்கிட்டு) போவுது போவுதுன்னு நான் பொறுக்கப் பொறுக்கப் புள்ளேயைப் பொறிச்சுக் கொட்டுறிங்களே ! யாரு வீட்டிலே போய்த் திருடிப்புட்டான் ! என்னுடை சரட்டைத்தானே எடுத்துக்கிட்டுப் போனுன்.

மாணி : ஆமா... அப்பொ சரட்டை எடுத்துக்கிட்டுப் போனுன்... இப்போ சங்கிலியை அறுத்துக்கிட்டுப்போவ வந்திருக்கான்.

பூவம் : இப்படி அக்கிரமமாப் பேசாதிங்க... ஏதோ அவன் கிரகம் சரியில்லே... தெரியாமெ செஞ்சுட்டான் அதுக்குப்போய்...

மாணி: கிரகத்தை வேறே ஏன் இழுக்கறே, இவன் புத்தி கெட்டுப் போனதுக்கு?

பூவம்: அதுதான் அப்பவே சோசியர் சொன்னாரே. அவனுக்கு இப்பொ காலம் போதாது. ஒழுங்கா, முறையா ஒரு இடத்திலே தரிச்சு நிக்க மாட்டான். எல்லாம் ஒரு வருஷத்துக்குப் பொறவு தானா வீட்டுக்கு வந்திடுவான் அப்படின்னு அந்த மாதிரிதானே இப்பொ ஆச்சு!

மாணி: ஆமா சோசியமுமாச்சு உன் பிள்ளையுமாச்சு! எல்லாம் என்னோட விதி. உங்களாலே காலம் முழுக்க எனக்கு நிம்மதியில்லாம போச்சு!

பூவம்: என்னிக்குத்தான் உங்க மனசு நிம்மதியாயிருந்துச்சு. இந்த ஐப்பசி வந்தா இருவத்தைஞ்சு வருஷம் ஆவப் போவுது, நான் இந்த வீட்டிலே நுழைஞ்சி. தாலி கட்டின மறு நாளிலேயிருந்து நிம்மதியில்லே நிம்மதியில்லேங்கற பாரதந்தான் பாடி வர்றிங்க?

மாணி: பாடுறேனா...பாடவைக்கிறியா?

பூவம்: ஏன் இப்படிப் பேசிப் பேசி என் மனசைப் புண்ணாக்குறிங்க? அப்பவே என் கழுத்தை நெரிச்சுக் கொன்னுப்புட்டு வேறே கல்யாணம் பண்ணிக்கிட்டுக் கவலையில்லாம இருக்கிறதுதானே? யார் வேண்டாமுன்னா?

[வெளியிலிருந்து தங்க முத்துவின் குரல் மாணிக்கம்! மாணிக்கம்!! என்று அழைக்கிறது]

மாணி: யாரது! ஓ! தங்கமுத்து அண்ணாச்சியா... இதோ வந்துட்டேன்.

பூவம்: வேலாண்டி, நீ எதுக்கு கவலையா நிக்கிறே...உங்க அப்பாரு குணந்தான் தெரிஞ்சுகிடக்கே...சரி போய்க் கை கால் அலம்பிட்டு வா இலையைப் போடுறேன்.

காட்சி 2

நாச்: வாங்க, அத்தான் உக்காருங்க!

தங்: வர்றேன் நாச்சியப்பா...

நாச்: இந்தாங்க...... வெத்திலே போடுங்க

தங்: நாச்சியப்பா உங்கிட்டே ஒரு முக்கியமான சங்கதி பேசணுமுன்னு நேத்துச் சாயங்காலமே நினைச்சேன். வயலுக்குப் போவ வேண்டியிருந்துச்சு அதனாலே வர முடியலே!

நாச்: என்ன சங்கதி?

தங்: உன் மச்சினன் மவன் வந்திருக்கானே தெரியுமில்லே......

நாச்: வந்திருந்தா என்ன...... ஓடுனா என்ன...தள்ளுங்க கழுதையை!

தங்: அப்படியும் ஒரே முட்டாத் தூக்கி யெறிஞ்சு பேசப்படாது நாச்சியப்பா சொந்தம்வான்னா நாளைக்கு வந்துடுமா?

நாச்: தாய் தகப்பனுக்கு அடங்கி ஒடுங்கி நடக்காத தறுதலைப் பயலைப் போய்ச் சொந்தம் கிந்தமுன்னு உறவு கட்டிப் பேசுறிங்களே, அத்தான்!

தங்: என்ன பண்றது? வெட்டிப் பேசறது வெகு சுலபம், உறவுன்னா நல்லது கெட்டதெல்லாம் கலந்து தானே இருக்கும். அநுசரிச்சுக் கிட்டுப் போறதுதான் புத்திசாலித் தனம்.

நாச்: அது சரிதான்...... ஆனா அந்தக் காவாலிப்பய இன்னும் செய்யாத தில்லு முல்லு என்ன பாக்கியிருக்கு, சொல்லுங்க? ஆச்சு எருமைக்கு ஆனமாதிரி இருபது வயசு. அவனாலே யாருக்கு என்ன பிரயோசனம்? ஏதோ ஒரு புள்ளையாச்சேன்னு அக்கா அவனைச் செல்லமா வளர்த்துடுச்சு! அதான் சேரழியரான்.

தங்: இருந்தாலும் நீயே வேலாண்டியை இவ்வளவு தூரம் இளக்காரமாகப் பேசப்படாது!

நாச்: ஏன் சொந்தக்கரரப் புள்ளைன்னா மட்டும் ஞாயம் மாறிடுமா?

தங்: ஆனா நாளைக்கு உன் வீட்டுக்கு மருமவனா வரப்போறவன் இல்லையா?

நாச் : (திடுக்கிட்டு) என்னது?

தங் : ஏன் இப்படிப் பதறுறே நாச்சியப்பா? காலைக்கு நடக்க வேண்டியதைத்தான் சொன்னேன் [சிறிது தாமதித்து] என்ன யோசனை பண்றே...

நாச் : உங்களுக்கு எல்லாந் தெரியும். நீங்களே இப்படிச் சொன்னு!

தங் ; ஏன், உன்மகளை வேலாண்டி கட்டிக்கறதுக்கு உரிமையில்லையா ?

நாச் : உறவு, முறை, உரிமை இதுகளைவிட யோக்கியதை தான் உசந்ததுன்னு நினைக்கிறவன் நான்!

தங் : ஏதோ......அப்பொ தெரியாமெ அயோக்கியனு நடந்தான். அதுக்காக...

நாச் : (குறுக்கிட்டு) ஆனு ... இப்போ அவன் யோக்கியனுத் திருந்திட்டான்னு எதைக்கொண்டு நம்புறிங்க ?

தங் : இந்தா......நாச்சியப்பா... இவ்வளவு தூரத்துக்கு அப்புறமும் உண்மையைச் சொல்றதுக்கு என்ன...முந்தா நாள் ஒன் மச்சினன் மாணிக்கத்தைப் பார்க்கப் போனேன். மகன் வீட்டுக்கு வந்து விட்ட சேதியைப் பேசிக்கொண்டிருந்தான், மாணிக்கம். அப்பொ... உன் அக்கா பூவம்மா தான், வர்ற கார்த்திகை மாசத்திலே அவனுக்கு ஒரு காலுக்கட்டைப் போட்டு வைச்சுட்டா. ஒழுங்கா முறையா ஆயிடுவான். நாச்சியப்பன் மகளும் மனுஷியாயி ஒரு வருஷம் ஆச்சு! போய் விஷயத்தை அவன் காதிலே போடுங்க மாமான்னு சொல்லுச்சு இதுதானப்பா நடந்த சங்கதி...... பொறவு உன்பாடு; ஒன் அக்கா மவன் பாடு...

நாச் : அக்கா நினைக்கிறமாதிரி அவ்வளவு லேசிலே முடியருப்பலே எனக்குத் தோணலே......

தங் ; என்னமோ......... நல்லா யோசிச்சுப் பாரு! இன்னொரு நாளைக்கு வர்றேன்...

நாச் : சரி......... போய் வாங்க அத்தான்.

காட்சி 3

ரெத்: என்னடா, வேலாண்டி... ஒரு வருஷமாப் போயிருந்தவன் நீ வந்து பத்து நாள் ஆகறதுக்குள்ளே புறப்படறேங்கறே...

வேலா : இங்கே வந்ததே எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பொ தான் எனக்குத் தெரியுது...

ரெத்: ஏன் இப்படிச் சொல்றே? உங்க அம்மாவோட உயிரு உம் மேலேதான் இருக்குங்கற சங்கதி உனக்குத் தெரியாதுபோலிருக்கு! நீ போன நாளா அவங்கபட்ட கவலை உனக்கு எப்படித் தெரியும்?

வேலா: ரெத்தினம்...... அதையெல்லாம் பார்த்தா முடியுமா? அவங்க அவங்க வாழ்க்கையைப் பத்தி அவங்க அவங்க கவலைப் பட்டாதான் வழி பொறக்கும்.

ரெத் : அதனுலே நீ இப்பொ என்ன செய்யப் போறியாம் ?

வேலா: இந்த ஊருக்கே ஒரு முழுக்குப் போட்டுட்டு, என் பொழைப்பைக் கவனிக்கப் போறேன்.

ரெத் : டேய்நான் சொல்றதைக் கேளு. உன் மாமன் மகளை உனக்



"இதென்ன தினசரி வம்பாப் போச்சு! கையிலே எடுத்தவுடன் பேஸ்டெல்லாம் வந்துடுதே...?"

குக் கட்டிவைக்க ஏற்பாடு செய்யி ருங்க உங்க அம்மா. இந்தச் சமயத் திலே கிளம்பறேங்கிறியே. பேசாமெ இங்கேயே இருந்து கல் யாணத்தைச் செய்துகிட்டுப் பெண் டாட்டியோட போய்ச் சேரேன்!

வேலா: என்னுடைய எதிர்கால திட்டம் ஒண்ணும் அம்மாவுக்குத் தெரியாது. அதனலேதான் மாமன் கிட்டே போய்ப் புடிவாதமாப் பொண்ணு கேட்டுக்கிட்டிருக் காங்க!

ரெத்: பெரிய மேதாவி மாதிரி திட்டம், சட்டமுன்னு ஏண்டா மண்டையைப் போட்டுக் குழப்பிக் கறே. தாய் தகப்பனுக்கு ஒரே புள்ளே. இருக்கற நில புலத்தைக் கவனிச்சிக்கிட்டிருந்தேன்ன, சீக்கிர மாக் கல்யாணத்தையும் செய்து வைச்சுடுவாங்க...... சௌக்கியமா இருக்கலாம்.

வேலா: இந்தா ரெத்தினம், எனக்கு முதலிலே அப்பாவோட வெறுப்புப் பிடிக்கலே... இரண்டா வது விவசாயத்திலே ஈடுபடவும் விருப்பமில்லே. மூணுவதா இந்தக் கிராமத்திலேஇருக்கவே பிடிக்கலே!

ரெத்: கடைசியா மாமன் மகளேக் கட்டிக்கவும் கசக்குதுன்னு சொல் லிப்பிடு, நல்ல பைத்தியக்காரன் நீ. பட்டணத்துக்குப் போன பைய னுங்க மனசு அநேகமாக் கெட்டுப் போயிடுமுன்னு சொல்ற வசனம் நிசந்தான்னு...இப்பல்ல எனக்குத் தெரியுது.

வேலா: இதெல்லாம் உன்னே மாதிரி உலகந் தெரியாத கிராமத் துக் கிணத்துத் தவளேகள் பேசுற பேச்சு!

ரெத்: டேய்... நிறுத்துடா உன் அளப்பை...... என்னமோ சீமை யிலே பொறந்து வளர்ந்தவன் மாதிரி பேசறே.

வேலா: ரெத்தினம், நீ மட்டு மல்லே, ஊரு உலகத்திலே ரொம் பப்பேரு இப்படித்தான் நெனேக்கி ருங்க. ஓரிரண்டு தடவை தப்புச் செய்தவன் சாகறமட்டும் தப்பு செய்துகிட்டுத்தான் இருப்பான்னு,

ரெத்: இதைவிடத் தட புடலா வசனம் பேசற சினிமா எத்த னேயோ நான் பார்த்திருக்கிறேன். சினிமா ஸ்டுடியோவிலே பியூனு இருக்கறப்பவே இந்தப் போடு போடுறே...... இன்னும் சில்லறை வேஷம் கட்ட ஆரம்பிச்சுட்டின்னு, அடேயப்பா!

வேலா: சரி, ரெத்தினம்...நான் ஊருக்குப்புறப்படுற ஏற்பாடுகளேக் கவனிக்கனும் ... ... அப்பறம் வேறே என்ன சங்கதி?

ரெத்: வேறே என்ன......நல்ல சங்கதிதான். ஆமா வேலாண்டிங் கற பேரை ஏன் வேலப்பான்னு மாத்திக்கிட்டே இப்போ?

வேலா: அதெல்லாம் உனக்கு விளங்காது ரெத்தினம். சினிமா உலக எல்லேயிலே காலடி வைச் சுட்டாலே இந்தமாதிரி பேரு ஊரை யெல்லாம் மாத்தி வைச்சுக்கறது சர்வ சாதாரணம்...பெரிய பெரிய ஸ்டார்ன்னு பேர் வாங்கியிருக்கிற வங்ககூட இப்படித்தான்....

ரெத்: (கிண்டலாய்) மாத்திக் கிட்டாங்க...அப்படி நானும் மாத் திக்கிட்டேங்கிறியாக்கும்......என்ன மோ இன்னிக்குப் பியூனு இருக்கே நாளேக்குப் பெரிய நடிகனுக ஆனு லும் ஆயிடுவே.......

வேலா: ரெத்தினம், கோவிச் சுக்காதே... தமாஷாப் பேசிக்கிட் டிருக்க இப்போ நேரமில்லே...வரட் டுமா?

ரெத்: அடேயப்பா!... சரிதான் இவ்வளவு பிகுவா இருக்கியா? ரொம்ப நல்லது போய்ட்டு வா....

காட்சி 4

நாச்சி: வா, அக்கா...

பூவம்: நாச்சியப்பா இன்னிக்கு முடிவாக் கேட்டுப்புடனுமுன்னு வந்திருக்கேன்.

நாச்சி: அடடே...... உக்காருங் களேன்...... வந்ததும் வராததுமா முடிவு கட்டிக்கிட்டே வர்றிங்க.

பூவம்: (சலிப்புடன்) ஆமடா... பின்னே என்ன... கேக்கறப்பெல் லாம் யோசனேபண்றேன் யோசனே பன்றேன்னு சாக்குச் சொல்றே...

நாச்சி : எதையும் நல்லாச் சிந்திச்சுப் பார்த்தா பின்னுலெ பங்கமில்லேன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க...

பூவம் : அப்படின்னு...... நாங்க கெடுதலுக்காகவா சொல்ரேம்...... அக்கா மவனுக்குப் பொண்ணேக் கொடுக்கறதைப்பத்தி மத்தவங்க என்ன சொல்றதுக்கு இருக்கு ?... இந்தா காச்சியப்பா இன்னும் நீமுடி முடிப் பேசவேணும்...... எனக்கும் வேலாண்டி ஒரேபுள்ளே...ஒனக்குக் காத்தாயி ஒரேபொண்ணு!..உறவு முறை விட்டுப் போகக் கூடாதுன்னுதான் ஒம் பொண்ணேக் கட்டி வைக்கணுமுன்னு நான் நினேக்கிறது!...

நாச்சி : நீங்க சொல்றது உண்மைதான் அக்கா... ... இருந்தாலும் கல்யாண விஷயமில்லேயா... ஆற அமர யோசிச்சுப் பார்த்தா தான்....

பூவம் : (எரிச்சலாய்) ஆமா... என் மவன் என்ன பொழைக்கத் தெரியாதவனு...... இல்லே... எங்களுக்கு வீடுவாச நிலபுல மில்லேயா ஏதோ சின்ன வயசிலே அப்படி இப்படின்னு திரிஞ்சுது கழுதை... இப்போ...பாரு... தனக்கே அறிவு வந்து பொழைப்பைத் தேடிக்கிட்டான்...இன்னும் கொஞ்ச நாளிலே பெரிய 'ஆக்கிடரா' கூட ஆயிடுவானும்.

நாச்சி : எப்படியாச்சும் மனுஷத்தனமா நடந்துகிட்டா சரிதான்......

பூவம் : அப்படின்னு இன்னும் அவன்மேலே உனக்கு நம்பிக்கை யில்லே.... அவனே தாறுமாறு நடந்தாலும் நாங்க நாளேக்கு உம்மவளே வைச்சு வடிக்க மாட்டோமா ? (சிறிது தாமதித்து) என்னடாது... நான் சொல்லிக்கிட்டிருக்கேன் உம் பாட்டிலே பேப்பரைப் பார்த்துக்கிட்டிருக்கே...

நாச்சி : இல்லேக்கா... பீஹார் ராஜ்யத்திலே ஒரு விவசாயி புது விதமாகச் சாகுபடி செய்து எல்லாரையும்விட அதிகமா மாசூல் அடைஞ்சாராம்... அவருக்குச் சர்க்காரிலே ஆயிரருபாப் பரிசு கொடுத்திருக்காங்களாம்! அந்த விவரமெல்லாம் ரொம்ப நல்லா போட்டிருக்காங்க. இந்தப் பேப்பரிலே... முக்கியமான விஷயமானதுனுலே பார்த்தேன்.

பூவம் : சரிதான் நான் பேசற காரியம் ஒண்ணும் முக்கியமில்லேங்கறே...இதுக்கு இவ்வளவு தூரம் ஏன் மழுப்பிப் பேசணும் ? முடியாதுன்னு உடைச்சுச் சொல்லிப் புடறதுதானே, தேங்காய்க்கு ரெண்டு மூடின்னு !

நாச்சி : அக்கா...கவனிங்க ஒரு முக்கிய சேதி...... வேலாண்டின்னு போட்டிருக்கு.

பூவம் : (மகிழ்ச்சியாய்) என்ன, நம்ம வேலாண்டின்னு போட்டிருக்கு ? அடே அவனேப் பத்திப் பேப்பரிலேகூடப் போடுருங்களா!

நாச்சி : இருங்களேன், அதுக்குள்ளே அவசரப்படுறிங்க ! இன்னெரு தடவை படிக்கிறேன், திருடியதாக இளேஞன் கைது. சென்னே-26. இந்த வட்டாரத்தைச் சேர்ந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் சந்தான சிங்கம், நேற்றிரவு தம் சகாக்களுடன் சென்று வேலாண்டி என்னும் இளேஞன் ஒருவனேக் கைது செய்திருக்கிருர். சினிமா ஸ்டுடியோ ஒன்றில் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு களவு சம்பந்தமாய் டி இளேஞன் கைதானதாகவும் மேற்கொண்டு போலீஸார் புலன் விசாரணே செய்து வருகிருர்களென்றும் தெரிய வருகிறது. ந.நி.

பூவம் : என்னது வேலாண்டியா அவனேயா போலீஸிலே புடிச்சிருக்காங்க? ஐயையோ தெய்வமே... இந்தச் சங்கதி பொய்யா இருக்கணும்.

நாச்சி : நானும் அப்படித்தான் நினேச்சேன்...ஆனு, சினிமா ஸ்டுடியோன்னு போட்டிருக்கறதுனுலே தான் சந்தேகப்படும்படியா இருக்கு.

பூவம் : (அழுகையை அடக்கிய படி) என்னடா, பெரிய அநியாயமா இருக்கு இந்தச் சேதி! என் புள்ளே ரொம்பவும் நல்லவனு மாறி இருந்தானே இப்போ வந்திருந்தப்போ?

நாச்சி : அக்கா......அநியாயமும் ஞாயமும் ஆண்டவனுக்கல்ல தெரியும்...... என்னமோ அவன் தலை விதிப்படி நடக்குது...... அவ்வளவு தான்......உடனே போய் அத்தான் கிட்டே சொல்லி...

பூவம் : (அவசரமாய்) எங்கே அந்தப் பேப்பரைக் கொடுடா. இதையும் எடுத்துக்கிட்டு இன்னிக்கே ரயிலேறிப் போய் பார்க்க வேண்டியதுதான் ! (போய்க் கொண்டே) அடபாவி நீ ஜெயிலுக்குப் போறதுக்காகவா உன்னைச் செல்லமா வளர்த்தேன்.

நாச்சி : (பெருமூச்சுடன் தனக்குள்) எவனும் அளவுக்கு மிஞ்சின செல்வம் கொடுத்து வளர்த்தா,... சீரழிஞ்சுடுமுன்னு தெரியாமலா சொல்ருங்க !

காட்சி 5

பூவம் : அங்காயி...என் புள்ளையை நீதான் காப்பாத்தணும். வர்ற சித்திரையிலே உனக்குப் பொங்கல் படைக்கிறேன்.

நாச்சி : (வந்துகொண்டே)...
அக்கா......

பூவம் : வாடாப்பா...உன் வீட்டுக்குத்தான் வரணுமுன்னு புறப்பட்டுக் கிட்டிருக்கேன். நல்ல வேளையா நீயே வந்துட்டே...இந்தா கடிதாசி வந்திருக்கு...படி.

நாச்சி : (படிக்கிருர்) சௌபாக்கியவதி பூவம்மாளுக்கு, மாணிக்கம் அநேக ஆசீர்வாதம் செய்து எழுதிடது உபய க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பதில். இரண்டு மூன்று நாளாக இங்கே அலைந்து இன்று சாயங்காலம்தான் வேலாண்டியின் இருப்பிடம் தெரிந்தேன். இனிமேல். நீ அவனை நினைத்துக் கொண்டிருப்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை.

பூவம் ; (குறுக்கிட்டு) என்னடா பெரிய இடியா விழுந்துருக்கு... எந்தப் பாவியோட கண்ணு பட்டுதோ என் புள்ளை இந்தக் கதிக்கு ஆளாச்சு....

நாச்சி : அக்கா.........கொஞ்சம் பொறுமையா இரேன்.........அதுக்குள்ளே அவசரப்படுறே...அவங்க



★★★★★★★★★★★★★★★★★★★★

மாலா

கலை இலக்கிய மாதப் பத்திரிகை

தனிப்பிரதி—25 நயே பைசே

வருட சந்தா ரூ. 3·00

வெளிநாடு ரூ. 4·50

விவரம் : 'மாலா' சென்னை—18.

★★★★★★★★★★★★★★★★★★★★

புத்தியும் மனசும் சரியா இருந்தா மத்தவங்க கண்ணும்படாது காலும் தடுக்காது.......

பூவம்: (தழுதழுத்து) என்வயிறு பத்தி யெரியறது உனக்கெப்படிடா தெரியும்? இருந்ததுக்கும் வாழ்த்ததுக்கும் இப்படியா புள்ளை வந்து பொறக்கணும் எனக்கு!

நாச்சி : இரு அக்கா... கடுதாசியை முழுக்கப் படிச்சுடறேன். தலைக்குமேல் வெள்ளம் வந்து விட்டதுபோல் காரியமும் மிஞ்சிப் போய்விட்டது.

பூவம் : அடபாவி !

நாச்சி : (படிக்கிறார்) சினிமா ஸ்டுடியோவில் நடந்த திருட்டுக்கும் இவனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

பூவம் : அம்மா அங்காயி, என் வயித்திலே பாலை வார்த்தியே!

நாச்சி : (படிக்கிறார்) ஆனால் இனிமேல் அவன் நம்மூருக்கு வரப் போவதில்லை. நானும், இன்றோடு அவன் இறந்து விட்டானென்று சமுத்திரத்தில் தலை முழுகிவிட்டு ரயிலேறி வந்து விடுகிறேன்.

பூவம் : என்னடா இது... உங்க அத்தானுக்குப் பைத்தியம் புடிச்சுப் போச்சா என்ன? மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தாங்கற மாதிரி எழுதினா...பொம்பளை நான் எப்படிப் புரிஞ்சு கொள்றதாம்?

நாச்சி : அக்கா அவருக்கு ஒண்ணும் பைத்தியமில்லை......நீதான் அப்படி நடந்துக்கறே......

பூவம் : ஆமடா...... கொண்ட புருஷன் குணத்துக்கும் பொறந்திருக்கற புள்ளையோட புத்திக்கும், கூடப்பொறந்த உன்னோட வாஞ்சைக்கும் எனக்குப் பைத்தியம் பிடிக்காததுதான் குறை...எல்லாம் என் விதி அப்படியிருக்கு!

நாச்சி : சரி அக்கா ... அதெல்லாம் இருக்கட்டும் இதைக் கேளு! உம்மவன் அங்கே ஒரு சினிமா எக்ஸ்ட்ராவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டானாம் !

பூவம்: ஆங்! அவனுக்கு என்ன நெஞ்சழுத்தம்...

நாச்சி : போன வாரம்தான் ரிஜிஸ்டர் கல்யாணம் பண்ணிக் கிட்டானும் இனிமே இந்த ஊருக்கு வரமாட்டேன்னு சொல்றானும்.

பூவம் : அந்தச் சிறுக்கி எவடா எம்மவனை இப்படி மசக்கியிருக்கா.

நாச்சி : அவள் எவளோ யாரு கண்டா... அவள் மயக்கினாளோ... இல்லே இவன்தான் மயக்கினானோ ஆக பெத்தவங்களுக்கும், மத்தவங்களுக்கும் தொந்தரவில்லாதபடி காதும் காதும் வைச்ச மாதிரி கல்யாணத்தை முடிச்சுக்கிட்டான்...... அந்த வரையிலும் உம்மகன் கெட்டிக்காரந்தான். அக்கா! போய் மருமகளை ஆசீர்வாதம் செய்துட்டு வா !

பூவம் : போதும்டா, உன் பரியாசம் ! என் செல்லப்பிள்ளைக்கு எவ்வளவோ சிறப்பாக் கல்யாணத்தை நடத்திப் பார்க்கணும்னு நினைச்சிருந்த நினைப்புலே நெருப்பை வைச்சாளே, அந்தச் சண்டாளி கல்லாயிருப்பாளா...

நாச்சி : அக்கா... நீ, மருமகளை வாழ்த்தாட்டியும், திட்டாமெ இருந்தாலே போதும்...... நானும் கூடத்தான் அப்பறம் நினைச்சேன் உம்மவன் யோக்கியனா மாறியிருந்தா, என் மகளை அவனுக்கே கொடுத்துடலாமுன்னு......ஆனா கொடுத்து வைச்சது அவ்வளவுதான்...வேலாண்டியும் அவன் பெண்டாட்டியும் சௌக்கியமா இருக்கணுமுன்னு வாழ்த்தறதைத் தவிர இனிமே நம்மாலே என்ன முடியும் ?

பூவம் : (கீழே விழும் ஒலி)

நாச்சி: ஆ ! அக்கா...என்ன இது மயக்கம் போட்டு விழுந்துட்டே ! ★

வாசக நேயர்களுக்கு!

புத்தாண்டிலிருந்து சில புது அம்சங்களுடன் வெளிவரும்.

மாலா

★

அட்டைப்படம் இதர சித்திரங்கள் விஷயத்தில் வாசகர்களது அதிகப் பாராட்டைப்பெற முயற்சிகள் செய்யப் படுகின்றன.

★

தமிழ் நாட்டில் தனிப்புகழ் கொண்ட ஸ்தாபனங்கள் பற்றிய விவரங்கள் தகவல் பூர்ணமாய் அமையும்.

★

மாதாவாரி பல்வேறு துறைகள் பற்றிய செய்திச் சுருக்கம் அளிக்கப்படும்.

★

பிரபல சாஹித்ய கர்த்தா மைசூர் ஸ்ரீ வாசுதேவாச்சாரியாரின் கிருதிகள் ஸ்வர ஸாகித்தியமாக வெளிவரும்.

மற்றபடி

வழக்கமான தொடர்கதை, சிறு கதைகள், கட்டுரைகள், தொடர் சித்திரம், ஜோஸ்யம், கலைஅரங்கம் யாவும் உண்டு.

தனிப்பிரதி விலை 25 நயே பைசாவே
சந்தா ஆண்டிற்கு ரூ. 3 தான்.

'மாலா' சென்னை – 18.

கைவீசம்மா கைவீசு

ஸ்ரீவத்ஸன்

"கை விசம்மா கை வீசு"

குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு என் மனைவி அதன் கைகளை ஆட்டினுள்.

அதுவும் தன் குஞ்சு கைகளை ஆட்டியபடி பொக்கை வாயால் சிரிப்பை உதிர்த்தது.

அதை ரஸித்தேன்.

குழந்தை கைகளை ஆட்டும்போது அந்த குஞ்சு கைகளில் போடப் பட்டிருந்த காப்புக்கள் தெரிந்தன.

வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். மூளையில் சுருசுருப்பு ஏற்பட்டுவிட்டது.

வழி தெரியாமல் திண்டாடியவனுக்கு வழி தெரிந்துவிட்டது. அந்த சமயத்தில் அந்த வழியைப் பின்பற்றுவதை தவிர வேறு வழியில்லை. வழி தவரு? நேர்மையானதா? கவலை இல்லை. வழி தெரிந்துவிட்டது. இனி அதன்படி நடக்கவேண்டியதுதான்.

★

விடிந்தால் என்னை ஆதரித்து ஆளாக்கிய பெரியவரின் பெண்ணுக்குக் கலியாணம். தேதி என்ன தெரியுமா. இருபத்தி எட்டு.

மூன்று நாட்கள் போனுல் ரசிது ஒட்டி நாற்பது ரூபாய் பிடித்தம் போக கிடைக்கும். இதில் யாருக்கு எவ்வளவு கொடுப்பது?

மூன்று மாதமாக வாடகை பாக்கி. வீட்டுக்காரர் கொஞ்சம் நல்லவர். அதிகமாக நெருக்கவில்லை. மளிகைக் கடைக்காரன் சாமான் கொடுப்பதை நிறுத்தி இரண்டு மாதமாகிவிட்டது. ஆபீஸ் நண்பர்கள் இரண்டும் ஒன்றும் கடன் கொடுத்தார்கள். நான் திருப்பித் தருவதில் ஏற்பட்ட தாமதம் அவர்கள் எனக்கு உதவி செய்வதை நிறுத்திவிட்டது. காலணு பெயராது. வீட்டிலிருந்த வெள்ளிச் சாமான்களை விற்று சிலவும் செய்தாகிவிட்டது.

இந் நிலையில்தான் பெரியவர் பெண்ணுக்குக் கலியாணம். அவர் பெண்ணுக்கு இந்த கலியாண டயத்திலாவது ஒரு சிறிய பரிசு கொடுக்காவிட்டால் என்னைப் போன்று நன்றியைக் கொன்றவன் இருக்கவே முடியாது.

இன்று நான், என் குடும்பம் அதாவது என் மனைவி குழந்தை இவர்கள் பட்டினிச் சாவால் இறவாமல் உயிர் பிழைத்திருப்பது அவரால் தான்.

★

மூன்று வருடத்திற்கு முன்பு ஒருநாள்.

நான் வேலை பார்த்து வந்த ஸ்தாபனம் மூடும்படியான கட்டத்தை அடைந்தது. ஆறு வருஷ ஸர்வீஸ் வீணுகிவிட்டது.

அதன்பின் மூன்று மாத காலம் ஏருத ஆபீஸ் இல்லை. கெஞ்சாதவர்கள் பாக்கியில்லை. வேலை கிடைத்தால் தானே.

அன்று பார்க்கில் உட்கார்ந்து தலைவிதியை நினைத்து அழுது கொண்டிருந்தேன்.

ஒரு பெரியவர் அங்கு வந்தார்.

அவர் என்னிடம் பேச்சுக் கொடுத்தார்.

என் மன நிலைமையில் யாரிடமும் பேசவே இஷ்டமில்லை.

அவர் கேட்ட கேள்விக்குத் தாறுமாருகப்பதில்சொன்னேன். "உங்க வேலையைப் பார்த்துக்கொண்டு போவதுதானே" என்றேன் கடுமையாக. கடைசியில் இந்த கிழங்களுக்கே சதா தொண தொணப்பதுதான் வேலை. நான் போகிறேன் நீர் விடமாட்டீர்.என்று சொல்லிவிட்டு எழுந்து போய் விட்டேன். அவர் அதற்கு பதிலே பேசவில்லை. லேசாக சிரித்தார்.

ஒரு வாரம் சென்றது.

மறுபடி ஒரு இடத்தில் வேலை காலி எனக் கேட்டுப் போனேன்.

ஒரே ஒரு காலி ஸ்தானத்திற்கு முப்பது பேர்கள் போட்டி. ஒவ்வொருவராக உள்ளே போனோம்.

அப்போது ஆட்கள் தேர்ந்தெடுக்கும் அதிகாரியின் முகத்தைப் பார்த்து திடுக்கிட்டேன்.

ஒருவாரம் முன்பு பார்க்கில் பார்த்த ஆசாமியேதான். எனக்கு நாடி விழுந்துவிட்டது. திரும்பி விட நினைத்து திரும்பினேன்.

"இங்கே வாருங்கள்" என்று பெரியவர் கூப்பிட்டார். என்ன கேட்பாரோ என்று பயந்தேன்.

"இவரை வேலைக்கு எடுத்துக் கொண்டுவிட்டேன். மற்றவர்கள் போகலாம்" என்றார்.



திக்கு முக்காடிவிட்டேன்.

"ஸார் நான் செய்ததை மறந்து விடுங்கள். அன்று என் மன நிலைமை சரியில்லை. அதனால்தான் அன்று மரியாதைக் குறைவாக நடந்துகொண்டேன்" என்று மன்னிப்பு கேட்டேன்.

"உன் மன நிலைமையில் யாருமே இப்படித்தான் நடந்திருப்பார்கள். நான் அதை தவறாக அன்று நினைக்கவில்லை. அட அசடே அதையே மனதில் வைத்து வேகுகிறாய்"

என்ன பெருந்தன்மை.

ஒரு வருட காலம் வேலை செய்தேன். அவர் எனக்குக் காயமும் செய்துவிட்டு ஓய்வு பெற்றார்.

அவரால் நான் அடைந்த நன்மை சொல்லி முடியாது. திடீரென்று வருவார். இந்தா வைத்துக் கொள் என்று பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுப்பார்.

இன்னொருநாள் ஒரு கூடையில் கரிகாய்கள் அனுப்புவார். அவர் வீடு அடுத்த தெருவில் இருந்தது. திடீரென்று ஆளிடம் ஒரு சேர் நெய் அனுப்புவார். திடீர் திடீர் என்று வருவார். என்னை ஒரு நாள் பார்க்காவிடில் அவருக்குப் பொழுதும் போகாது.

இப்படி மூன்று வருடங்கள் ஆகிவிட்டது. நான் கொஞ்சம் கஷ்டப்படுகிறேன் என்று தெரிந்தால் போதும் உடனே உதவி செய்வார்.

எனக்குத்தான் லஜ்ஜை உண்டாகிவிட்டது. அதனால் அவர் வரும்போது கஷ்டப்படாதவன் போல் நடிப்பேன்; அவர் உதவி செய்வதில் எனக்கு இஷ்டமில்லாமல் இல்லை. அவரை எவ்வளவு கஷ்டப்படுத்துவது.

★

இந்த சமயம்தான் அவர் பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயமாகி விடிந்தால் கலியாணம்.

அப்போது மத்தியானம் மூன்று மணி. ஏழு மணிக்கு மாப்பிள்ளை அழைப்புக்குப் போகவேண்டும். பத்து பதினைந்து ரூபாயில் ஒரு பரிசு கொடுக்க பத்து நாட்களாகவே கஜகர்ணம் போட்டும் முழுசாக ஒரு ரூபாய் கிடைக்கவில்லை. கேட்காத இடம் பாக்கியில்லை.

இந்த சமயம்தான் குழந்தையின் கை காப்புக்கள் என் கண்களில் பட்டன.

"ராஜீ கலியாணத்துக்குப் போக வேண்டாமா?"

"ஆமாம். பரிசுக்கு ஏதாவது வழி செய்தீர்களா?"

"ஒன்றுமே கிடைக்கவில்லை. சேட்டிடம் கூட பதினைந்து ரூபாயில் டம்ளர் கொடு, ஒரு வாரத்தில் சம்பளம் வந்ததும் கொடுக்கிறேன் என்று கரடியாகக் கத்திவிட்டேன் பலிக்கவில்லை."

"அப்போது வெறும் கையுடன் போவதாக உத்தேசமா?"

"எனக்குப் புரியவே இல்லை."

"இன்று சாப்பிடுவது அவர் சாதம். எப்பவோ ஒரு தடவை

அவர் வீட்டில் விசேஷம். அதற்கு கொடுக்கக்கூட நமக்குவிதியில்லை."

"உனக்குச் சம்மதமானல் ராஜீ."

"ஏன் நிறுத்தி விட்டீர்கள். சொல்லுங்கள்."

"ஒரு பொட்டு தங்க நகையோ திருகாணியோ கூட உன்னிடம் கிடையாது. வெள்ளி ஸ்பூன்கூட நம்மிடம் கிடையாது. குழந்தை கைக் காப்புக்கள்" நான் முடிக்க வில்லை.

"குழந்தை கை காப்புக்களா?" என் மனைவி திடுக்கிட்டாள்,

"இதை விட்டால் வேறு வழி யில்லை."

"என் அண்ணு கடன் உடன் வாங்கி முதல் முதல் பிரஸவத்துக்கு வந்து விட்டுப் போகும் போது குழந்தையை மூளியாக அனுப்பக் கூடாது என்று இருபது ரூபாயில் இரண்டு காப்பு மெல்லியதாக அடித்துப் போட்டான். நம்ம தரித் திரம் அதில் கை வைப்பதா? மனசை என்னவோ செய்கிறதே!"

"பின்னடி பண்ணிப் போட்டு விடலாம்."

"நமக்கு அலை எப்போது ஓய் வது; எப்போது பண்ணிப் போடு வது: வேறு வழியில்லையா?"

"கலியாணத்திற்குப் போகாமலே இருந்து விடுவதுதான்."

"சரி, காப்புக்களை விற்று விடுங் கள். என்ன செய்வது? நாம் சாப் பிடுவது அவர் சாதம்."

காப்புக்களை கழற்றி கொடுத் தாள்; நீர் நிறைந்த கண்களுடன்.

என் மனது நெகிழ்ந்து விட்டது

என்ன செய்வது; வேறு வழி?

காப்புக்களை வாங்கி அலமாரியில் வைத்துவிட்டுக் கடைக்குப் புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந் தேன்.

"பாலகுரு" வாசலிலிருந்து குரல் கொடுத்தபடி உள்ளே வந் தார் பெரியவர்.

"மாப்பிள்ளை அழைக்க மாலைக் காரனுக்குச் சொல்லி யிருந்தேன் வரவில்லை. நீயேன் இன்னும் வரவில்லை. உடனே புறப்படு எங்கே உன் மனைவி? கூப்பிடு" என்ருர்.

"நீங்கள் போங்கள். ஒரு முக் கிய காரியம். அரைமணியில் உங் கள் பின்னல் வந்து விடுகிறோம்" என்றேன்.

"அப்படி என்ன முக்கிய காரி யம் உடனே புறப்படு. போய் உன் மனைவியைத் தயார் படுத்து" என்று சொல்லிக் கொண்டே அங் கிருந்த ஸ்டூலில் உட்கார்ந்தார்.

வேறு வழியில்லை.

மாப்பிள்ளை அழைப்புக்கும் போய்விட்டு இரவு திரும்பி வந்து காப்புக்களை எடுத்து போய் விற்று விட்டு ஒரு டம்ளர் வாங்கி வர லாம் என்று தீர்மானித்து அடுக் களைக்குப் போய் மனைவியை துரி தப் படுத்தினேன்.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்த தும் வீட்டுக்கு வந்துபார்த்தால் அல மாரியில் காப்புகளைக் காணோம். திடுக்கிட்டேன். வீடு முழுவதும் தேடிவிட்டோம் காணோம். அலமாரி யில் தானே வைத்தோம். அல மாரிக்குப் பூட்டு இல்லை. எலி உபத் திரவும் ஜாஸ்தி எங்கு கொண்டு போய் போட்டதோ!

குழந்தையையும் வஞ்சித்து காப்புக்களை விற்கப்பார்த்தும் காப் பும் கெட்டுவிட்டது. பரிசும் கொடுக் கப்படவில்லை.

முகம் செத்துவிட்டது. இருந்த ஒரு ஸோர்ஸும் பணல் ஆகி விட்டது.

கலியாணத்தில் வந்த பரிசுகள் கணக்கு வழக்கில்லை. ஆனல் அவ ரால் ஆளாக்கப்பட்ட நான் குற்ற வாளி மாதிரி நின்று கொண்டிருந் தேன்.

போகட்டும் உடல் சேவை யாவது செய்யலாம் என்று என் மனைவியும் நானும் ஆடி ஓடி வேலை செய்தோம்.

மறுநாள் சம்மந்திகள் ஊருக்குப் போய்விட்டார்கள்.

அவரிடம் விடை பெற்றுக் கொள்ளப் போனேம்.

"பாலகுரு இந்தா இதை குழந்தைக்கு என் கலியாணப் பரிசாகப் போடு" என்று ஒருஜோடி புது காப்புக்களையும் வளைகளையும் கொடுத்தார்.

இரண்டு பவுன் இருக்கும்.

திடுக்கிட்டோம்.

"ஸார், எதற்கு ஸார் இப்பொழுது. பார்க்கப் போனால் நாங்கள் அல்லவா பரிசு கொடுத்திருக்க வேண்டும். எங்கள் தரித்திரமும் துரதிர்ஷ்டமும் எங்களைத் தடுத்து விட்டது"

"பாலகுரு என்ன அப்படிச் சொல்லுகிறாய். உன் அருமைக் குழந்தையின் குஞ்சுக் கைகளில் இருந்த காப்புக்களை விற்றாவது பரிசு கொடுக்கவேண்டும் என்று நீ தீர்மானித்து கை காப்புக்களைக் கழட்டினாய். அதுவே நீ லட்ச ரூபாய் பரிசு கொடுத்த மாதிரி. யாருமே தன் குழந்தையின் நகைகளில் கை வைக்க மனது கஷ்டப்படுவார்கள். ஆனால் நீயோ என் பொருட்டு குழந்தை நகைகளை கழட்டி எனக்குப் பரிசளிக்க முன் வந்தாய். என்னிடம் உனக்கு எவ்வளவு அன்பு இருக்கிறது என்பதைப் பார்க்க என் மனம் மகிழ்கிறது. அந்த உன் அன்பு விலை மதிப்பற்றது.

அன்று உன்னைத் தேடி வந்தேன். ரேழியில் வரும்போது நீயும் உன் மனைவியும் குழந்தை நகைகளை விற்று எனக்குப் பரிசளிக்க முன் வந்தது காதில் விழுந்தது. திடுக்கிட்டேன். மனம் பொறுக்காமல் ரேழியில் நின்றேன். நீ அதை அலமாரியில் வைப்பதையும் பார்த்தேன்.

உள்ளே வந்தேன். உன்னை புறப்படும்படி சொன்னேன். நீ உள்ளே போனபோது நீயறியாமல் காப்புக்களை எடுத்து வந்துவிட்டேன்.

இந்தா குழந்தையின் காப்புக்கள்.

நீ எனக்கு? பரிசு அளிக்க வேண்டுமா?

"உன் அன்பே விலை மதிப்பில்லாத பரிசு" அவர் முடித்து விட்டார்.

★

என்னால் பேசவே முடியவில்லை.

பிறருக்கு உதவி செய்வதற்கே சிலர் உலகில் பிறக்கிறார்கள். அது அவர்கள் ஏகபோக உரிமை.

அந்த உரிமையை என்னைப் போன்றவர்கள் பறிக்க முடியாது.

★

இன்றே விஜயம் செய்யுங்கள்

மதுரையில்
1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.
ஒரிஜினல்
நாகப்பட்டணம்
நெய் மிட்டாய் கடை
இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)
Prop: வி. வெங்கட்ராமய்யர் சன்.
வி. அனந்தநாராயணன் மதுரை.

இரும்பின் கண்ணீர்

"கிருஷ்ணா"

அன்று 'ராஜேந்திர விலாஸ்' பங்களாவே அல்லோல கல்லோலப்பட்டது: ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுச்சிகள் அடுக்கடுக்காக பொங்கும் அலைகளைப்போல பொங்கி ஆர்ப்பரித்தன. ஆயினும் வெளிக்கு அமைதியாக இருப்பது போலவே நடித்தார்கள். எரிமலை வெடிக்க ஆரம்பிக்கும் முன்பு உள்ளூர குமரிக்கொண்டிருப்பதைப் போன்றிருந்தது அந்த நிலை. இத்தனைக்கும் காரணம் அன்று காலை வந்த ஒரு கடிதம்தான். கடிதம் என்றால் அது பகிரங்கமாக தபால் இலாக்காவினால் டெலிவரி செய்யப்பட்ட கடிதமல்ல.—ரகசிய கடிதம்—அதுவும் வெறும் மொட்டைக் கடிதம்—அதிலும் நான்கே வரிகள்.

இன்றிரவு வீரபாகுத்தேவன் தங்கள் வீட்டை சூறையாட வருகிறான். தகுந்த பாதுகாப்பு எடுத்துக்கொள்ளவும். அலட்சியமாக இருக்கவேண்டாம்.

என்று எழுதப்பட்டிருந்தது அக் கடிதத்தில்.

காலையில் சமையல்கார சங்கு போட்டுக்கொடுத்த முதல் தரமான காபியையும் உதிரும் மல்லிகைப் பந்து போன்ற இட்டிலிகளையும் வயிறார மனமாற சாப்பிட்டுவிட்டு திருப்தியானதொரு ஏப்பமுடன் வாசல் வராந்தாவில் உள்ள சாய்மான நாற்காலியில் வந்து சாய்ந்தார் ராஜேந்திரம் பிள்ளை. அதே சமயத்தில் ஒரு எட்டுவயது சிறுவன்—எங்கிருந்து வந்தான்? எப்படி வந்தான்? என்று யோசிப்பதற்குள்ளேயே, வந்தான், தந்தான், போனான், என்றபடி நேரில் வந்து ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்து விட்டு மின்னல் வேகத்தில் வீதியில் பாய்ந்து கும்பலோடு கும்பலாகக் கலந்து விட்டான். மறுமுறை அவனை அடையாளம்கூட காண்பது அரிது. அத்தகைய மின் வேகத்தில் நடைபெற்று விட்டது அச்சம்பவம்.

இவ்வாறு எதிர்பாராத விஜயம் செய்த அந்தக் கடிதத்தை படித்ததும் சற்று முன்பு ராஜேந்திரம் பிள்ளை சாப்பிட்ட எட்டு இட்டலிகளும் ஒன்றரை சேர் காபியும் ஒரு சணத்தில் பஸ்மீகரமாகிவிட்டது.

"யோ...வ்... இங்கே வாயேன்!" என்று அலறியேவிட்டார். யோவ்—அதுதான் அவரது மனைவி நாகம்மாள், அலுங்க குலுங்க, அலங்கரித்த தேர்போல—நகை பூத்த

மரமாக அவர் முன் வந்து நின்றாள். வயதுக் கேற்ற கம்பீரத்துடன் லக்ஷ்மீகடாக்ஷமும் ஒளி வீசியது அவள் முகத்தில்.

வீரபாகு என்ற பெயரைக் கேட்டால் ஒரு சின்னஞ்சிறு குழந்தை கூட தன் இதயத்தைக் கழட்டி இரும்பு 'பெட்டிக்குள் வைத்து விடும். அத்தனை பயம். அப்படிக் கொத்த வீரபாகு தங்கள் பங்களாவிற்கே விஜயம் செய்யப்போகிருன் என்ற செய்தியை யறிந்தால் எப்படியிருக்கும் ?

செய்தியை காதில் வாங்கிக் கொண்டதும் நாகம்மாளின் நூற்றிப்பதினறு பவுண்ட் நிறையுடலும் ஆடி காற்றில் அகப்பட்ட துரும்பு போல நடுங்கியது.

"பயப்படாதே நாகம்! விஷயம் ரகசியமாகவே இருக்கட்டும்! பெரிய பையன் துரையிடம்மட்டும் சொல்லி வை. சின்னவனே உன் தலமயன் வீட்டுக்கு அனுப்பிச்சுடு. மருமகளேயும் பேரக்குழந்தைகளே யும் அவங்க பிறந்த வீட்டுக்கு இப்பவே காரிலே அனுப்பிச்சுடு. நீயும் அடுத்த தெருவுக்குப்போயிடு. எல்லோரும் போட்டுக்கற மட்டும் நகை நட்டுக்களே போட்டுகிட்டே போயிடுங்க. நான் எதுக்கும் இன்ஸ்பெக்டரை கலந்துகிட்டு வரேன்! மூச்சுவிடாதே. நமக்கு இந்தக் கடிதம் வந்த விவரமோ நாம் எடுத்துக்கொள்ளும் முன்னேற்பாடுகளோ, காற்றுவாக்கில் வீரபாகுவிற்கு எட்டினுலும் போதும்! நமக்கெல்லாம் மேலோகத்திற்கு டிக்கட் 'ரிஸர்வ்' பண்ணிடுவான்! உம். உம். ஜாக்கிரதை! என்று தம் மனைவியின் காதருகில் கிசு கிசுத்தார் அவர்.

"நல்லாயிருக்குது! நீங்க சொல்றதெல்லாம் சரிதான். ஆனு நான் மட்டும் உங்களே விட்டுட்டுப் போமாட்டேன்! ஓங்களுக்கு ஆவுறது எனக்கும் ஆவட்டும்!" என்ருள் அவள். பயாநகமும் பாசமும் மேலிட அவள் குரல் இழைபோல நடுங்கியது.

"அட சீ! பொம்பளேங்கன்னு ரேடியோவிலே விளம்பரம் கொடுக்கற மாதிரின்னு இருக்கு. யோவ்! சத்தம் கித்தம் போட்டுத் தொலேக்காதே! பதிபக்தியெல்லாம் பொழச்சுக் கெடந்தா பிறகு வச்சுக்கலாம். முதல்லே நான் சொன்னபடி கேப்பியா!... சரி, சரி, போ!..." என்று உறுதியான குரலில் கூறி விட்டு எழுந்த ராஜேந்திரம்பிள்ளை உடை உடுத்துக்கொண்டு கையில் வாக்கிங் ஸ்டிக்குடன், காரில் ஏறிக்கொண்டு புறப்பட்டார். கார் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி பறந்தது.

இன்ஸ்பெக்டர் ரஞ்சிட் சிங்கும் ராஜேந்திரம் பிள்ளேயும் அரைமணி நேரம் ரகசியமாக சம்பாஷித்தனர். இன்ஸ்பெக்டர் ரஞ்சிட்சிங் அருமையான திட்டம் ஒன்று வகுத்தார் வீரபாகுவை பிடிக்க. வெகு காலமாகவே போலீஸ் இலாகாவின் முதுகில் தோலுரித்து உப்புத் தடவும் பேர்வழியாக திமிர் கொண்டு திரிந்தான் வீரபாகு. அப்பேர்ப்பட்டவன் வலுவில் வந்து மாட்டிக்கொள்ள வகையேற்படும் பொழுது அந்த வாய்ப்பை தவற விடாமல் திடமான வலேயாக வீச திட்டமிட்டுவிட்டார் ரஞ்சிட்சிங்.

அன்றிரவு.

ராஜேந்திர விலாஸம் பங்களாவை சுற்றி 'மப்டி'யில் நிறைய போலிசார் உலாவினர். எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அவர்கள் நடந்து கொண்டனர். உள்ளுக்குள் ஒருவன் தோட்டத்திற்கு தண்ணீர் இறைத்தான். ஒருவன் பாத்தி வெட்டினன். ஏன்? வெளியாருக்கு கூட எள்ளளவு சந்தேகமும் உதிக்காவண்ணம் ராஜேந்திரம் பிள்ளேயின் மனைவி வேஷத்திலும் மருமகள் வேஷத்திலும் கூட இரண்டு அழகிய போலீஸ்காரர்கள் உலாவினர். மனைவியையும் மருமகளேயும்தான் அவர் வலுக்கட்டாயமாக அனுப்பித்து விட்டாரே! நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓரிரு வேலேக்காரர்களேயும் ராஜேந்திரம் பிள்ளையையும் தவிர

மற்றவர்கள் அனைவரும் போலீஸ் தான்.

ராஜேந்திரம் பிள்ளை தவித்துக் கொண்டிருந்தார். "அந்தப்பய சொக்கநாதம் பக்கத்திலிருந்தானனை இவ்வளவு பயமே ஏற்படாது! வீராதி வீரன் அருச்சுனனென்று லும் அவனுக்கு தகும். அஞ்சு நாள் லீவுலே ஊருக்கல்ல போயிருக்கான் பயமவன்! என்று அலுத்துக் கொண்டார் ராஜேந்திரம் பிள்ளை.

சொக்கநாதம் அவரது அந்தரங்க காரியதரிசி, ராஜேந்திரம் பிள்ளை கண்ணால் ஜாடையிடுவதை உடனே கைகளால் செய்து முடித்து விடுவார் அவர். அவ்வளவு விசுவாசமானவர், தன் தாய்க்கு உடல் நலம் சரியில்லை என்று தந்தி வந்ததால் அவர் ஊருக்குப்போய் நான்கு நாட்களாகின்றன. இந்நேரம் அவர் தாயார் உயிருடன் இருக்கிருளோ அல்லது பரலோகம் போய் விட்டாளோ? யார் கண்டது? இந்த மாதிரியான நிலையிலா இங்கேயும் இந்த தொந்திரவு வந்து சேர வேண்டும்.

கடிகாரத்தை அடிக்கொருதரம் பார்ப்பதும் ஏதாவது ஒரு சிறு ஓசை கேட்டாலும் நடு நடுங்குவதுமாக விஞடியை ஒரு யுகமாக பீதியுடன் ஒழித்து வந்தார் ராஜேந்திரம் பிள்ளை.

∴ ∴ ∴

ஏறக்குறைய ராஜேந்திரம் பிள்ளையின் நிலையில் தான் இருந்தாள் மரகத வடிவும். கிழையூர் கிராமத்தின் ஒரு ஒதுக்குப்புறமான பகுதியில் உள்ள ஒரு அழகிய சின்னஞ் சிறு வீட்டில் இருந்தாள் அவள். அவளும் அவளது கணவன் பலவேசம் பிள்ளையும் நடத்திவரும் குடித்தனத்தை பார்த்தாலே பசி தீரும் என்று கிழையூர் கிராமவாசிகள் சொல்லிக் கொண்டனர்.

காலம் என்பது ஒரே கதியில் தான் இயங்குகிறது. ஆனல் மனிதர்கள் தங்கள் இன்ப-துன்ப-ஆசா பாசா நிலைகளுக்கேற்ப வேகமாகவோ மெதுவாகவோ செல்வதாக அதை குறை கூறுகிருர்கள். ஆயினும் அது என்னமோ மனிதர்களையோ அவர்களது உணர்ச்சிகளையோ பொருட்படுத்துவதாக தெரியவில்லை.

மரகத வடிவு நேற்று வரையிலும் தனக்கு நல்ல காலம் என்றுதான் எண்ணியிருந்தாள். டவுனில் மண்டிக்கடையில் ஒழிந்தபொழுதில் கணக்கெழுதுவதாக வேலை பார்த்துவந்த பலவேசத்திற்குச் சம்பளம் மிகக்குறைவென்றாலும் அவள் மீது அவன் அள்ளி வீசிய அன்பு ஒன்றும் குறைந்ததல்ல. ஒரு பெண்ணுக்கு எது முக்கியம்? கண்ணைப் பறிக்கும் ஆபரணங்களும் வண்ண ஆடைகளும், எண்ணத் தொலையாத நிதியும் வேண்டுமா? அல்லது கணவனின் அன்பு கனிந்த கடைக்கண் பார்வை வேண்டுமா? என்றுல் கண்டிப்பாக பின்னதைத்தான் தேர்ந்தெடுப்பாள் பெண். இந்த இன்பம் நிறைந்திருந்தது மரகத வடிவின் வாழ்வில். எனவே உயர் ஜாதிப்புரவிகளினுல் இழுக்கப்படும் ரதம்போல இன்பக் குதிபோட்டுக் கொண்டு சென்று கொண்டிருந்தது அவளது வாழ்வு.

நேற்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு தான் அவளுக்குத் தெரிந்தது. அந்த ரஸ்தாவின் அடியில் எத்தனை புதை குழிகளும் பயங்கரங்களும் இருக்கின்றன என்பது. ஊருக்கு நல்லவன் பலவேசம். ஆனுல் அவள் உள்ளத்திற்கு? செங்கரும்பாக இனித்தவன் பேய்க்கரும்பாக கசந்த விந்தை?—— நடந்தது இது தான்.

இரண்டு மூன்று தினங்களாக பலவேசம் மண்டிக்கடைப் பக்கம் போகவேயில்லை. ஜுரம் என்று போர்த்திக்கொண்டு படுத்திருந்தான். வலுவும் வனப்பும் மிக்க அவனது உடல் படுக்கையில் கிடப்பதைக்கண்டு புழுப்போல துடித்து விட்டாள் மரகத வடிவு. அவளது துடிப்பிற்காக வைத்தியரும் ஏதேதோ மருந்துகளை கொடுத்து விட்டு, ரூபாய்களை வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டார்.

அன்றிரவு.—

பலவேசம் நார்கட்டிலில் படுத்திருந்தான். அதனடியில் மரகதவடிவும் படுத்திருந்தாள். தூக்கமும் விழிப்புமற்ற இடைநிலையில் இயங்கிக் கொண்டிருந்தது அவளது உணர்வு. அதுசமயம் புழக்கடையில் பெருச்சாளி உறுமுவதுபோல ஓசை கேட்டது. பெருச்சாளியாகத் தானிருக்கும் என்று அவள் எண்ணி எழுந்திருக்க முயன்றாள். அதற்குள் பலவேசம் எழுந்து விட்டான். எழுந்தவன் மரகதவடிவை நன்கு குனிந்து பார்த்தான். கனவு போல தோன்றியதாயினும் ஒரு விதமான உள்ளுணர்வு அவளை எச்சரித்தது. அவனது முகத்தில் தேங்கி நின்ற பாவனை இதுகாறும் அவள் காணாததொரு புதுமையாக, பீதியெழுப்பும் வகையில் இருந்தது. ஒரு விதமான தைரியமும் நிதானமும் பொருந்திய நிலையில் கிடந்தாள்—இல்லை—அப்படி நடந்தாள்.

மரகதவடிவு நன்கு உறங்குகிறாள் என்பதை சோதனைசெய்து திருப்தியுற்ற பலவேசம் மெள்ள மெள்ள பூனையினும் மென்மையாக அடியெடுத்து வைத்து புழக்கடைப் பக்கம் சென்றான். புழக்கடைக் கதவு திறக்கப்படும் ஓசையும் தொடர்ந்து இரண்டு குரல்கள் கிசுகிசுக்கும் சப்தமும் மரகதத்தின் காதுகளில் ஒலித்தது. இல்லாத சந்தேகங்கள் எல்லாம் உள்ளத்தை குழப்ப மெள்ள படுக்கையைவிட்டு எழுந்த அவள் புழக்கடை கதவண்டை வந்து ஒளிந்து கொண்டாள்.

'கரு'கும் மென்ற இருட்டில் உருவம் தெரியாவிடினும் வேறு ஒரு ஆடவனோடு தன் கணவன் பேசுவதை அவளால் உணர முடிந்தது. மிகவும் பேசினார்களாதலால் தன் கணவனின் குரலை மாற்றானின் குரலிலிருந்து பிரித்தறிய முடியவில்லை அவளுக்கு. ஆனால் சில வார்த்தைகள் மட்டும் அறை குறையாகக் காதில் பட்டன.

'ரஜேந்திரம் பிள்ளை பங்களா!"



"முப்பது பேர் . . . . போதும்!"

"ஆம் / ...நாளைக்கு......வீரபாகு நினைத்தால்......

"எவ்வளவு காலம் பொறுத் திருப்பது ?......"

வீரபாகு...! அடேயப்பா ! எப் பேர்ப்பட்ட கொள்ளைக்காரன் அவன். அவனு தன் கணவனோடு பேசுகிறான்!... நம்ப முடியவில்லை அவளால். ஒரு வேளை தம் கண வனே வீரபாகுவாக இருக்குமோ ?

"சே ! சே ! அப்படியிருக்காது. பலவேசம் எவ்வளவு நல்லவன்"

எப்படியோ ஒரு வினாடிக்குள் தன் மனதை ஒரு நிலைப்படுத்திக் கொண்ட அவள் மறு நிமிஷமே தனது படுக்கையில் வந்து படுத்துக் கொண்டுவிட்டாள். தன் கணவன் தான் வீரபாகுவோ, அல்லது வந்த வன் தான் வீரபாகுவோ, எப் படியோ வீரபாகுவிற்கும் தன் கண வனுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டுவிட்டாள் ! ஆ !...கடைசி யில் தன் கணவன்-கடைசியில் ஒரு கொள்ளைக் கூட்டத்தானு ? என்று எண்ணும்பொழுது இதுகாறும் அவனது அன்பைத் தாங்கிநின்ற நிறை இதயம் தூள் தூளாக சிதறு வதை உணர்ந்தாள். அந்த வேத னையினூடே ராஜேந்திரம் பிள்ளை யின் நினைவும் வந்தது. பாவம் ! ஊருக்கு உபகாரி. உழைத்து முன் னுக்கு வந்தவர். அவர் திரட்டிய செல்வம் ஒரு நாளும் துருப்பிடிக் காது. ஆனுல், அது கள்ளர்கள் கையில் சிக்காமலிருக்க வேண் டுமே !...அது மட்டுமா !... கொள் ளையைத் தொடர்ந்து கொலை பாதக மும் நிகழலாம்...

நினைக்க நினைக்க பயங்கரமாக விசுவரூபமெடுத்தது. கணவனைக் காட்டிக் கொடுப்பதா ? அல்லது அந்த ராஜேந்திரம் பிள்ளையின் குடும்பம்நாசமாய் போகட்டும்என்று சும்மா இருந்து விடுவதா ? பிரச் னைகள் இரண்டும் மரகதவடிவின் சகல உணர்ச்சிகளையும் மீறி ஒன்றோ டொன்று கடும்போர் புரிந்தன. பலவேசம் திரும்பவந்து படுத்ததை உணர்ந்ததும் உணராதவள் போல கட்டையாகக் கிடந்தாள்.

பொழுதும் விடிந்தது.

மரகதம் உறுதி பூண்டு விட்டாள். நடப்பது நடக்கட்டும் ! என்று எண்ணி, தான் நினைத்ததை செய லிலும் காட்டிவிட்டாள்.

"துரோகி!" என்றது ஓர் மனம். "ஒரு குடும்பத்தை வாழவைத்து விட்டாய். நீ ஒரு தியாகி!" என்று பாராட்டியது ஒரு மனம்.

∴ ∴ ∴

வினுடிக்கு வினுடி அவளது துடிப்பு அதிகரித்தது. ஆயினும் வழக்கம்போல கடமைகளைச் செய்து வந்தாள். அதோடு பல வேசத்தையும் ஒரு கண் கவனித்து வந்தாள்.

மாலை ஆறு மணிக்குப் பலவேசம் அவளிடம் "சிவபுரத்தில் புதிதாக ஆடும் சர்க்கஸைப் பார்த்துவிட்டு விடிய வருகிறேன்" என்று கூறினன்.

"ஜுரமாயிருந்து இன்னும் தலைக்கு ஜலம் விடவில்லையே," என்று அவள் தடுக்கவில்லை. அவ ளுக்குத்தான் தெரிந்து விட்டதே அவன் போகுமிடம்.

பலவேசம் போய்விட்டான்.

நேரம் ஆக ஆக, ராஜேந்திரம் பிள்ளையின் இதயம் அதன் நிலையி லிருந்து நழுவி விடுவதுபோல துடி துடித்தது. கடிகாரத்தில் மணி பன்னிரண்டரை அடித்ததும் நாலு புறங்களிலும் ஒருவித சலசலப்பு ஏற்பட்டது. ராஜேந்திரம் பிள்ளையும் இன்ஸ்பெக்டரும் காவலாக இருந்த இரும்புப்பெட்டியின் அறைக்கதவு படீரென திறந்து கொண்டது.

கரிய பூதம் போன்ற உருவில் கரிய முகமூடியும் அணிந்து கையில் பிச்சுவாவை ஓங்கியபடியே நின் ருன் வீரபாகு. முகமூடிக்குள் இருந்து ஒளிவீசிய அவனது பயங் கரக் கண்கள்....

"இ...ன்ஸ்...பெ...க்டர்..."என்று உளறினர் ராஜேந்திரம் பிள்ளை.

அவருக்கு மயக்கம் வந்துகொண்டிருந்தது.

ஒரு வினாடிதான், சொல்லிவைத்தாற்போல மின் வேகத்தில் இன்ஸ்பெக்டரின் கையிலிருந்த குறுந்தடி அந்த கத்தியின்மேல் வந்து விழுந்தது. கத்தி கீழே விழுந்ததும் வீரபாகு மறுவினாடியே இன்ஸ்பெக்டரின் மற்றொரு கரத்தை, துப்பாக்கியை எடுக்க வொண்ணாவிதம் பாய்ந்து பிடித்துக்கொண்டு விட்டான். இருவருமாகக் கட்டிப் புரண்டனர். இருவரும் சளைக்கவில்லை. எதிர்பாரா வண்ணம் இன்ஸ்பெக்டரின் மோவாயில் தனது முஷ்டியால் ஒரு குத்து விட்டான் வீரபாகு. எதிர்பாராத அந்த அடியினால் கைப்பிடி நழுவவே, மின்னலைப்போல நழுவி மறைந்தான் வீரபாகு. அவனது முகமூடி மட்டும் எப்படியோ இன்ஸ்பெக்டரிடம் சிக்கிக்கொண்டு விட்டது.

"விடாதே! பிடி!... சுடு! சுடு!... என்று கூச்சல் கிளம்பியதுதான் மிச்சம். திருடர்களில் இரண்டொருவரைத் தவிர மற்றவர்கள் தப்பி ஓடிவிட்டனர். அதுசமயம் தான் எதிர்பாராத விதமாய் பையும் கையுமாக வாசலிலிருந்து உள்ளே நுழைந்தார் காரியதரிசி சொக்கநாதம்.

"என்ன! என்ன! இங்கே என்ன கலாட்டா?" என்றுபதறியபடி ஓடியே வந்த சொக்கநாதரை பயத்தினால் பிரமித்துப் போயிருந்த ராஜேந்திரம் பிள்ளை அப்படியே தழுவிக்கொண்டு வீட்டார்.

நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் கூறிய ராஜேந்திரம் பிள்ளை "நல்லவேளை, இந்தக்கடிதம் மட்டும் இன்று கிடைக்காமலிருந்திருந்தால் எனக்குப் போலீஸ் பந்தோபஸ்தும் கிடைத்திருக்காது என் சொத்துக்கள் யாவும் பறிபோயிருப்பதோடு என் குடும்பமே அழிந்து போயிருக்கும். இதை எழுதியவரும் இனஸ்பெக்டரய்யாவும் மகராசர்களாக வாழவேண்டும்."- என்று மனமுருகக் கூறினார் ராஜேந்திரம் பிள்ளை.

மேஜைமீதிருந்த அந்தக் கடித நறுக்கை வெகு ஆவலுடன் எடுத்து படித்தார் சொக்கநாதம்.

"எல்லாம் நல்ல வேளைதான். இல்லாவிட்டால் வீரபாகு வந்தும் இப்படி தப்ப முடியுமா? நான்கூட இரண்டுபேரை நன்றாக உதை தின்னச் செய்தேன் ......பாருங்களேன் நாளைப் புறப்படுவதாக இருந்தேன். இன்றே புறப்பட்டதும் அதிலும் பன்னிரண்டேகால் மணி ரயிலுக்கு நான் வந்து சேர்ந்ததும் தெய்வச்செயல் இல்லையா?" என்றார் சொக்கநாதம்.

ராஜேந்திரம் பிள்ளையும் அதை ஒப்புக்கொண்டார்.

திருடர்களைத் துரத்திச் சென்ற ஜவான்கள் போக மீதிப்பேரை பங்களாவின் நான்கு புறமும் காவல் வைத்துவிட்டு, இன்ஸ்பெக்டர் ரஞ்சிட்சிங் வெகு அவசரமாக

"என் ஸார், என்னை உங்களுக்குத் தெரிகிறதோ? மூணு மாசத்துக்கு முந்தி உங்ககிட்டே ஒரு பத்து ருபாய் கைமாத்து வாங்கிண்டு போயிருந்தேன்! ஞாபகம் இருக்கா?"

"ஆமாம் ஸார்! ரொம்ப சந்தோஷம் அதைத் திருப்பிக் கொடுக்கத்தானே வந்தேள்."

"இல்லே, அவசரமா இன்னொரு பத்து ருபாய் தேவையாயிருக்கு. முன்ன மாதிரி வாங்கிக்கலாம்ன்னு வந்தேன்!"

ராஜேந்திரம் பிள்ளையின் அறையினுள் நுழைந்தார். அப்பொழுது தான் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட சொக்கநாதரும் இன்ஸ்பெக்டரும் வாயிற்படியருகில் எதிரும் புதிருமாக சந்தித்துக் கொண்டனர்.

மறுகணம் இன்ஸ்பெக்டர் தனது வாயில் ஊதலைவைத்து ஊதினர். திமுதிமுவென நான்கு புறமும் போலீஸ் சூழ்ந்து விட்டது. சொக்கநாதத்தின் கரத்தில் ரஞ்சிட்சிங் வெற்றிப் பெருமிதத்துடன் விலங்கை மாட்டினர்.

"என்னங்க? அவர் திருடனில்லையே! என் காரியதரிசி"... என்று ஓடி வந்து இன்ஸ்பெக்டரை பிடித்துக்கொண்டார் ராஜேந்திரம்.

"உம்!...காரியதரிசி!...அதோடு ஒரு கை தேர்ந்த நடிகனும்கூட. மிஸ்டர் ராஜேந்திரம் பிள்ளை! இந்த காலத்தில் பகைவனைக்கூட நம்பலாம். நண்பனை நம்பக்கூடாது. தெரியுமா? இதோ பாருங்கள்! என, சொக்கநாதம் பக்கம் திரும்பி, "ஐயா! வீரபாகு அவர்களே! ராஜேந்திரம் பிள்ளையின் அந்தரங்க காரியதரிசியாக நடித்து உளவறிய சொக்கநாதம். மணவியை ஏமாற்ற மண்டிக்கடைகுமாஸ்தா பலவேசம்! அந்தரங்கத்தில் பக்காத்திருடன்!... பெயர் வீரபாகு!... என்ன! அப்படித்தானே!" என்று வீரம் முழங்க கர்ஜித்தார் ரஞ்சிட்சிங்.

"இன்னும் அப்படியே இருந்திருப்பேன்! ஆனல் உங்கள் வஞ்சக வலைக்கு ஒருத்தி கயிறு திரித்துக் கொடுத்து இருக்கிருள்! நான் பிசகி விட்டேன்! உம்!..."என்று உறுமினன் வீரபாகு.

"என்ன இது? என் சொக்கநாதமா வீரபாகு?" வியந்தார் ராஜேந்திரம்.

"நம்ப முடியவில்லையா உம்மால்! முதலிலிருந்தே கேளும். என் பிடியிலிருந்து இவன் தப்பியவுடனேயே நான் இவனை. மறுவழியில் பங்களாவை சுற்றிச்சென்று தொடர்ந்து கவனித்தேன். நான் கவனிப்பதை அறியாத இவன் ஓர் செடி மறைவில் போய் இந்த சிக்கியத்தாடியையும் மீசையையும் ஒட்டவைத்துக் கொண்டு சொக்கநாதமாக மாறினன். ஏனெனில் அவனது முகமூடியை நான் பறித்துக்கொண்டு விட்டேனல்லவா! அதோடு வீட்டைச் சுற்றிலும் பலமாக காவல் வேறு போட்டுவிட்டேன். நான் உண்மை உருவைக்கண்டு வெளிப்படுத்தி விடுவேனே என்ற பயம்,— என்னை எப்படியாவது ஏமாற்றி வெளியேறிவிடவேண்டும் என்ற எண்ணம்.

எல்லாமாக அவனை வேஷம் போடச் செய்தன. கடைசியில் அந்த வேஷமே அவனை காட்டிக் கொடுத்துவிட்டது. சொக்கநாதமாக இவன் உள்ளே நுழைவதைப் பார்த்துவிட்டுத்தான் நான் தயாராக வந்தேன் அரெஸ்ட் செய்ய...... அதோடு அவன் மனைவியும்........

"நிறுத்தய்யா! உன் வீரப் பிரதாபத்தை! வஞ்சகத்தினல் பிடித்து விட்ட பெருமைக்குப் பிரமாத புகழ்ச்சி வேறு! அந்தக் காட்டிக் கொடுத்த துரோகிமட்டும் இப்பொழுது என் எதிரில் இருந்திருந்தால் தக்காளிப் பழம்போல பிழிந்து விடுவேன்......"என்று நெறித்தான் தனது இரும்புக் கரங்களை, விலங்குகள் சப்திக்க.

"அதற்கு அவசியமே இல்லை... எனக்கு நானே தண்டனை விதித்துக்கொண்டு விட்டேன்!" என்ற குரல் வாயிற்புறத்திலிருந்து கேட்டது.

மரகதவடிவுதான் பேசினள். தலைவிரி கோலமாக, மேல் மூச்சு வாங்க அவள் பேசினள்.

"நீங்கள் சர்க்கஸுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்ட உடனேயே நானும் புறப்பட்டு விட்டேன். சமீபத்தில் தான் ஒளிந்திருந்தேன். அத்தனை ஜவான்களும்கூட அறியாமல் எப்படியோ மிக சமீபத்தில் வந்து விட்டேன். முகமூடியுடன் வீரபாகுவாக நுழைந்த நீங்கள் முகமூடியில்லாமல் வெளியே வந்தவுடனேயே எனக்குத் தெரிந்துவிட்டது.

இன்ஸ்பெக்டரிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டேன்... ஒருவிதத்தில், நான் கடிதம் எழுதி கணவனைக் காட்டிக் கொடுத்தது துரோகம் தான்...கொடுமைகளே உருவான கணவனை மணந்து மர்ம வாழ்வு நடத்திய நான் உண்மை தெரிந்தும் காட்டிக் கொடுக்காமல் இருந்தால் தேசத்துரோகியும் ஆகிவிடுவேன். கொலைகளும் கொள்ளைகளுமே நான் பெறும் செல்வங்களாகிவிடும். இரண்டுவித கடமைகளின் இடுக்கிப் பிடியில் சிக்கிக்கொண்ட நான் என் கடமைகளில் ஒன்றை திருப்திகரமாக செய்து முடித்துவிட்டேன். ஆனல் அது மற்ருெரு கடமையின் படி மகத்தான துரோகமேயாகும். அதற்குப் பிராயசித்தமும் செய்து கொண்டு விட்டேன். கள்ளன் பெண்டாட்டி, என்றும் கைம்பெண் என்பார்கள். அந்த நிலை இனி எனக்கில்லை......... எதைச் செய்ய வேண்டுமோ அதை செய்து விட்டேன்.

இழுத்துப் பறித்துக்கொண்டு பேசினுள் மரகதவடிவு. பேச்சு முடியும் முன்னரே உடல் சாய்ந்து விட்டது. இன்ஸ்பெக்டர் திகைத்தார்.

சாய்ந்த அவளது உடல்! அந்த முகத்தில் விஷத்தினுல் ஏற்பட்ட கருமை படரவில்லை. கடமையின் தெய்வீகப் பிரகாசமே ஒளிர்ந்தது. அங்கிருந்த அனைவரின் கண்களிலும் நீர் சுரந்தது. தலை குனிந்து நின்ற வீரபாகுவின் காலடியிலும் சில கண்ணீர் சொட்டுக்கள்.

சந்தேகமில்லாமல் அது அவனது கண்ணீர்தான். அவனது இரும்பு இதயம்தான் பொடிந்து விட்டதே.

★

★ நாட்டியாலயா ★

[பரத நாட்டிய ஸ்கூல்]

பெண்களுக்கு மட்டும்

போஷகர் : **குமாரி வைஜயந்திமாலா**

சிறந்த ஆசிரியரைக் கொண்டு சாஸ்த்ரீய முறையில் நாட்டிய வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுகிறது.

★

விவரங்கட்கு :

நாட்டியாலயா,

C/o 'மாலா' ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

காலம் விடிந்தது!

வாசல் வரை சென்று வழி விட்டு விட்டுத் திரும்பினார் ராஜாராமய்யர். சமையல் அறை வாயிற்படியில் முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்க நின்றுகொண்டிருந்தாள் சௌந்திரம்.

"என்ன உறவு முறையெல்லாம் பலமாக இருக்கிறது போலிருக்கிறதே!" என்றாள் கடுகடுப்போடு.

ராஜாராமய்யர் முகத்திலே மெல்லிய புன்முறுவல் படர்ந்தது. "போடி! அசடு! ..." என்றார் செல்லமாகக் கடிந்தவாறு.

"அசடுதான் நான்! இல்லையென்றால் இந்த நிலையிலே இருப்பேனா?" என்று தேம்பினாள் சௌந்திரம்.

"இங்கே பார், சௌந்திரம், உனக்கு ஒன்றுமே தெரிய மாட்டேனென்கிறதே!......" என்றார் மீண்டும்.

"ஆமாம்!... எனக்கு ஒன்றும் தெரியவில்லை என்று சொல்லியே உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை என்பதை மறைத்து வருகிறீர்கள்!..." அதற்குமேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை. பொங்கி வந்த அழுகையை அடைக்க முன்றானையால் வாயைப் பொத்திக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

*

ராஜாராமய்யருக்கு இப்போது மறுபடியும் அதிர்ஷ்டம் திரும்பியிருக்கிறது என்று சொல்லலாம். அவரை விரோதியென்று பாவித்து ஒதுக்கியவர்கள்கூட குசலப் பிரச்னை கேட்க ஆரம்பித்தனர் 'உன் முகத்தில் இனி விழிப்பதில்லை' என்று சொன்ன மூத்த சகோதரன் கணபதி அவரைத் தேடி வந்து சௌக்கியம் விசாரிக்கிறார் என்றால் அதிர்ஷ்டம் திரும்பியிருக்கிறது என்பதில் தவறு ஒன்றுமில்லை. சாதாரணமாக ஒண்டுக் குடித்தனத்தில் இருந்து தொல்லை கொடுத்தார்கள் என்பார்கள். ஆனால், எதிர் வீட்டில் குடியிருந்து கொண்டு 'தெருவிலே வீட்டுக்கு எதிரில் குப்பையைக் கொட்டினாய், சாக்கடைத் தண்ணீர் தெருவிலே ஓடுகிறது' என்றெல்லாம் சண்டைபோட்டு வந்த சிதம்பரம் அய்யர்கூட அவரிடம் பவ்யமாக நடந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்.

இத்தனைக்கும் காரணம் இல்லாமல் இல்லை. இப்போது அவருக்கு ஆயிரம் ரூபாய் பணம் வருகிறது.

*

ராஜாராமைய்யர் எஸ்டேட் பள்ளிக்கூடம் ஒன்றில் தலைமை உபாத்தியாயராக இருந்து வந்தார். அந்த எஸ்டேட் வாரிசு பற்றி இரண்டு மூன்று பேர்களுக்குள் தகராறு இருந்து வந்தது. அவர்களுடைய சண்டையில் ஒரு நாள் திடீரென்று ராஜாராமய்யரை வேலைக்கு வேண்டாமென்று அனுப்பிவிட்டு, தங்களுக்குர் சாதகமாகத் தலையை அசைப்பவனை வேலைக்கு வைத்துக்கொண்டார்கள். ராஜாராமய்யர் சாது; தானுண்டு தன் காரியமுண்டு என்றிருப்பவர். வாரிசு சண்டையில் தலையிடுவதில்லை. அதனால் தான் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டனர்.

எவ்வித காரணமுமின்றி தன்னை வேலையிலிருந்து திடீ

"கார்த்திகேயன்"

ரென்று நீக்கியது தவறு என்றும் மறுபடியும் தன்னை வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது தகுந்த நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றும் கோரினார். இடையில், எஸ்டேட் வாரிசுப்போட்டியில் ஈடுபட்டிருந்தவர்கள் தகராறு முற்றிப் போய் விடவே, அரசாங்கம் தலையிட்டு ஒரு ரிஸீவரை நியமிக்க வேண்டியிருந்தது. அந்தத் தகராறு தீர இரண்டு வருஷ காலமாகிவிட்டது. வாரிசு சண்டை ஒருபடியாய் தீர்க்கப்பட்டதும், ராஜாராமய்யரின் கோரிக்கை விசாரிக்க எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவில் அவருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை, பிராவிடன்ட் பண்டு, கிராஜுடி ஆக மொத்தம் ஆயிரம் ரூபாய் தரும்படி தீர்ப்பாகியது.

ஆனால் இந்த இடைக்காலத்தில் அவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

கணபதிக்குத் தன் சகோதரனிடம் மிகுந்த பிரியம். அவன் கஷ்டப்படுவதைச் சகிக்காது தன் வீட்டிலேயே கொண்டு வந்து வைத்துக் கொண்டார்.

ராஜாராமய்யருக்கும் போதாத காலம் என்றுதான் சொல்ல வேண்டும். எங்கெங்கேயோ அலைந்தார். வேலை கிடைத்தால் தானே! ஏதோ இரண்டொரு வீடுகளில் 'டியூஷன்' சொல்லிக் கொடுத்து வந்தார். அந்த வரும்படி எந்த மூலைக்கு?

கணபதியின் சம்சாரம் விசாலம் ஒரு கிராதகி. அறுத்த காயத்துக்குச் சுண்ணாம்பு கொடுக்க மாட்டாள்! அவளுக்கு ராஜாராமன், அவர் சம்சாரம், குழந்தை ஆக மூன்று பேரையும் தன் வீட்டிலே கொண்டுவந்து வைத்துக் கொள்வது பிடிக்கவில்லை. அதை எப்படிச் சொல்வது? எஸ்டேட்டிலே இருக்கும் போது ராஜாராமன் வரும்போதும் போகும்போதும் சாமான்களாகக் கொண்டு வந்து கொட்டியிருக்கிறாரே! ராஜாராமன் வருகிறார் என்றால், காப்பிக்கொட்டை நாலைந்து வீசை, பழங்கள் மற்றும் கறிகாய்கள் இப்படியாக மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்து கொட்டுவார். ஆகவே, வேண்டா வெறுப்போடு தான் அவர்களை வரவேற்றாள்.

நாலைந்து மாதங்களுக்கு, வெளியே நல்ல வேலை கிடைக்கும் வரை கணபதியுடன் இருப்பது என்று வந்தவர் ஒரு வருஷ காலத்துக்கு அங்கேயே தங்கும்படியாகிவிட்டது. அது அவருடைய போதாத காலம்தான் என்று சொல்லவேண்டும்.

ஒரு வரும்படியும் இல்லாமல் தண்டச்சோறு கொட்டுகிறோமே என்று பொழுது பொழுதாய் அங்கலாய்த்தாள் விசாலம். கணபதி அவளை எவ்வளவோ தூரம் சமாதானப்படுத்தினார்.

"அவசரப்படாதே, விசாலம்! இன்னும் கொஞ்ச நாளில் அவர்களாகவே போய்விடுவார்கள். அதற்குள் வீண் சண்டை வேண்டாம்" என்று அடிக்கடி அவளிடம் கெஞ்சுவார். ஆனால், அவர் குறிப்பிட்ட அந்தக் 'கொஞ்சநாள்' மட்டும் ராஜாராமய்யருக்கு நீண்டநாளக ஆகி வந்தது.

விசாலம் வெளிப்படையாக துவேஷத்தைக் காட்டத் தொடங்கினாள். ஒன்றுமில்லாத விஷயங்களுக்கெல்லாம் சௌந்திரத்திடமும் அவள் குழந்தையிடமும் எரிந்து விழுவாள். ஊரரைத் திட்டுவதுபோல, அதே சமயம் சௌந்திரத்தின் நெஞ்சிலே சுருக்கென்று தைக்கும்படி சுடு சொற்களைப் பேசுவாள்.

சௌந்திரமும் மனுஷிதானே! அவளுக்கும் பொறுமை என்பது ஒரு எல்லை வரைக்கும் தானே! அவளால் பொறுக்கும் வரையில் பொறுத்துப் பார்த்துவிட்டாள். இங்கே கிடந்து திட்டும் வசவும் வாங்குவதைவிட எங்கேயாவது போய்விடலாம் என்று கூடக்

கணவனை கேட்டுவிட்டாள். ராஜாராமய்யரின் காதிலே அவளுடைய வார்த்தைகள் விழவில்லை. மாறாக, மன்னியிடம் ஒத்து நடந்துகொள்ளத் தெரியவில்லை என்று அவனையே குற்றம் சாட்டினார்.

கடைசியில் ஒரு நாள் அணைக்கரை உடைந்ததுபோல் உள்ளேயே குமுறிக்கொண்டிருந்த புகைச்சல் பீறிட்டு வெளி வந்துவிட்டது. விசாலத்தின் வேதனை கொடுக்கும் வார்த்தைகளைப் பொறுக்க முடியாமல் சௌந்திரம் இரண்டொரு வார்த்தைகள் பதில் கொடுத்துவிட்டாள். அவ்வளவுதான்; வீடு திமிலோகப் பட்டது. விசாலம் தாரை தாரையாகக் கண்ணீர்விட்டாள். அவளோடு கணபதியும் சேர்ந்துகொண்டு விட்டார். அங்கே இருந்துகொண்டு தண்டச்சோறு சாப்பிடுவதைவிட வெளியில் எங்காவது நான்கு இடங்களில் பிச்சை எடுக்கலாம் என்ற அளவில் அவர்கள் வெளிப்படையாகப் பேசினர். அதன் பிறகு தான் ராஜாராமய்யருக்குத் தன் நிலைமை புரிந்தது. அந்த நிமிஷமே பெண்டாட்டியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு வெளியேறினார். அதே தெருவில் இன்னொரு கோடியில் ஒரு சிறு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டார்.

விசாலம் அவர்களை வெளியே அனுப்பியதோடு நிற்கவில்லை. அவர்களாகச் சண்டையிட்டுக் கொண்டு போய்விட்டார்கள் என்று பிரசாரம்வேறு செய்தாள். ‘கஞ்சிக்கு வழியில்லாது தவிக்கும் நிலையில், ரோஷம் வேறா ?’ என்று தெருவிலிருப்பவர்கள்



சௌந்திரத்தைக் கேவலமாகப் பேசினர்.

'இதெல்லாம் ஒரு காலம். நல்ல காலம் என்பது அவசியம் வரும்' என்று நம்பினுள் சௌந்திரம். யார் என்ன பேசினலும் அதைப் பொருட்படுத்துவதில்லை காலையிலும் மாலையிலும் கரடியாகக் கத்திவிட்டு,மாதம் முடிந்ததும் ராஜாராமய்யர் கொண்டு வந்து கொடுக்கும் சொற்ப தொகைக்கேற்ப குடும்பத்தைச் சிரமத்தோடு நடத்தி வந்தாள்.

சௌந்திரம் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்த நல்ல காலம் கடைசியில் வந்தது. எஸ்டேட் தகராறு சுமுகமாகத் தீர்க்கப்பட்டதோடு. ஆயிரம் ரூபாயையும் கொடுத்து. மறுபடியும் புதிய நிர்வாகத்தின் கீழ் வேலை செய்யும்படி அவருக்கு அழைப்பும் வந்தது.

★

ராஜாராமய்யருக்குப் பணம் வரப்போகிறது; அதுவும் ஆயிரம் ரூபாய்! இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட அனைவரும் வாயைப் பிளந்தனர். அவலைப் பார்த்தபோதெல்லாம் முகத்தைப் திருப்பிக்கொண்டவர்கள், இப்போது தானே வலிய வந்து பேசிவிட்டுச் சென்றனர்.

விசாலமும்ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்கேற்ப ஒரு நாள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சுந்தரம் தவறுதலாக சைக்கிள் ஒன்றின்மீது போய் மோதிக்கொண்டு விட்டான். கால்களில் இரண்டொரு இடங்களில் சிராய்ப்பு ஏற்பட்டது. மற்றபடி ஒன்றும் காயம் இல்லை. ஆனல் இரவு எட்டு மணிக்கு கணபதி பதைபதைக்க ஓடிவந்தார், குழந்தை சைக்கிளில் அகப்பட்டுக் கொண்டு விட்டான் என்று யாரோ சொல்லியதாகவும், ஆபீசிலிருந்து வந்ததும் விசாலம் சொல்லக் கேட்டு ஓடிவந்ததாகவும் தெரிவித்தார். அன்று முதல் தினமும் ஒருமுறை வந்து குசலம் விசாரிக்காமல் இருப்பதில்லை.

இன்றும் வழக்கம்போல் காலையில்வந்தார் கணபதி, தம்பியோடு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். யதேச்சையாகக் கூடத்துக்கு வந்த சௌந்திரம் அவர்களிடையே பேச்சில் அடிப்பட்ட இரண்டொரு வார்த்தைகளைக் கேட்க நேர்ந்தது. அவள் உள்ளம் குமுறியது. இதற்குத்தான இந்த ஆர்ப்பாட்டம் எல்லாம் என்று மனம் சீறியது.

அவள் எத்தனையோ திட்டங்கள் போட்டிருந்தாள். இந்த இரண்டு வருஷ காலமாக ஒரு நல்ல புடவை உண்டா? குழந்தைக்கு ஆசையா ஏதாவது வாங்கிக் கொடுத்தீர்களா? ஏன் ராஜாராமய்யரே வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு எத்தனை நாட்கள் ஆகின்றன?

★

சாப்பிட்டுவிட்டுக் கையலம்பியதும் ராஜாராமய்யர் வெளியே புறப்பட்டார்.

"சௌந்திரம், அண்ணு வரச் சொல்லிவிட்டுப் போனுள். கொஞ்சம் போய்விட்டு வருகிறேன்" என்ருர்.

சௌந்திரம் உள்ளே வரும்படி அவரை ஜாடை காட்டினள்.

"எதற்குக் கூப்பிட்டாய்?" என்று கேட்டபடி உள்ளே வந்தார் ராஜாராமய்யர்.

சௌந்திரத்தின் நெஞ்சில் துக்கம் அடைத்தது. "நீங்கள் எதற்காகப் போகிறீர்கள் என்பதுதெரியும். உங்களை ஏமாற்றிப் பணத்தைப் பறித்துக்கொள்ள அவர்கள் திட்டமிடுகிருர்கள். ஏமாந்து போய் பணத்தை கொடுத்து விடாதீர்கள்"........ என்ருள் நாத்தழுக்க.

"போடி அசடே!" என்று சிரித்தார் ராஜாராமன்.

"காலையில் நீங்கள் பேசிக் கொண்டது எனக்குத் தெரியும். பெண்ணுக்குக் கல்யாணத்துக்குப் பணமில்லை என்று அண்ணா கேட்கிறார். கொடுத்துவிட்டு முழிக்காதீர்கள். இந்த இரண்டு வருஷமாக நாம் பட்டக் கஷ்டம் போதாதா? நல்ல காலம் நமக்கு விடியவே வேண்டாமா?......''

சௌந்திரத்தின் கன்னங்களில் நீர்த்துளிகள் உருண்டு ஓடின.

"ஏ அசட்டுப் பெண்ணே! என்ன இப்படிப் பேசுகிறாய்? நமக்கென்னடி கஷ்டம்? எஸ்டேட்காரனை இருநூறு ரூபாய் முன்பணம் கேட்டிருக்கிறேன். நாலு நாளில் அனுப்புவதாகச் சொல்லி விட்டான். உனக்கு எனக்கு, குழந்தைக்கு வேண்டிய துணிமணிகள், சாமான் சட்டுகள் வாங்கப் போதிய பணம் ஆச்சு. இனிமேலும் எஸ்டேட்டில் நமக்குக் கவலையில்லை. பாவம்! அண்ணாவைப் பார். பெண்ணுக்குக் கல்யாணம் ஆகவில்லையே என்ற கவலையில் ஒரு மாதமாகத் தூக்கம் இல்லை. உடம்பு நாராக இளைத்துப்போய் விட்டது!......''

சௌந்திரம் குறுக்கிட்டாள்.

"போதுமே, உங்கள் கரிசனம்! இந்தக் கரிசனம் அவர்களுக்கு மட்டும் நம்மிடம் ஏன் ஏற்படவில்லை.........?''

"சௌந்திரம்! நீ நல்ல மனசோடு பேசவில்லை என்றுதான் நினைக்கிறேன். பணம் எங்கே போய்விடும்? நம்மிடம் இருந்தால் மட்டும் என்ன ஆகிவிடும். பாங்கிலோ போஸ்டாபீஸிலோ போட்டுவைக்க வேண்டியதுதான். எஸ்டேட்டிலே நகையா போட்டுக்கொண்டு இருப்பதும் ஆபத்துதான். அண்ணாவுக்குத் தானே கொடுக்கிறோம். அடுத்த வருஷம் ரிடையரானதும் பிராவிடண்ட் பண்டு பணம் வாங்கிக் கொடுத்து விடுகிறான். நம்ம பணத்தினால் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கை ஏற்படுகிறது, சௌந்திரம்!......... நீ இல்லாததற்கும் பொல்லாததற்கும் கவலைப் படாதே! நான் போய்விட்டு வருகிறேன்'' என்று கிளம்பினார் ராஜாராமன்.

வாசற்படியைத் தாண்டித் தெருவில் இறங்கிச் செல்லும் கணவனை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் சௌந்திரம். அவளுக்கு அவருடைய வேதாந்த விசாரங்களைப் புரிந்து கொள்ளும் சக்தி கிடையாது.

பீரிட்டு எழுந்த அழுகையை அடக்க முடியாது கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே திரும்பினாள்.

காலம் விடிந்தது! ஆனால் சௌந்தரத்திற்கு............?

★



"என்னங்க, இந்தக் காலத்துலே மனுஷன்கிட்டே பணம் இருக்குதுன்னு தெரிஞ்சா பசைமாதிரியா ஒட்டிக்கிறாங்க! நீங்க என்ன நினைக்கிறீங்க?''

"பசை மாதிரீன்னு சொன்னாக்கூட பொருந்தாதுங்க. ஈர பெயிண்டு மாதிரியான்ன அப்பிக்கிறாங்க!''

வாழ வைத்தவள்

சுப்பு

மணி பதினொன்றடித்து பதினைந்து நிமிடங்களாகின. ஆபீஸ் மானேஜர் ராகவன் கார் வந்து ஆபீஸ் முன் நின்றது. கேட்டண்டை நின்றிருந்த முனுசாமி ஓடோடிவந்து, "ஒரு சல்யூட்" அடித்துவிட்டுக் காரின் கதவைத் திறந்தான்.

டிரைவர் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்த ராகவன், பியூன் முனுசாமி கதவைத் திறந்ததும் வேகமாக இறங்கி தன்னறைக்குள் சென்றான். ஆபீஸ் பையன் உடனே மின்சார விசிறியை முடுக்கினான். ராகவன் நாற்காலியில் உட்கார்ந்து மேஜை மீது அவனுக்காகக் காத்துக்கிடந்த தபால்களைக் கவனிக்கத் தொடங்கினான்.

மணி பன்னிரண்டரை யாவதற்கும், ராகவன் தபால் கவனிப்பு முடிவதற்கும் சரியாக இருந்தது. அந்தந்த இலாக்கா தலைமை குமஸ்தாக்களைக் கூட்பிட்டு, பதில் எழுதிக்கொண்டு வரும்படிச் சொல்லி விட்டு ஒரு கொட்டாவி விட்டான் ராகவன்.

"சார், 'அப்பாயின்ட்மெண்ட்' விஷயமாகப் பதினைந்துபேர்கள் வந்திருக்கிறார்கள். நமக்குக் 'கணக்குப் பிரிவிற்காக ஒருவர் தேவை' என நேற்றைய 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்தோமல்லவா?" என்று ராகவனுக்கு ஞாபகப் படுத்தினார் உதவி மானேஜர்.

"ஆமாம்...... ஆமாம்...... ஆபீஸ் பையனிடம் சொல்லி அவர்களை ஒவ்வொருவராக உள்ளே அனுப்பும்படிச் சொல்லுங்கள்." என்று கூறிவிட்டு தன் கிராப்பை சரி செய்துகொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான், ராகவன்.

வேலைக்காக வந்தவர்கள் ஒவ்வொருவராக ராகவன் அறையினுள் நுழைந்து தங்கள் நற்சாட்சிகளையும், சிபாரிசுக் கடிதங்களையும் காட்டிவிட்டுத் திரும்பினர். மணி ஒண்ணரையாகிவிட்டது. கடைசியாக உள்ளே நுழைந்தான் சங்கரன்.

சங்கரனைக் கண்டதும் திடுக்கிட்டான், ராகவன். "பாய்..." என்று தன் மேஜைமீதிருந்த மணியை ஓங்கி அடித்தான்.

நடுங்கிக்கொண்டே பையன் உள்ளே சென்றான்.

"நான்சென்ஸ்"—"இந்தப் பைத்தியத்தை ஏன் உள்ளே விட்டே?" என்று இறைந்தான் ராகவன்.

"பைத்தியமா?...யார்?...நானா?" என்று விழித்தான் சங்கரன்.

"ஆமாம், நீயேதான். ஆடிட்டர் பரீட்சையில் தோல்வியுற்றவர் தானே நீ?" என்றான் ராகவன்.

இரு கைகளாலும் தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டான் சங்கர். சிறிது சிந்தித்து "ஓ, ராகவனா நீ!"

"ரகு...நீ... என் பள்ளித் தோழனல்லவா? ...... நான் இப்போது பைத்தியமல்ல; உன்னைப் போன்றே வாழப்பிறந்தவன். என்னை "வாழ வைத்தவள்" என் துணைவி என்று கூறிவிட்டு வேகமாக வெளியே சென்றான் சங்கர். அவன் சிந்தனை சுழன்றது.

2

திருவாலங்காட்டில் சபாபதி பிள்ளை என்றால் எல்லோருக்கும் தெரியும். அவர் அவ்வூருக்கடுத்த கிராமமொன்றில் கிராம கர்ணமாக வேலை பார்த்து வந்தார். திருவாலங்காட்டில் நடனமாடும் நடேசனை நாள் தவறாது வணங்குவது ஒன்றே அவருடைய பேரானந்தம். எளிய வாழ்வும், சிறந்த பக்தியுமுள்ள அவர், தனது ஒரே மகன் சங்கரைப் பட்டதாரியாக்கினார். சங்கர், பீ.காம் (ஹானர்ஸ்) பரீட்சையில் மாகாணத்திற்கே முதலாவதாகத் தேறினான். தன் கல்லூரிக்கே புகழையும் தேடிக்கொடுத்தான்.

பட்டப் பரீட்சை முடிந்து, பட்டமும் பெற்றுக்கொண்டான். கணக்குப் பரிசோதகனாக ஆகவேண்டுமென்ற அவா சங்கரனை உந்தியது.

தன் தந்தையினிடம் தன் ஆவலைத் தெரிவித்தான். அவரும் இசைந்தார்.

இரவு, பகலாகப் படித்தான். பல கணக்குப் பரிசோதகர்களிடம் சென்று, அவர்களின் கருத்துக்களையும், அனுபவத்தையும் நாளுக்கு நாள் தெரிந்து தேர்ந்து வந்தான். பரீட்சை நாளும் நெருங்கியது. அவனுடைய தோழர்கள் அவனைப் புகழ்ந்தனர். இப்பரீட்சையிலும் முதன்மையாகத் தேறப் போகிறவன் சங்கரன் தான் என்று புகழ்ந்தனர். முதல் நாள் பரீட்சை முடிந்தது. இரண்டாம் நாள் பரீட்சையின்போது சங்கரின் நினைவு திடீரென மாறியது. கேள்வித்தாளைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து அருகிலிருந்த மாணவன்மீது எரிந்தான். கையிலிருந்த பேனாவை பரீட்சை தணிக்கையாளர்மீது வீசினான். உடனே அவர் போலீஸ் உதவி கொண்டு சங்கரனை பரீட்சை ஹாலிலிருந்து வெளியேற்றினர். அது சமயம் ராகவனும், அவனுடன் பரீட்சை எழுதியவன்தான். ஆனால் பாஸ் செய்து விட்டான்.

3

பரீட்சை ஹாலிலிருந்து வெளியேற்றப்பட்ட சங்கரன் பைத்தியமாகவே மாறிவிட்டான். அவனுடைய பெற்றோர்கள் எவ்வளவோ முயன்றனர். பயித்தியத்திற்குச் சிகிச்சையளிக்கும் வைத்திய சாலையிலும் சேர்த்தனர். அங்கு, மூன்றாண்டுகளிருந்தும் சங்கரனுக்குச் சுய நினைவு ஒரு சமயம் வருவதும், மீண்டும் குப்பைக் காகிதங்களைக் கிளறுவதும், குச்சிகளை பென்சிலாக உபயோகித்து வாய்க்கு வந்ததை உளறுவதுமாக இருந்தான்.

சங்கரின் தந்தை திருவாலங்காட்டுப் பெருமான் மீது பாரத்தைப் போட்டு, "நடராசப் பெருமானே நீ கொடுத்த ஒரே மகன் பித்தனானே" நீதான் அப்பித்தம் தெளிய மருந்தளிக்கவேண்டும்" – என்று கூறி திருக்கோயிலை வலம் வந்து வணங்கி மெய்ம்மறந்து மூன்று, நான்கு மணி நேரம் நின்ற பிறகு வீட்டிற்கு வந்து உணவு ஏதும் கொள்ள மனமின்றி நித்திரையிலாழ்ந்து விடுவார்.

இப்படியே நாட்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன. ஒரு நாள் அவருடைய நண்பர் சோம சுந்தரம், தன் மகள், மனைவியுடன் சுவாமி தரிசனத்திற்காக சென்னையிலிருந்து அங்குவந்து, அவருடைய வீட்டில் தங்கினர். சுவாமி தரிசனமெல்லாம் முடித்துக்கொண்டு இருவரும் படுக்கப் போகும்போது, சங்கரனின் நிலையை விளக்கினர் சபாபதி பிள்ளை.

சிறிது நேரம் மௌனமாகவிருந்த சோம சுந்தரம், "சபாபதி!...என் மகள் உஷா உன் மகன் சங்கரையே துணைவனாக ஏற்றுக்கொள்ளப் போவதாகக் கூறிக்கொண்டிருக்கிறாள்..." அவனுடைய படிப்பும், அழகும், வாத்சல்யமும், அவளை கவர்ந்து விட்டது. அவள் பத்தாம் வகுப்பில் படிக்கும்போதே "சங்கர் சங்கர்!" என்று கூத்தாடிக் கொண்டிருந்தாள். நான் என் டிரான்ஸ்போர்ட் விஷயமாக மேல் நாடு சென்றிருந்ததால் இடையில் நடந்த இச்சம்பவங்கள் தெரியாமற் போய் விட்டது. "உஷா கோயிலினின்று வந்தால், சங்கர் இறந்து விட்டதாக நீர் கூறவேண்டும்!" என்று முகத்தை மூடிக்கொண்டார்.

"அப்பா!...... என் சங்கர் சாகப் பிறக்கவில்லை, வாழப்பிறந்தவர்!... அவரையே நான் மணப்பேன். காலனிடமிருந்து கணவனை மீட்ட சாவித்திரி இப்பாரதப் பெண் தானே! கணவனை, காதலி ஒருவள் பின் அனுப்பிவிட்டு கணவனுக்காக கற்பின் தெய்வமான கண்ணகியைப் பெற்றெடுத்தது இத்தமிழ் நாடுதானே!... ஏன்?......காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கையை நீர் அறிந்ததுதானே!...... அவ்வம்மைக்கு முக்தியளித்ததும் இத்தலம் தானே!... அப்பா!...நம் நாட்டின் பண்பு இப்படியெல்லாமிருக்க அவர் வைத்திய சிகிச்சைமூலம் என் அன்பருக்கு குணமில்லையென்றதும், நீங்கள் செய்த முடிவு சரி

யாகுமா?... எத்தனையோ தடவை: அவரே என் துணைவர் என்று கூறிய, உங்கள் 'நா' இன்று அவர் இறந்துவிட்டதாகக் கூறும்படிகூறக் கூசவில்லையே!...... அப்பா, நான் உங்களைக் கேட்டுக்கொள்வது இது ஒன்றுதான். "நான் வாழவேண்டுமானால்—சங்கர் வாழவேண்டும்!" அதற்காக நீங்கள் இப்போதே நேராக ஆஸ்பத்திரிக்குச் சென்று சங்கரை எப்படியும் இங்கு கூட்டி வந்து விடுங்கள். பிறகு அவரைக் குணமாக்கிக் கொடுக்கும்படி நடராஜப் பெருமானிடம் முறையிடுகிறேன். அம்பலவாணின் அருளிருந்தால் அவர் குணமாகி, என் கைகோர்த்து இவ்வுலக இன்பத்தை எனக்கு அளிக்கட்டும். இல்லையேல் அவருடன் நானும் பைத்தியமாகி அலைகிறேன்" என்று மூச்சு விடாமல் பேசினாள் உஷா. அவள் கோவிலிலிருந்து வந்து, தங்கள் பேச்சை ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்தாள் என்பதை அறியாத சோமசுந்தரம், அவளை எவ்வளவோ தடுத்தும் முடியாமற் போகவே, உஷாவை சபாபதி பிள்ளை வீட்டிலேயே விட்டு விட்டு, தன் காரிலேயே சென்னைக்குத் திரும்பினார்.

4

சங்கர் சென்னை ஆஸ்பத்திரியினின்று திருவாலங்காடு வந்து சேர்ந்தான். அவனுக்கென ஒரு அறை ஒழித்துக் கொடுத்தார் சபாபதி. நாள் தவறாது சங்கரையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் செல்வதெனத் திட்டமிட்டாள் உஷா. ஆனால், சங்கர் சுயநினைவற்றிருந்ததால் ஒரு நாள் பூராவும் கோயிலில் தங்குவதும், பிறகு ஒரு நாள் குளக்கரையிலும், மற்றொரு நாள் வீட்டிலுமாகத் தங்கிவந்தான். அவன் எங்கு தங்குகிறானோ அங்கெல்லாம் உஷாவும் தங்கி அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தாள். இதனால், உஷாவின் உடல் நிலையும் சிறிது பாதித்தது. அதை பொருட் படுத்தாது சங்கரின் நலனையே கருதி இரவு, பகல், வெயில், குளிர், மழை என்றும் பாராமல் அவனுடனிருந்து பயித்தியமாகவே நடித்தாள். ஆனால் ஆலய வழிபாட்டை மட்டும் நாள் தவறாது செய்து, சங்கரின் நலன் சீர்பெற பிரார்த்தித்து வந்தாள்.

5

ஒரு நாள் வெள்ளிக்கிழமை. காலையில் எழுந்ததும் சங்கர் தெருவாயிலில் நின்று 'உஷா!' என்று தடுமாறினான்.

உஷாவின், கண்களில் நீர்த்திவலைகள் நிரம்பின. "சங்கர்!" என்று இரு கைகளையும் ஏந்திய வண்ணம் ஓடி வந்தாள்.

தெருவாயிலிலிருந்தபடி "நான் பரீட்சைக்குப் போகப்போறேன். சொக்கா துணி கொடு" என்று சிரித்தான், சங்கர்.

"சங்கர் உள்ளே வாங்கோ. உங்களுக்கு இஷ்டமானதைக் கொடுக்கிறேன். உடுத்திக் கொள்ளுங்கள்" என்றாள் உஷா.

"ஊ...ஹூ...ம் இங்கே கொண்டு வா! இல்லையெனில் போய் அந்தப் பாழ் மண்டபத்தில் விழுகிறேன்!" என்று கூறிக்கொண்டே நேராகக் கோபுரவாயிலை நோக்கி ஓடினான் சங்கர்.

சில ஷர்ட்டுகளையும், வேஷ்டிகளையும் எடுத்துக்கொண்டு, அவன் பின்னாலேயே ஓடினாள் உஷா.

தெருவிலிருந்தவர்களெல்லாம் "இது பெண் பைத்தியம்" என்று சிரித்து கையாண்டி செய்தனர். சங்கரை தொடர்ந்த உஷா அவன் பின்னாலேயே சென்று, அவன் உட்கார்ந்திருந்த கோபுர வாயிலிலேயே அவளும் உட்கார்ந்து. அவனுடைய அழுக்குடைகளை மாற்றி புது உடைகளை அணிவித்தாள். பிறகு அவள் மட்டும் வீட்டிற்குத் திரும்பினாள். சங்கர் கூடிய சீக்கிரம் சுய நினைவுக்கு வந்துவிடுவானென்ற எண்ணம் அவளுக்குத் தோன்றியது.

அதனால் அவள் உள்ளத்தில் சிறிது மகிழ்ச்சி ஏற்பட்டது. வீட்டிற்குச் சென்று குளித்துவிட்டு, அழகாக உடுத்திக்கொண்டு, ஒரு தட்டில் தேங்காய் பழம். புஷ்பங்களுடன் கோயிலுக்குச் சென்று, நைவேத்தியம் செய்து "பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்!" என்று பாடிய வண்ணம் கோயிலைச் சுற்றி வந்தாள். அவளைக்கண்ட சங்கரும், எழுந்து கைகட்டி, அவளுடைய பாட்டை கேட்டவாறே கோயிலைச் சுற்றினான். பிறகு அவளுடனே வீட்டிற்கு வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்து "பெருமானே அருளாளாய்" என்று கூறிச் சிரித்தான்.

சபாபதியும், அவரது மனைவியும், தங்கள் மகன் சங்கரன், "உஷாவின் உதவியால் உன்மத்தம் நீங்கினான்" என்று மகிழ்ந்தனர்.

மறுநாள் காலையில் உஷா, சங்கருடன் சென்னையை நோக்கிப் புறப்

பட்டாள். சபாபதி பிள்ளையும் அவர் மனைவியும் அன்போடு சங்கரை உஷாவுடன் அனுப்பிவைத்தனர்.

6

சங்கர், மீண்டும் பரீட்சைக்குச் சென்றான். அவனுடைய நண்பர்கள் கூறியபடி மாகாணத்தில் முதன்மையாகவே தேறினன், "சார்டர்ட் அக்கௌண்டெண்ட்" என்ற பட்டமும் பெற்றான்.

சங்கர், ஏதாவது ஒரு கம்பெனியிலோ அல்லது சர்க்காரிலோ கணக்குப் பரிசோதகராக வேலை செய்து புகழ்பெற வேண்டுமென்றே உஷா விரும்பினாள். பத்திரிகையில் வந்திருந்த விளம்பரத்தைக்கண்டு சங்கரை அனுப்பினாள். ராகவனால் சங்கரன் பழைய நினைவிற்குத் திரும்ப நேர்ந்தது

நேராக வீட்டிற்கு விரைந்த சங்கர், கோபமாக வீட்டினுள்ளே நுழைந்தான். "என்னமோ—ஏதோ" என்ற கவலையுடன் சங்கரைப் பின்தொடர்ந்தாள் உஷா. தன் கோட்டைக் கழட்டி, கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு பெருமூச்சுடன் ஈஸிச் சேரில் சாய்ந்தான் சங்கர்.

"ஏன், உங்களை வேலைக் கெடுத்துக் கொள்ள வில்லையா?" என்று குழைந்தபடி சங்கரின் அருகில் வந்து, அவன் நெற்றியைத் தடவிக் கொடுத்தாள் உஷா.

"உஷா... உன்னால் நான் மனிதனானேன். ஆனால், என் பழைய நண்பர்கள் என்னை ஒரு மாதிரியாகக் கவனிக்கிறார்கள். இன்று நான் வேலைக்குப்போன விடத்திலும், என் நண்பன் ராகவனே, மானேஜர். அதனால் திரும்பி விட்டேன்." என்றான் ராகவன்.

"ராகவனா...ராகவன் என் தோழி சுனிதாவின் கணவனாகத்தான் இருக்கவேண்டும்." சரி... சரி... நீங்கள் கவலைப்பட வேண்டாம் வேலை உங்களைத் தேடிவர நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறி சங்கரனின் கைகளைக் குலுக்கி விட்டு, சமையலுள்ளே சென்று காப்பியும் கையுமாக வந்து சங்கரனின் முன்னே நின்றாள் உஷா.

7

ஒரு நன்னாளில், நல்லோரையில் 'உஷாவிற்கும்-சங்கரனுக்கும்' திருமணம். சென்னை தியாகேசப் பெருமான் திருமண்டபத்தில் நடந்தது. உஷாவின் தோழிகள் பலர் சதிபதிகளாக வந்து தம்பதிகளை வாழ்த்தி, உஷா செய்த தியாகத்தைப் பெருமையாகப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். சுனிதாவும், தன் கணவனுடன் வந்தாள். உஷாவை வானளாவப் புகழ்ந்தாள். ராகவனும்... தன் வாழ்த்தைக்கூற எழுந்தான். மாப்பிள்ளை சங்கரைப்பார்த்ததும் பிரமித்து, சிறிது நேரம் திகைத்து நின்றான். பிறகு, ஓடோடிச்சென்று சங்கரனின் கைகளைப் பிடித்துக்கொண்டு "சங்கர்...மன்னியுங்கள்"— சென்ற வாரம் நீர் இண்டர் வ்யூவிற்கு வந்த போது என் கண்திறக்கவில்லை. நீர் வாழப் பிறந்தவர்தான்! மேலும் உஷாவின் தந்தையே எங்கள் கம்பெனியின் டைரக்டர்களில் ஒருவர் என் குற்றத்தை மன்னித்து விடுங்கள்!" என்று வேண்டினான்.

"ரகு...நீ என் பழைய நண்பன். அதை மறக்கமாட்டேன்......வாழ்க்கையில் நேரும் மேடு பள்ளங்கள் பல. அதைப் போக்குவதுதான் தொண்டு. என் உஷா இல்லாவிட்டால் நான் இன்று ஒரு நரகத்திலிருந்திருப்பேன். அவளின் உழைப்பால், உயர்ந்த தொண்டால் நான் மனிதனானேன். என்னை 'வாழவைத்தவள்' அவளேதான்" என்று கூறி, கழுத்தில் மாலைகளைச் சுமந்து நிற்கும் உஷாவின் சந்திர பிம்பத்தைத் தன் கடைக்கண்ணால் பார்த்தான் சங்கர். உஷாவின் கண்கள் சங்கரின் எழில் வதனத்தைப் பருகி, புன்னகையொன்றை அவள் குமுத வாயினிடையே தோன்றச் செய்தன.

சபாபதியும்-சோமசுந்தரமும், இதைக்கண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டனர்.

மணமாகிய மூன்றும் நாளே சங்கருக்கு "நேஷனல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் முதல் கணக்குப் பரிசோதகர்" வேலை அவனைத்தேடி வந்தது. ★

SISTA'S-SG-75-TAM

சிறிதளவு

*டினோபால்

வெள்ளைத் துணிகளை — அதிவெண்மையாக்குகிறது

★ டினோபால், ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்



தயாரிப்பவர்கள் : ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட், வாடி, வாடி, பரோடா
ஏக விநியோகஸ்தர்கள் : ஸுஹ்ருட் கெய்கி டிரேடிங் பிரைவேட் லிமிடெட், பி. ஒ. பாக்ஸ் 965, பம்பாய்-1

20. அமைதியும் ஆனந்தமும்

விமலா தேவ சபையில் கலைவாணி வீற்றிருப்பதுபோல் வீணையைத் தாங்கியபடி பெரிய பந்தலில் மேடைமீது அமர்ந்திருந்தாள். பந்தலின் உட்புறத்தில் எள் விழ இடமில்லை. வெளியிலும் ஏராளமான கூட்டம். அத்தனைபேர் குழுமியிருந்தும் அங்கே அமைதியே குடிகொண்டிருந்தது. வீணையின் ஒலி, அதனோடு இழைந்த விமலாவின் தேமதுரக் குரல் ஓசை தவிர வேறு ஒலியே இல்லை. அவள் அப்படி வாசித்தாள்; அனைவரும் மெய்ம்மறந்து ரசித்தனர்.

மேடையின் வலப்புறத்திலே சிறிது தள்ளி ஓர் அழகிய சோபா. அதில் தங்கமணி—உஷா தம்பதிகள். சிறந்த அலங்காரத்துடன் மாலையும் கழுத்துமாக அமர்ந்திருந்த அவர்களைப் பலரும் அணுகிப் பற்பல பரிசுப் பொருள்களை வழங்கி வாழ்த்துரை கூறினர்.

சற்றுத் தள்ளினாற்போல இருந்த ஆசனங்களில் முத்துசாமியும், சந்திரசேகரனின் தமையன் முதலியோரும் மற்றும் பல பிரமுகர்களும் உட்கார்ந்திருந்தனர். தியாகராஜனும் சுந்தரமும் இங்கும் அங்கும் போய் வந்து ஏதேதோ அலுவல்களைக் கவனிப்பதும் வருகிறவர்களை வரவேற்று உபசரிப்பதுமாக இருந்தனர்.

சாவித்திரி, கணவரைப் போலவே பால்யம் மீளப் பெற்றவள்போல் சிரித்த முகத்துடன் வளைய வந்து கொண்டிருந்தாள். நளினி, அகிலா முதலிய பெண்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அங்கே குதூகல உணர்ச்சி வெள்ளமாகப் பெருக்கெடுத்திருந்தது என்றால் மிகை இல்லை.

இரு திருமணங்களையும் ஒரே நாளில் நடத்திவிட வேண்டும் என்று எல்லாரும் எவ்வளவோ முயன்றார்கள். அப்படி ஒரு முகூர்த்தம் கிடைக்கவில்லை. ஆகவே, முதல் நாள் ஒரு திருமணமும் மறுநாள் ஒரு கல்யாணமுமாக அமைந்தன. சந்திரசேகரன்—விமலா திருமணம் முதல் நாள்; தங்கமணி—உஷா கல்யாணம் மறுநாள்.

இருதரப்பு உறவினர்களும் நண்பர்களும் இரண்டு நாள் முன்னதாகவே வந்து கூடிவிட்டனர். தியாகராஜ மந்திரம் பங்களாவும் அதன் முன்னே அமைந்திருந்த பெரிய பந்தலும் அக்கம் பக்கம் உள்ள இரண்டு பங்களாக்களும் 'ஜே ஜே' என்றிருந்தன. வண்ண விளக்குகளாலும் ஏனைய அலங்காரங்களாலும் ஜகஜ் ஜோதியாக விளங்கிய அந்த இடம் தேவலோகம் போலவே காட்சி அளித்துக்கொண்டிருந்தது.

முதல் நாளே விமலாவின் இசை நிகழ்ச்சி நடைபெறவேண்டும் என்று பலரும் விரும்பினர்; வற்புறுத்தினர். விமலாவும் இசைந்தாள். எனினும் குறிப்பான காரணம் எதுவும் இன்றியே அது நின்றுபோனது. அதைவிட மறுநாள் தங்கமணியின் திருமணத்தில் அந்நிகழ்ச்சி நடைபெறுவதுதான் பொருத்தமாக இருந்தது; விமலாவுக்கும் அதிலேதான் முழு மகிழ்ச்சி. அது அவள் இசையிலே பளிச்சிட்டது.

சந்திரசேகரன் தொலைவில் இருந்தபடி மனைவியின் எழிலையும் தெய்விக இசையையும் ரசித்துக் கொண்டிருந்தான். அவள் அமர்ந்திருந்த முறை, வீணையை இசைக்கும்போது அவளுடைய விரல்கள் நடைபயிலும் வெண்புருக்களைப் போல் லாகவமாகத் தந்திகளின்மேல் ஓடுவதையும் பாடுகிறபோது அவள் செவ்விதழ்கள் குவிந்து குவிந்து மலர்வதையும், முகத்தை நிமிர்த்துகிறபோது அவளுடைய கரிய பெரிய விழிகள் நாற்றிசைகளிலும் மின் வேகத்தில் சஞ்சரித்து மீள்வதையும் கண்டு கண்டு அவன் உள்ளத்திலே எல்லையற்ற குதூகல உணர்வு பொங்கிக்கொண்டிருந்தது. 'இத்தனை பெருமைகளை உடைய இந்த விமலா என் மனைவி' என்று எண்ணுந்தோறும் அவன் இருதயம் பெருமிதத்தால் விம்மிற்று. சூழ இருந்தவர்களில் பலர்கூட இதுபற்றிப் பேசிக்கொண்டார்கள்.

அந்தப் பாட்டு முடிந்ததும். விமலா கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டாள். நிமிர்ந்தாள், பார்வை சந்திரசேகரனிடம் பாய்ந்தது. இதழ்கள் விரிந்தன; புன்முறுவல் மலர்ந்தது. அவனும் பதிலுக்கு முறுவலித்தான்.

"ஆனந்த பைரவி........"

"ஆமாம்; அதில் விமலா 'ஸ்பெஷலிஸ்ட்' அல்லவா ?"

"அவள் வேறு என்ன என்னவோ வாசிக்கிறாளே !"

"நம் பொறுமையைச் சோதிக்கிறாள் !"

"அதை வாசிக்கும்படி கேட்கலாமே !"

"நேரிடையாகவா ?"

"ஏன் ?"

"இனி அவள் சந்துருக்கு உரியவள் அல்லவா ?"

"இருந்தால் என்ன ? அவளிடம் உள்ள கலையில் ரசிகர்களுக்கு உரிமை உண்டல்லவா ?"

"இருந்தாலும் சந்துரு மூலம் விண்ணப்பம் போடுவதே சரி."

"சந்துரு!......"

"என்ன ?"

"ஆனந்த பைரவி."

"தன்னாலே வரும்."

"நீ கேட்கமாட்டாயா, வாசிக்கும்படி ?"

"ஊஹூம்."

"ஐயே, வெட்கப்படுகிறானடா, பழைய காலத்து மணப்பெண் மாதிரி !"

"வெட்கம் இல்லையடா; அச்சம் !"

"ஆமாம் ஆமாம். நீ சொல்வது கர்ரெக்ட்! காளியாய் இருந்தவள் பெண்மாதிரி அடங்கி இருக்கிறாள். இவன் கேட்கப்போய், அவள் பழைய ரூபத்தை எடுத்துக்கொண்டு விட்டால் ?......"

எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள். அந்த ஒலிகேட்டு விமலா கூடத் தலை நிமிர்ந்து அந்தப் பக்கம் குறிப்பாகப் பார்த்தாள். சிரிப்பு அமளி அடங்கிய பின் சந்திரசேகரன் சொன்னான்.

"நண்பர்கள் என்ற முறையில் பரிகாசமாக எதுவும் பேச உங்களுக்கு உரிமை உண்டு; நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அந்தப் பரிகாசத்தை, குறிப்பிட்ட இந்த விஷயத்தோடு நீங்கள் இணைப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

"நான் பெரிய மேதாவியல்ல; பிரமாத ரசிகனும் அல்ல. ஆயினும் என்வரையில் ரசனை சம்பந்தமாகச் சில அபிப்பிராயங்கள் உண்டு. கலை நிகழ்ச்சி புரிய என்று மேடையை அடைந்து செயலாற்றுகிறவர்களிடம், 'இதுவேண்டும், அதுவேண்டும்' என்று ரசிகர்கள் கேட்பது சரியே அல்ல. ஏன் எனில் கலை என்பது ஒரு கட்டுப்பாட்டுக்கு உரியது அல்ல. கலைஞரின் மனோபாவத்திற்கு ஏற்ற முறையிலேதான் அது அமையும். மனோதர்மம் என்பது ஒரு சமயம்போல் ஒரு சமயம் இராது; ஒரு நாளைப் போல் இன்னொரு நாள் இராது. அப்படி இருக்குமானால் அதை மனோ தர்மம் என்றே குறிப்பிட முடியாது. அவ்வப்போது இருக்கிற மனோ பாவத்திற்கேற்ற முறையிலே கலை நிகழ்ச்சிகளை அமைத்துக்கொள்வது கலைஞரின் இயல்பு. உதாரணமாக, ஒரு பாடகர் மேடைக்கு வருகிற போது அன்றைக் கச்சேரியில் இன்ன இன்ன பாடவேண்டும் என்று திட்டம் போட்டுக்கொண்டு வருவார். மேடையை அடைந்ததும் அவர் மனநிலை மாறலாம்: அல்லது திட்டமிட்டபடி இரண்டொரு பாடல்களைப் பாடியபின் மனநிலை மாறலாம். திட்டத்தில் இல்லாத வேறு எதை எதையோ பாடவேண்டும் என்று தோன்றலாம்; அப்படிப் பாடினால் நன்றாக—மிக நன்றாக—இருக்கும் என்று தோன்றலாம்; அதன்படி அவர் பழைய திட்டத்தை மாற்றிப் பாடலாம்; நன்றாக அமையலாம். அவருடைய முன்திட்டத்தை விட்டே அவர் மனம் மாறுகிற நிலையில் குறுக்கே ரசிகர் ஒன்றைப் பிரேரேபித்தால் எப்படி? கலைஞர் ரசிகரின் வேண்டுகோளுக்கு இணங்கலாம்; அவருடைய மனோதர்மம் இணங்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே, கலைஞருக்குப் பூரண சுதந்தரம் அளித்து அவர் இஷ்டப்படி செயல்புரியட்டும் என்று விட்டு விடுவதுதான் நல்லது. ஒரு ரசிகர் ஒரு கலைஞரிடம் ஒன்றை எதிர்பார்க்கலாம். அந்தக் கச்சேரியில் அது கிடைக்கவில்லை என்றால் ரசிகர் அடுத்த கச்சேரி, அதற்கு அடுத்த கச்சேரி என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்து எங்கு எப்போது அது கிடைக்கிறதோ அப்போதுதான் ரசிக்கவேண்டும். உத்தமக் கலைஞர்—உத்தம ரசிகர் நிலை இப்படித்தான் இருக்கவேண்டும். மனைவியே யானாலும் நான் விமலாவை வேண்டவும் மாட்டேன், கட்டளை இடவும் மாட்டேன்!"

"அப்பா!...முடிந்ததா பிரசங்கம்?......"

"நீ சொல்வது நியாயந்தான் சந்துரு."

சந்திரசேகரன் மெதுவாகத்தான் பேசினான் என்றாலும் அங்கே ஏதோ சர்ச்சை நடக்கிறது என்பதை மற்றும் சிலர் உணர்ந்ததுபோலவே விமலாவும் உணர்ந்தாள். குறிப்பாகக் கணவனை நோக்கினாள். 'என்ன?' என்று கேட்டது அவள் பார்வை. 'ஒன்றும் இல்லை; நீ வாசி' என்பது போல் ஜாடை செய்தான் சந்திரசேகரன்.

விமலாவின் விரல்கள் தந்திகளை மீட்டின. ஆனந்த பைரவியின் ஸ்வரங்கள் பளிச்சிட்டன. உடனே படபடவென்று வான் முகட்டை எட்டும்படியான கரகோஷம்.

விமலா தலை நிமிர்ந்து நாற்புறமும் நோக்கினாள். "இதோ வந்து விட்டேன்" என்று முறுவலுடன் அங்கே வந்தான் சுந்தரம். வந்து அவள் எதிரே அமர்ந்து கொண்டான். "சுருதி சேர்ந்து விட்டது" என்று சிரித்த

படி மெல்லச் சொன்னாள் விமலா. "ஆமாம். நேற்றே சேர்ந்துவிட்டது!" என்றான் சுந்தரம். விமலாவின் முகத்திலே லஜ்ஜை நிழலாடிற்று. அவள் தலை கவிழ்ந்தாள்.

"ஆகா!...ஆகா!......" என்று அனைவரும் அடுத்தடுத்துக் கூறிப் பாராட்டும்படி விமலா வாசித்துக்கொண்டே போனாள். நேரம் செல்லச் செல்ல அவள் தன்னையே மறந்தாள்; இசையிலே கலந்தாள். அவளே அப்படி என்றால் அவையினரைப்பற்றி என்ன சொல்ல இருக்கிறது?

"அப்பா! விமலி இப்படி வாசித்து எத்தனை காலம் ஆயிற்று ?"— இப்படி முத்துசாமி, சாவித்திரி, தியாகராஜன், நளினி, சுந்தரம், அகிலா ஒவ்வொருவருமே அருகில் இருந்தவர்களிடம் கூறினர். நேரம் போனதே யாருக்கும் தெரியவில்லை. அந்த இடமே ஆனந்த பைரவியின் வெள்ளத்திலே மூழ்கியிருந்தது.

∴ ∴ ∴ ∴

ஹால் நடுவே முத்துசாமி சோபாவில் சாய்ந்திருந்தார். சாவித்திரி அவர் எதிரே தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்து கொண்டிருந்தாள். தியாகராஜனும் தங்கமணியும் சுந்தரமும் அவர் பின்னே அமர்ந்திருந்தார்கள். நளினி கூடத்து நிலையருகில் மறைந்து நின்றிருந்தாள். அகிலாவும் விமலாவும் பக்கவாட்டில் உட்கார்ந்திருந்தனர். முத்துசாமி தாம்பூலம் தரித்துக்கொண்டே பேசினார்.

"இந்தக் குடும்பம் திரும்பவும் இந்த நிலையை அடையுமா என்று நான் பட்டுக்கொண்டிருந்த கவலை கொஞ்சமில்லை."

"விமலி இவ்வளவு தூரம் மாறினாளே அதைச் சொல்லுங்கள் !" என்றாள் அகிலா, தங்கையைப் பார்த்து முறுவலித்தபடி.

"பெரிய பழிகளுக்கு ஆளாகாமல் தப்பவேண்டும் என்றால் மாறித்தானே ஆகவேண்டும்?" என்றாள் விமலா.

"சரி, சரி. பழைய கதையைத் தொட்டுக்கொள்ள வேண்டாம்" என்றான் தியாகராஜன்.

"எல்லாம் சரிதான்; இப்பவும் இன்னொரு கவலையைத் தருகிறாளே, விமலி ?" என்றாள் சாவித்திரி.

"நல்ல கதை ! பெண்ணாய்ப் பிறந்தவர்கள் பெற்றவர்கள் அருகிலேயே இருக்க முடியுமா? அதற்கென்ன, அக்காவுக்கு ஏதோ உள்ளூரில் இருக்கும்படி வாய்த்து விட்டது" என்றாள் விமலா.

"ஆகா! விமலாவின் இத்தகைய பேச்சைக் கேட்கிறபோது எனக்குப் பரவசமாக இருக்கிறது" என்றார் முத்துசாமி. பிறகு தொடர்ந்து, "நீ சொல்வது நியாயந்தான் விமலி. உன் அம்மாவுக்கென்ன, எல்லாரும் அவளையே சுற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்றுதான் அவள் சொல்வாள். அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்பதுபோல் கணவனுக்குப் பிழைப்பு எங்கேயோ அங்கேதான் மனைவியும் இருக்க வேண்டும். சீதை, திரௌபதி எல்லாரும் அப்படித்தானே?"—என்று அவர் கூறி முடிப்பதற்குள் சாவித்திரி, "நன்றாயிருக்கிறது உபமானம்!" என்று முகத்தைத் தோளில் இடித்துக்கொண்டாள். அதைக்கண்டு எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"நெருப்பு என்றாலே வாய் வெந்துவிடுமா ? பேச்சுக்குச் சொன்னால்..." என்றான் தியாகராஜன்.

"என்னவோ அம்மா, நீ போகப்போகிற ஊர் எங்கோ ஆயிரம் மைல் தூரத்திலே இருக்கிறதாம். ஏழெட்டு நாள் பயணமாம். நாங்கள் கிழங்கள்; சிறகொடிந்த பட்சிகள். உன் கணவரிடம் சொல்லி சீக்கிரமே இவ்விடத்திற்கு மாற்றிக்கொண்டு வந்துவிட ஏற்பாடு செய்" என்ற

சாவித்திரி முன்றானையை எடுத்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள். அவள் செயல் அனைவரின் உள்ளங்களையும் தொட்டுவிட்டது.

''யார் சொன்னது இப்படியெல்லாம்? ஆயிரம் மைலாவது, எட்டு நாள் பயணமாவது? சுத்தப் பிதற்றல்! முன்னூறே மைல்தான். நினைத்த மாத்திரத்தில் பிளேனில் வரலாம்; போகலாம்'' என்றான் சுந்தரம்.

கார் வந்து போர்ட்டி கோவில் நின்றது. சந்திரசேகரனும் உஷாவும் வந்தார்கள். சூழ்நிலையில் மாறுதல் ஏற்பட்டது.

''திங்கள் காலை பத்துமணிக்கு நாள் நன்றாயிருக்கிறதாம். எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன்'' என்று முத்துசாமியிடம் பணிவுடன் கூறினான் சந்திரசேகரன். சுந்தரம் மெல்ல அவனிடம் சாவித்திரியின் மன நிலைபற்றிக் கூற எத்தனித்தான். விமலா தொலைவிலிருந்து ஜாடை செய்து அவனைத் தொடர்ந்து பேச விடாமல் தடுத்துவிட்டாள்.

மேலும் சிறிது நேரம் பேச்சு ஓடிற்று. விமலா பிரயாணத்திற்கு வேண்டியவற்றை எடுத்துவைக்கத் தொடங்கினாள். அகிலா, நளினி, உஷா மூவரும் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தனர். அவள் அன்பு மொழிகளாலும் மோகன முறுவலாலும் அனைவரையும் ஆட்கொண்டபடி தன் அலுவலைக் கவனித்தாள்.

21. ஆனந்த பைரவி

ரெயில் ஓடிக்கொண்டிருந்தது. சந்திரசேகரனும் விமலாவும் அதில் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். வெளிப்புறக் காட்சிகளில் பார்வையை ஓட்டியிருந்த விமலா நீண்ட நேரத்திற்குப்பின் முகத்தை ஜன்னலிலிருந்து உட்புறத்திற்கு இழுத்துக்கொண்டாள். சந்திரசேகரன் தன்னையே நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

அவன் முகம் சலனமற்றிருந்தது. பார்வையில் குறிப்பிடக்கூடிய பாவம் எதுவும் இல்லாமல் இருந்தது—அன்பு ஒன்றைத் தவிர.

விமலா அவனை நோக்கி முறுவலித்தாள். அவனும் பதிலுக்குப் புன்முறுவல் செய்துவிட்டுக் குழைவான குரலில், ''நினைவு முழுவதும் தியாகராஜ மந்திரத்தில் இருக்கிறது; இல்லையா?'' என்றான்.

விமலா நிதானமாக, ''ஊம்; அப்படி ஒன்றும் இல்லை'' என்றாள்.

''பிறந்தது முதல் ஒன்றிப் போயிருந்த இடத்தையும், பாசமுள்ள மனிதர்களையும் பிரிந்து பரிசயமில்லாத மனிதனோடு அறிமுகமில்லாத இடத்திற்குப் போகிறபோது யாருக்குமே என்னவோ போலத்தான் இருக்கும்'' என்று அவன் முடிப்பதற்குள் அவள் சொன்னாள்.

''தவறு. எனக்கு அப்படிப்பட்ட வியாகூலம் எதுவும் இல்லை. ஒரு வேளை, தியாகராஜ மந்திரம் பழைய நிலையிலே இருந்திருந்தால் மனசு சிறிது குழம்புமோ என்னவோ, அவ்விடத்து நிலைமைதான் சீர்திருந்தி விட்டதே!''

அவள் பேசி முடிக்குமுன் அவன் சிரித்தான்; பேசி முடிந்ததும் அவளும் சிரித்தாள்.

''என்ன விமலி?''

''என்ன?''

''எதற்குச் சிரித்தாய்?''

''நீங்கள் எதற்குச் சிரித்தீர்கள்?''

''நீ சொன்னதைக் கேட்டுத்தான்.''

''நானும் அதை எண்ணித்தான் சிரித்தேன்.''

''அவ்விடத்து நிலைமை சீராவதற்காக நீ கல்யாணத்திற்கு இசைந்தாய். அப்படி நீ இசையாவிட்டால்......''

"இந்தப் பயணமும் இல்லை; அவ்விடம்பற்றி நான் நினைக்கக் காரணமும் இல்லை. இதுதான் பொருளற்ற பேச்சு என்பது."

மறுபடியும் இருவரும் கலகலவென்று சிரித்தார்கள். அந்த முதல் வகுப்புப் பெட்டியிலே அவர்களைத் தவிர இன்னும் மூன்று பிரயாணிகளும் இருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் பேச்சைக் கவனிக்கவில்லை.

திருமணம் ஆன மூன்றும்நாள் சந்திரசேகரன் விமலாவிடம் சொன்னான், "திங்களன்று நான் 'டியூடியில் ஜாயின்' ஆகவேண்டும் விமலா. நீ...தியாகராஜ மந்திரத்திலேயே இருக்கிறாயா, அல்லது மாம்பலத்தில் உன் கணவன் வீட்டில் வந்து இருக்கிறாயா? உன் அபிப்பிராயத்தைச் சொல். அதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்துவிட்டுப் போகிறேன்" என்று.

"போகிறேன் என்றால்?......வெளியூருக்கா?"

"ஆமாம். பம்பாய்க்கு. என் வேலையே ஊர் சுற்றுவதுதானே?"

"ஓ!...முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன்! மறந்து போனேன்"

"அது இருக்கட்டும்; நான் கேட்டதற்குப் பதிலே சொல்லவில்லையே?"

"என்னைக் கேட்கவேண்டுமா? எஜமானர் உத்தரவு எப்படியோ அப்படி நடந்துகொள்ள அடியாள் காத்துக்கொண்டிருக்கிறேன்."

"ஏது உனக்கு இந்தக் கலையும் தெரியுமா?"

"எந்தக் கலை?"

"நடிப்புக் கலை."

"நான் நடிக்கவில்லை இப்போது. சற்றுத் தமாஷாகப் பேசினேன். அவ்வளவுதான். உங்களிடந்தானே இனி நான் அப்படிப் பேசலாம்? ஒருவேளை...உங்களுக்கு...அது...பிடிக்காதோ?"

"சே சே. உன்னிடம் உள்ள எல்லா அம்சங்களுமே எனக்குப் பிடித்தம்தான் விமலி. நானும் தமாஷாகத்தான் பேசினேன். அ...... ஒன்று செய்கிறாயா? என்னோடு வந்துவிடுகிறாயா?"

"பம்பாய்க்குத்தானே? நானே கேட்கவேண்டும் என்றிருந்தேன்."

"என்னவென்று?"

"நீங்கள் போகிற இடங்களுக்கெல்லாம்—முடிந்தால்—என்னையும் அழைத்துப்போங்கள் என்று."

"ஓ! முடிந்தால் என்ன? கட்டாயமாக அழைத்துப்போகிறேன். பல ஊர்களைப் பார்க்கவேண்டும் என்று உனக்கு ஆசை இருந்தால்—"

"ஊர்களைப் பார்க்கும் ஆசை இல்லை எனக்கு. வேறு குறிக்கோள்."

"என்ன அது?"

"க்ஷேத்திராடனம்."

"ஓகோ? எல்லாருக்கும் அறுபதில் ஏற்படும் ஆசை உனக்கு இருபதிலேயே ஏற்பட்டு விட்டதா?"

சந்திரசேகரன் சிரித்தான். விமலா பின்னல் நுனியை வருடியபடி நிலத்தை நோக்கியிருந்தாள்.

"வீணையுடன் எல்லா க்ஷேத்திரங்களுக்கும் போகவேண்டும்; ஒவ்வொரு சந்நிதியிலும் இசைக் கைங்கரியம் புரியவேண்டும். அதன் மூலம் என் உள்ளத்திற்கு அமைதி"—

பொட்டுப் பொட்டாக நிலத்தில் விழுந்த கண்ணீர்த் துளிகளைப் பார்த்த சந்திரசேகரன் பதறிப்போய்ச் சட்டென்று அவள் மோவாயைப் பற்றி முகத்தை நிமிர்த்தினான். அவள் கண்களிலே நீர் சுழன்றது. இதழ்களிலே முறுவல் தவழ்ந்தது. அவன் அவள் கண்ணைத் துடைத்தான். பிறகு உறுதியான குரலில் சொன்னான்.

"இதோ பார் விமலி, இதுமட்டும் இல்லே; நீ இன்னும் என்ன என்ன விரும்பினுலும் அனைத்தையும் அட்டியின்றி நிறைவேற்றி வைக்க நான் தயாராக இருக்கிறேன் விமலி. ஆண்டவன் அதற்காகவேதான் என்னைப் படைத்திருக்கிருன். திருமணம் என்ற தொடர்பு அதற்கு ஒரு காரணம். நல்லது விமலி. அப்படியே செய்யலாம். எப்படியாவது நீ நிம்மதி பெற்ருல் அதுவே போதும்."

சந்திரசேகரன் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்தான். விமலா மகிழ்ச்சி பொங்கத் தயாராளுள். அவளுடைய மகிழ்ச்சியில் பல அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. தியாகராஜ மந்திரத்தில் சூழ்ந்திருந்த சோக நிலேயும் சுந்தரம்—அகிலா தாம்பத்திய வாழ்க்கையிலே கவிந்திருந்த பேரிருளும் அகன்றது முதல் அம்சம். அதற்காக அவள் மணந்துகொண்ட புருஷன் உத்தம ரத்தினமாக இருப்பதும், அவளுடைய நிபந்தனையை ஏற்றுகொண்டதும் இரண்டாவது அம்சம். கலேந்திருந்த சுருதி சேர்ந்துவிட்ட நிலேயில் அவளுடைய இன்னிசையைத் தேவாரப்பணமாக்கி அதன் மூலம் மனதிற்குச் சாந்தி தேடிக்கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது மூன்ருவது அம்சம். கணவனேடு சென்று மீள்வதாகப் பிறந்த வீட்டினருக்குப் போக்குக் காட்டினுள் அவள். அவர்களும் நம்பினுர்கள்; மகிழ்ச்சியாகவே விடை தந்தார்கள். பெற்ருேர் விஷயத்திலே அவள் நடந்துகொண்டது போலவே அவள் விஷயத்தில் அவளுடைய கணவன் நடந்து கொண்டான்.

"உத்தியோக நிமித்தமாக நீங்கள் செல்லும்போது நானும் வருகிறேன், க்ஷேத்திராடனம் செய்ய' என்ருள் அவள். அவன் உத்தியோகத்தையே விட்டு விட்டான். அவன் பங்குக்குக் கிடைக்கக்கூடிய சொத்து நிரம்ப இருந்தது. அவன் வாழ்வெல்லாம் அவள் மகிழ்ச்சியில் அவளே மகிழ்விப்பதைவிட உத்தியோகம் என்ன முக்கியம்? அப்படிச் சம்பாதித்து என்ன ஆகவேண்டும்? பின்னுல் அவசியமானுல் வேறு வேலே தேடிக்கொள்ளத் தன்னுல் முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆகவே வேலேயை உதறி விட்டான். அதை அவளிடம் சொல்லவில்லே. போதிய வசதிகளுடன் இருவரும் பிரயாணத்தைத் தொடங்கிவிட்டார்கள்.

வண்டி ஒரு நிலேயத்தில் நின்றது. துணைப் பிரயாணிகள் இறங்கிச் சென்றனர். வேறு யாரும் அங்கே ஏறவில்லே. வண்டி புறப்பட்டது. சந்திரசேகரனும் விமலாவும் தனிமையில் இருந்தனர்.

முன்பு அவன் அவளேயே பார்த்தான்; அவள் வெளிப்புறத்தை நோக்கிக்கொண்டிருந்தாள். இப்போது அவன் செய்திப் பத்திரிகையில் கண்ணேட்டம் செலுத்தினுன்; அவள் அவனேயே கூர்ந்து நோக்கினுள். அதை அவன் உணர்ந்தே இருந்தான்.

சிறிது நேரத்திற்குப் பின் அவள் கண்ணைத் துடைத்துக்கொண்டாள். அவன் சட்டென்று நிமிர்ந்து அவளேப் பார்த்தான்.

"என்ன விமலி?"

அவள் பதில் சொல்லவில்லே; முறுவலித்தாள்.

"சொல்லமாட்டாய்?"

"என்னே எல்லாரும் விசித்திரப் பிறவி என்பார்கள்; உங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நான் துரும்பு."

அவன் சிரித்தான்; அவள் தொடர்ந்தாள்.

"'இப்படிக்கூட ஒரு மனிதர் உலகில் இருக்க முடியுமா?' என்று எண்ணி எண்ணி ஆச்சரியப்படுகிறேன். என் நிபந்தனையைக்கேட்டு, அதற்கு இசைந்து,என்னே மணந்து, மணந்த பிறகும் அதே மாதிரி நடந்து கொள்கிறீர்களே உங்களே என்னவென்று சொல்வது?"

"பைத்தியம் என்று."

''பைத்தியமா!''

''ஆமாம்; விமலா பைத்தியம்!...'' அவன் சிரித்தான். அவள் படபடவென்று சொன்னாள்.

''என் அந்தரங்கத்தை அறிந்தால் நீங்கள் சிரிக்க மாட்டீர்கள். உங்களுக்கு அதை ஒளித்துத் துரோகம் செய்யவும்.........''

''எனக்குத் தெரியாமல் உன்னிடம் அந்தரங்கம் ஏதாவது இருந்தால் அல்லவோ?''

''இருக்கிறது''

''தெரியும்.''

''என்ன?......சொல்லுங்கள் பார்க்கலாம்.''

''சுந்தரம்''

''ஹா!......''

''என்ன? தெரிந்து, வேண்டுமென்றுதான் உன்னை மணந்தேன் விமலி. சுந்தரமும் சொன்னான், தியாகும் சொன்னான்.''

''காலப்போக்கில் என் மனம் மாறிவிடும் என்று உங்கள் நினைவு.''

''அல்ல. நீ என்னுடையவளாகவேண்டும் என்று முதலில் நினைத்தேன். பிறகு உன் எழிலும், குணமும், கலையும் என் அருகே இருக்க வேண்டும் என்று எண்ணினேன். பின்னர் உன் பிறந்தவீட்டுச் சூழ்நிலை மாற நீ மணமாலை பெறவேண்டும்; பேரளவில் அப்படி வேறு யாரும் இசையமாட்டார்களாகையால் நானே இசைவதென்று உறுதி கொண்டேன் விமலா. கவலையே படாதே. என்னால் என்றுமே உனக்கு—உன் கற்புக்கு—ஒரு தீங்கும் நேராது. நான் உன் காவலனாக இருப்பேன். உன் மனம்போல நீ க்ஷேத்திராடனம் செய்; கடவுளர் சந்நிதிகளில் வீணை வாசி; பாடு. உன் உள்ளம் அமைதி பெறட்டும் எனக்கு அது போதும்.''

விமலா அவன் காலடியிலே பொத்தென்று விழுந்தாள். கண்ணீரால் அவன் பாதங்களைக் கழுவினாள். அவன் குனிந்து அவளை வாரி எடுத்தான். அவள் துவண்டு அவன்மீது சாய்ந்தாள். சற்று நேரம் ஆலிங்கன நிலையில் இருந்தனர்.

''என் தெய்வமே! என் இசை வெள்ளம் நாடெங்கும் பரவ வேண்டும்; அதன் மூலம் சாந்தி பிறக்கவேண்டும் என்று மட்டும் முன்பு நினைத்தேன். இப்போது. 'அப்படிப் பிறக்கிற சாந்தியிலே அன்பருக்கு உண்மை அன்பு செய்யும் ஆற்றல் பிறக்கவேண்டும்' என்று கடவுளை வேண்டுகிறேன்.''

''உன் ஆனந்த பைரவி கல்லையும் கனியவைக்கும். கவடற்ற உன் நெஞ்சும் தானாகவே கனியும் விமலி. இப்பிறவியில் அது நடைபெறு விடினும் மறு பிறவியிலாவது.........''

''இல்லை; இல்லை. இப்பிறவியிலேயே என்றாவது ஒரு நாள் நான் உங்கள் மனைவி ஆகிவிடுவேன். உங்கள் அன்பு அதைச் சாதித்து விடும்.''

''அப்படி நேருகிறபோது நேரட்டும். இப்போதைக்கு நீ உன் வீணையை எடுத்து வைத்துக்கொண்டு.........''

''இதோ!'' என்று எழுந்த விமலா, வீணையுடன் அமர்ந்தாள். எடுத்த எடுப்பிலே ஆனந்த பைரவிதான்! ரெயிலின் ஓசை எங்கே? எதிரே சிலையாய்ச் சமைந்திருந்த சத்திரசேகரனின் செவியும் கருத்தும் ஆனந்த பைரவியை அநுபவித்துத் திளைத்தன. கண்கள் அவள் பேரெழிலைக் கண்டு கண்டு மகிழ்ந்தன. ஓடும் ரெயிலில் அமைதியே வடிவாய் அமர்ந்து வீணைத்தந்திகளிலே விரல்களை ஓட்டிய விமலாவின் எழிலும் அவள் குரலும் வீணை ஒலியும் ஒருங்கு கூடி அங்கே தெய்வீகச்சூழலை ஏற்படுத்தின. அவள் இசைத்த ஆனந்த பைரவி காற்றிலே மிதந்து திசையெல்லாம் பரவிக்கொண்டிருந்தது. அவள் இசைக்கப் பிறந்தவள்; இசைத்துக்கொண்டே இருந்தாள்.

முற்றும்.

வாசகர்களே !

உங்கள் வாழ்க்கையின் சமீப எதிர்காலத்தைப் பற்றி இரண்டு கேள்விகளுக்கு நமது "கணபதி" ஜோஸ்யர் இனாமாகப் பதில் தருகிறார்.

இதோ, மேலிருக்கும் "ஸ்ரீ மகா கணபதி" மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. உச்சிஷ்ட மகா கணபதியாகும். இவரை ஆராதித்து உபாஸனை செய்துவரும் நமது "கணபதி ஜோஸ்ய"ரின் வாக்கு மிகவும் பலிதமாகவே இருக்கிறதென்று அனைவரும் அனுபவத்தில்கூறுகிறார்கள். ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள வாசகர்கள் மட்டும் கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து தனித்தாளில் கேள்விகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஜாதகம் இருந்தால் அவசியம் அனுப்பி வைக்கவும். கூப்பன் இல்லாது வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. அந்தந்த மாதக் கூப்பனை பூர்த்தி செய்து பிரதி மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். பின்னர்வரும் கூப்பன் கவனிக்கப்படமாட்டாது.

—ஆசிரியர்,

இங்கே கூப்பனைக் கத்தரிக்கவும்,

1960 மார்ச் மாதக் கூப்பன்

என் சமீப, எதிர் காலத்திய 2 கேள்விகளைத் தனித்தாளில் எழுதி இத்துடன் வைத்துள்ளேன்.

என் பெயர்..

தற்போதைய விலாசம்..

உத்தியோகம்...

கேள்விகள் எழுதின தேதி..

" " நேரம்..

நான் விரும்பும் புஷ்பம்...

108-க்குள் நான் கூறும் எண்...

(நக்ஷத்திரம் தெரிந்தால்)...

என் பிறந்த நக்ஷத்திரம்...

என் தற்போதைய வயது...—

கூப்பன் அனுப்ப வேண்டிய விலாசம் :

கணபதி ஜோஸ்யர், c/o "மாலா"

சதர்ன் அவின்யு, ஆழ்வார்பேட்டை, மதராஸ்–18.

(கணபதி ஜோஸ்யர்: 13. ப்ராம்மணத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.)

மேஷராசி: அசுவதி பரணி கார்த்திகை முதல் பாதம். தேகசுகம் பலருக்கு திருப்தி கரமாகயிருக்கு மென்றாலும், ஜாதகரீதியாக ஒரு தலை வலி, கண் உபத்ரவம் முதலியவற்றால் ஸ்ரமப் பட வேண்டியவர்களுக்கு மாத்ரம் இம்மாதம் உஷ்ணம் அதிகமாகி தலைவலியும், கண்வலியும், சிலருக்கு இருக்கும். இம்மாதம் முதல் மூன்று வாரங்களிலும் தனப் பெருக்கும், பணவசதியும், நண்பர் உதவியும், மேல் பதவியும் எதிர் பார்க் கலாம். கடைசி வாரத்தில் சுப வீரயமதிகமாக, கடன் வாங்க நேரும். உற்சாகமும் சந்தோஷமுமதிகம். சிறு பிரயாணம் செய்ய அரசாங்க மூலம் நற்செய்தி பெற வரி மூலமிருந்த குழப்பம் தீர நன்று. உத்யோகத்தில் தன் முயற்சியால் வெற்றியுண்டாக, ப்ரமோஷன் கிடைக்கவும் மேலதிகாரி நட்பு மேலும் அதிகமாகவும் வ்யாபாரிகளுக்கு இம்மாதத்தில் அதிக தனலாபமிருக்கும். முடங்கிய தனத்தை திரும்பப் பெறலாகும். சேவகர் கள் 28 தேதி வரை ஒத்துழைக்க, அப்பால் போனஸ் முதலியன எதிர் பார்ப்பதால் கோபமோ, கொடுப்பதால் தன வ்ரயமோயிருக்கும். மந்தமா யிருந்த தொழிலும் இனி இது பயன் படாது என எண்ணியிருந்த தொழிலும், புனர் ஜன்மம் எடுத்தது போல், புத்துயிர் பெற்று வலு வடைந்து உற்சாகத்தை யளிக்கும் ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி முதலிய இனங்களில் வெற்றியுண்டு. ஜாதகரீதியாக சுப தசை புக்தி நடப்பவர்கள் ஏப்ரல் 3 தேதிக்குள் லாட்டரி பந்தயம் முயற்சி செய்தால் லாபம் கிடைக்கும்: விவகாரம் வெற்றிகரமாக முடிவடையும் விவாஹம் நடைபெறும். கோபித்துக் கொண்டு கணவனை விட்டுப் பிரிந்திருந்த பெண்மணிகள் நல்லகாலம் ஆரம்பிப்பதால் கணவனுடன் கூடி ஒற்றுமையுடனிருக்க நேரும். சிலர் வீடு கட்டுவதற்கு நிலம் வாங்க நேரும். தமபி தமயன் மூலம் எதிர்பாராத உதவியும் தனலாபமுமிருக்கும். மாதாவினுலேற்பட்ட மனக்கஷ்டம் மறையும். புத்ரர்கள் மூலம் உற்சாக மாக அதிகச் சிலவு செய்யவும் மனைவிக்கு நூதன ஆடையாபரணம் பெறவும் வாகனத்தை சரிப்படுத்தவும் நேரும். இம்மாதம் ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்கலாம். இம்மாதம் நன்றே.

ரிஷபராசி: கார்த்திகை 2, 3, 4. பாதங்கள்; ரோஹிணி மிருக சீரிஷம் 1, 2, பாதங்கள். அஷ்டமத்தில் குரு சனி வீற்றிருக்கிறதே. இவ்வாண்டு எவ்விதம் நன்மை புரியுமென சந்தேகப் பட்டுக் கொண்டு மனந்தளர்ந்தவாகள் தாம் கோசார பலன் பார்க்கும் விதம் தவறு மேலும் சூக்ஷ்மமாகப் பார்க்க வேண்டிய மார்க்கம் இருக்கிறது போலும் என உணரும்படி, எதிர்பாராத சுபபலன்கள் இம்மாதத்தில் நடைபெறும். தேக சுகம் திருப்திகரமாயிருக்கும். தனவசதியும் ஸ்ரமமின்றி ஏற்படும். தூர தேசப்ரயாணத்திற்கும் வெற்றிகரமாக ஏற்பாடுகள் நடைபெறும். உத்யோகத்தில் ப்ரமோஷனிருக்க எதிர்ப்பாகயிருந்த மேலதிகாரிக்கு உத்யோகம் மாறி அவர் பிரிவதால் கஷ்டம் ஒழிய நிம்மதி உலாவும் வ்யாபாரத்தில் கூட்டாளி மூலமிருந்த நஷ்டம் குறைய தன் யனத்தனத் தால் அதிக லாபமும் வக்கீல் உதவி நாடி தாமதித்து வந்தோருக்கு எச்சரிக்கை கொடுத்த வண்ணமாயிருக்க முடங்கிய தனத்தைத் திரும்பப் பெறவும் பாங்க் வசதியதிகம் ஏற்படவும் அரசாங்கம் அதிக சலுகை கொடுக்கவும் விலைவாசிகள் சற்று தடுமாறினுலும் தனக்கு

நஷ்டம் வராமலும் லாபம் கிடைக்கும் வகைகளையே கையாள நேரும். தொழில் மூலம் வெற்றியும் போட்டியில் ஜெயமும் விவகாரம் தீர்ந்து நன்மையும் உண்டாகும். வெளியூர் சென்றவர் திரும்பி வந்து திடீரென மணம்புரிய நேரும். அதிக உற்சாகம் அளிக்கும் மாதம் இதுவே. ஸ்பெகுலேஷன் லாட்டரி மூலம் லாபம். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் முதலியன எடுக்கலாம். இனி அஷ்டமச் சனியின் தொல்லை குறையும். பரீக்ஷை தேரும். ஐ. ஏ. எஸ். ஆடிட் முதலிய பரீட்சைக்கு ராபர்ட்ப்ரூஸ் போல் விடாமல் முயற்சி செய்து வந்த ரிஷபக்காரர்கள் இவ்வாண்டு பரீக்ஷை தேறுவார். சுப பலனையும் அடைவார். மாதாவின் தேக சுகம் குன்றுவதாலும் புத்ரர்களுக்கு எதிர்ப்பும் ஏமாற்றமும் இருப்பதாலும் மனைவி மூலம் சுபவ்ர்யமிருக்கு மாதலாலும் வழக்கத்திற்கு மேல் ஓரளவு அதிகச் சிலவு. பிதாவின் உதவி கிடைக்கும். பிதாவிற்குப் பதவி உயரும். இம்மாதம் மிக நன்று.

மிதுனராசி: மிருகசிரிஷம் 3, 4, பாதங்கள். திருவாதிரை புனர் பூசம் 1, 2, 3, பாதங்கள். சென்ற மாதத்தைவிட இம்மாதம் ஓரளவு நன்றே. தேக சுகம் கெடாமல், ஆரோக்கியம் ஏற்பட்டுக் கொண்டு வரும் தன வசதியுமுண்டு. அதனல் மேல் அதிகச் சிலவும் செய்ய நேரும். முடங்கியதனத்தில் ஓர் பகுதியைப் பெறலாம். எதிர்ப்பும் ஏமாற்றமும் அதிகமிராது. சஞ்லம் தீரும். தீர்மானத்துடன் எக்காரியத்தையும் செய்வார். நிம்மதிக்கு பாடு படுவார், உத்யோகத்தில் மாறுதலிருக்கக் கூடுமோ எனும் பய மேற்படும் சிலருக்கு மாறுதலும் வரும். மேலதிகாரிகள் மாறலாம். வ்யாபாரம் சற்று வலுவடையும். சேவர்கள் ஒத்துழைப்பார். கஷ்டத்தையளித்தவர் விலகி விடுவார். தொழிலில் மாறுதல்கள் ஏற்படும். ஏப்ரல் மாதம் மிக நன்று. கூட்டாளிகளுக்கு கஷ்டம் ஆரம்பம். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் லாபம் கிடைக்கும். நூதன ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்க நேரும். சில மாதங்களில் அதிக தன வசதியுண்டாகி, முன்பு இருந்த கடன் தீரும். பாங்கில் பணம் கூடும். விவகாரம் நூதனமாக ஏற்பட்டாலும் அவைகள் கஷ்டங்களை ஒருங்கே ஒழித்து ஐயத்தையும் கொடுத்து உற்சாகத்துடனிருக்க நன்மைபுரியும் விவாஹம் ஏற்படாகும். புத்ரஜனனமிருக்கலாம். தூர தேசம் செல்ல விரும்புவரும், மேல் படிப்பிற்கு முயற்சி செய்பவரும் ஏப்ரல் மாதம் யத்தனிப்பது நன்று. சிலர் குடியிருக்கும் வீடு மாறுவார். தம்பி மூலம் வைத்யச் சிலவு; தாய் மூலம் மனவேதனை, புத்ரருக்கு நூதன ஆடையாபரணம் மனைவிக்கு நோய், பிதாவிற்கு சுயவ்ரயம் முதலியன எதிர் பார்க்கலாம். இன்ஜினியர், கணக்கர் முதலியோருக்கு இம்மாத முடிவில் உத்யோக உயர்வு ஏற்பட கோட்கள் நன்கு சஞ்சரிக்கின்றன.

கடகராசி: புனர்பூசம் 4ம்பாதம்–பூசம். ஆயில்யம், அலைச்சலதிகம். வேலையும் கடுமை, ஆகவே தேக சுகம் சற்று கெடும். பலவித ஆஹாரம் உட்கொள்வதாலும் ஜீரணக் குறைவாலும் ஸ்ரமமுண்டு. தூர தேசம் செல்லவோ விவகார விஷயமாக தலை நகருக்கோ ப்ரயாணம் செய்ய நேரும். வ்யாபார சம்பந்தமாகவும், மேல் படிப்பிற்காகவும் வெளியூர் செல்ல நேரலாம். உத்யோகத்தில் பலருக்கு மாறுதலுண்டாகும். சிலருக்கு பழைய வேலைக்குத் திரும்பி வர நேரும். வரும்படி குறையும். சிலவு அதிகமாகும். சிறு காரியங்களுக்குக் கூட பல முறை யத்தனிக்க வேண்டும். தாமதமும் தடையும் உற்சாகத்தைக் குறைக்கும். வெறுப்புண்டாகும். நூதன வேலைக்கு முயற்சி செய்தாலும் விவாஹ விஷயமாய் யத்தனித்தாலும், பலிதமிருப்பது கடினம். ஆகவே லாட்டரி, ஸ்பெகுலேஷன் பந்தயம் முதலிய மூலம் எவ்விதம் சுப பலன் எதிர் பார்க்கலாம். சில மாதங்கள் செல்லட்டும். நமக்கும் நன்னாள் வரும்

என்று தைரியத்துடன் விடாமுயற்சி செய்து வரவும். தனவசதி
குறைவாலோ, பண்டங்கள் கிடைக்காத காரணத்தாலோ, தாமதமிருக்க
மனைகட்டுவோர்களுக்கு மனதேதனை யதிகம். தம்பிக்கு எதிர்பாராத
நஷ்டம் மாதமுடிவில் இருக்கக்கூடும். தாய்க்கு இம்மாதத்தில் பல சுப
பலன்கள் நடைபெறும், மனைவிக்கும் நூதன பொருள் சேர்க்கையிருக்கும்.
பிதாவின் தேக சுகம் கெடும், தமயன் நண்பர் இவர்களுக்குத் திடீரென
நன்மையும் மேன்மையுமிருக்கும். இம்மாதம் க்ஷேத்ராடனத்திற்கு நன்று.
சட்டமீறி நடப்பவர் திட்டமாக தண்டனைக்குள்ளாவார்.

ஸிம்மராசி: மகம். பூரம். உத்ரம் முதல்பாதம். தேக சுகம் சற்று
பாதிக்கப்படும். யானைக்கால், வாயு பீடை முதலியனவற்றின் மூலம்
கஷ்டப்படுபவர்கள், சுகாதாரத்தை கவனித்து வரவும் 11தேதிக்
கப்பால் தனவசதி குறையலாம். எதிர்பாராத அபாரச்சிலவுகளும், நண்பர்
களுக்கு உதவி புரிவதன் மூலம் பண நெருக்கடியுமிருக்கும். சிறுப்ராயா
ணங்கள் அடிக்கடி செய்ய நேரும். பல காரியங்கள் செய்ய யோஜிப்பதும்.
சிலவற்றையே செய்யத்துணிவதும், பலன் திருப்திகரமாகயிராததும்
உற்சாகத்தை குறைக்கும். உத்யோகத்தில் சிறு புடுங்கல்கள் அதிக
மாகவே ரஜாவில் செல்வது நன்று. வெய்யில் கடுமையென்றால் நிழலைத்
தேடி, நிழலில் நிற்பது எப்படி உசிதமோ, அதேபோல் மேலதிகாரி நட்பு
குறையும், உற்றார் உறவினரும் விரோதத் தன்மை பாராட்டுவார்
என்பதை கிரகங்கள் குறிப்பதால் ரஜாவில் வெளியூர் சென்று வருவது,
கஷ்டத்தைத் தடுத்து, பணநஷ்டமிருந்தாலும், தனதிஷ்டத்தை பூர்த்தி
செய்வதாகும். வ்யாபாரத்தில் சில்லரைத் தொல்லைகளிருக்கும். கூட்டாளி
உதவி புரிவது குறையும். அவர்களுக்கும் நோய் பீடிக்கலாம் தொழில்
மூலம் சிறு உபத்ரவங்களிருக்கலாம். நூதன வாகனம் வாங்கவோ, வீடு
விலைக்கு வாங்கவோ, அல்லது மனைகட்டவோ, கடன் வாங்க நேரும்.
அதர்மவழியில் நடப்பவர்களுக்கு மாதயிறுதியில் சில யத்தனங்கள்
பலிக்கும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் முதல் 20தினங்களில்
நஷ்டம், பிற்பகுதியில் ஓரளவு லாப மேற்படலாம். விவகாரம் வராமல்
தடுப்பது நன்று. தவறி வந்தாலும், கோர்ட் லீவுக்குப் பிறகு, திறக்கும்
கோர்ட்டில் கேஸ் எடுக்கும்படி முயன்றால் ஜூலையில் ஜயம் பெறலாம்.
விவாஹ விஷயமாய் வீண் பேச்சும், அலைச்சலும் ஆலோசனையும்
தானிருக்கும். சகோதர்களுக்கு உத்தமமான பலன்கள் நடைபெறும்.

கன்னிராசி: உத்ரம் 2, 3, 4 பாதங்கள். ஹஸ்தம், சித்திரை 1, 2
பாதங்கள். தேகசுகத்திற்கு யாதொரு குறைவுமில்லை. நோய்வரினும்
சீக்ரம் குணமடைந்துவிடும். தனவசதி அதிகமாக. கடன் கேட்பதும்
கிடைக்கக் கூடுமாதலால். தான் பலகாலமாய் எண்ணியிருந்தவைகளை
இப்பொழுது செய்து முடிக்கலாம், உத்யோகத்தில் உயர்வு ஒன்றுமில்லா
விட்டாலும், சகாக்களின் உதவியதிகம். தன் கஷ்டத்தை இதரர் ஏற்றுக்
கொண்டு ஓரளவு ஸௌகர்யத்தையளிப்பார். இடப் பெயர்ச்சியோ, குடி
மாறுவதோயிருக்க நியாயமில்லை. மேலதிகாரிகளின் நட்பு திருப்திகரமாக
விருக்கும். அதிக முதல் போட்டு, வ்யாபாரத்தை வலுவடையச் செய்வார்.
வரிமூலமிருந்த ஸ்ரமம் குறையும். வழக்காட நேரின், சீக்ரமே நியாயம்
வழங்கப்படும். மார்ச்25 தேதிக்கப்பால் மேற்கூறிய சுப பலன்கள் சற்று
குறையும். ஆகவே மாத ஆரம்பத்தில் தனதிஷ்டத்தைப் பூர்த்தி செய்ய
தீவிர முயற்சிசெய்யவும். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம்வருவது
போல் தோன்றி கையில் உள்ள தனத்தை இழக்கநேரும். எதிர்பாராது,
திடீரென லாபம்பெற இனி இவ்வாண்டு 1960 நல்லதல்ல. உள்ள
தைக்கொண்டு உள்ளம் பூரிப்பதே நன்று. மனைகட்ட ஏற்பாடு துவக்க
லாம். விவாஹ விஷயமாக யத்தனங்கள் செய்து கொண்டே வரவும்.
கைகூடி வருவது கடினம். தசா புக்தி வலுவாயிருந்தால்தான் இவ்

வருஷம் விவாஹம் நடைபெறும் இல்லையேல் 1961ல் தான் மணம்புரிய நேரும். சிலருக்குப் புத்ர ப்ராப்தி உண்டாக நல்லகாலமாரம்பம்.

துலாராசி: சித்ரை 3, 4 பாதங்கள்-ஸ்வாதி-விசாகம் 1, 2, 3 பாதங்கள். தேகசுகம் மிக திருப்திகரமாயிருக்கும். மிகக்கடினம் என எண்ணுபவைகள் யாவற்றையும் இம்மாதம் யத்தனித்தால் ஜயத்துடன் சீக்ரம் பலிதமாகும். உற்சாகம் நிகம், குதூகலமாயிருக்க பல சுப பலன்கள் நடைபெறும், உத்யோகத்தில் உயர்வுண்டாக, நட்பதிகமாக, தனவசதியும் ஸௌகரியமாகயிருக்கும். வெளியூருக்கு உத்யோகம் மாறிச் சென்றிருந்தவர், தனது நிதிந்தரமான இடத்திற்குத் திரும்பிவருவார். சிலவு குறையும். உற்ரார் உறவினர் கூடுவர். சுபசோபனங்கள் அதிகம். வ்யாபாரம் சுறுசுறுப்பாக நடைபெற, அரசாங்க அறிக்கையாலும், விலைவாசிகளின் மாறுதலாலும், இந்த ராசிக்காரர்களுக்கு லாபத்தை அனுயாசமாக அதிகமளிக்கும்; தொழிலுக்கு நண்பர்களின் ஆதரவும், உதவியுமதிகம் ஏற்படும். பல்லாண்டுகளாக கடிதப் போக்குவரத்துக் கூட சரிவரயில்லாத நண்பர்களும் கூடுவார் எதிர்பாராத உதவி அவர் மூலமும் கிடைக்கும். வெளிநாடு சென்ற பையன் திரும்பி வந்ததும் விவாஹம் செய்யலாமென எண்ணியவர்களுக்கு பையன் திரும்பி வரவும் விவாஹம் நடைபெறவும் இம்மாதம் நன்று. நூதன வாகனம் பெறவோ, திடீரென மனைவாங்கவோ நேரும். தாயின் மூலம் சுபவ்ரயமிருக்கலாம். புத்ரர்களுக்கு கண்ணேய் முதலியவற்ருல் கஷ்டம், திடீரென யோஜனையின்றி செய்யும் காரியங்களால் நஷ்டம். அவர்களால் ஒரு பக்கம்மனவேதனையிருக்க, மனைவிக்கு நூதன பொருள்கள் வாங்குவதால் வரும் லாபமெல்லாம் குறைய மாதயிறுதியில் சற்று உற்சாகக் குறைவு. விவகாரத்தில் சீக்ரம் ஜயமுண்டாகும் ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் மூலம் லாபம் எதிர்ப்பார்க்கலாம். இம்மாதம் முயற்சியுமுண்டு. வெற்றியுமுண்டு.

விருச்சிகராசி: விசாகம் 4ம் பாதம் அனுஷம் கேட்டை. நம்பிக்கையுண்டாகும் நல்ல மாதம். தீராத நோயால் வருந்தியவர்களுக்கும் தெய்வானுகூலத்தால், நோயின் கடுமை குறையும். மறையவும் மறையும். தேக சுகமுண்டு, அதிகப் பணி புரிந்தாலும் ஸ்ரமம் தெரியாது. தனவசதி நினைத்தும் ஏற்படாவிட்டாலும், கடைசி நிமிஷத்தில் ஏற்படும். உத்யோகத்திலிருந்த ஸ்ரமங்கள் இனி இராது. கஷ்டத்தைடளித்த அதிகாரி மாறுவார். அல்லது தனக்கு ஸௌகர்யமான இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். வ்யாபாரம் வலுவடையவும் லாபம் அதிகம் பெறவும் இனி நன்று. வ்யாபார ஸ்தலம் மாற நேறலாம். ப்ரயாணங்கள் செய்து விளம்பரமும் செய்து முன்னேற்றமடையும் காலம் தொழில் செய்வதில். மிக தேர்ச்சிபெற்ற சேவகர்கள் கிடைக்கவும், உதவி பெற்று மதிப்பு உயரவும் நேரும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி முதலிய இனங்களில் சிறிதளவு இம்மாதம் லாபம் கிடைக்கும். அரசாங்க மூலம் நற்செய்தி கிடைக்க, வரியின் மூலம் முடங்கிய தனமும் பெற, விவகாரத்தில் வெற்றியடைய எதிர்பார்க்கலாம். விவாஹ விஷயமாய் செய்யும் யத்தனங்கள் பலிக்கும், பல காலமாக புத்ரோத்பத்தியின்றி இருந்தவர்களுக்கு தனக்கும் மகப்பேறு இருக்குமென்று எதிர்பார்க்க நேரும். குடியிருக்கும் வீட்டை காலிசெய்யச் சொல்லி உபத்ரவமிருக்கலாம். அடுத்த மாதம் இடப்பெயற்சியிருக்கும். நூதன காண்ட்ராக்ட் எடுக்கவோ, மற்றவர்களுக்கு ப்ரதிநிதியாக உழைக்கவோ, உபயோகமில்லாமலிருந்த நிரந்தர சொத்தை விற்று தொழில் புரியவோ குடும்பத்தில் பாகம் செய்து கொள்ளவோ நேரும். பிற்பகுதியில் பிரியலாம். ஸினிமா சங்கீதம் தொழில் நடத்துபவர்களுக்கு இனி சிறிது சிறிதாக அத்ருஷ்டம் அதிகரிக்கும். பெயரும் புகழும் உண்டாகும். துணிந்து கடன் வாங்கி, வீடும் மாடும் காரும் பெற்று குதுகலமாகயிருக்கயத்தனிப்பார். தம்பிக்கு பரீக்ஷை

தேர, மேல் படிப்புக்கு வெளி நாடு செல்ல யத்தனிக்கலாம். குழந்தை களுக்கு நோய்கண்டே தீரும். மனைவியின் மனக்குறை நீங்கும்.

தனுர்ராசி மூலம் பூராடம், உத்ராடம் 1ம் பாதம் வெய்யிலின் வெப்பம் இம்மாதம் எவ்விதம் அதிகமாகிக்கொண்டே யிருக்குமோ, அவ்விதமே ஸ்ரமங்கள் அதிகமாகிக்கொண்டிருக்கும் தேக சுகம் திருப்தி கரமாயிராது. ஓயாது அலைச்சலும், மன சஞ்சலமும் இருக்கும். சென்ற மாதம் அத்ருஷ்டவசத்தால் கிடைத்த தனமெல்லாம் இம்மாதம் சிலவாகி பழைய ஸ்திதியே திரும்ப வந்துவிடும். பலருக்கு உதவிபுரிய நேரும். உடன் பிறந்தார் மூலமும், அருகிலுள்ளோர் மூலமும் வ்ரயமுண்டு. சுப சோபனங்கள் பல அடுத்தடுத்து அன்பர்கள் வீட்டில் நடைபெற தான் தாராளச் சிலவு செய்ய நேரும். மேலும் தனம் முடங்கும் வீடு கட்டவும் வாகனம் பெறவும் முயற்சிக்கலாம். உத்யோகத்தில் தற்காலிகமாக கிடைத்த மேல்பதவி அற்பாயுளுடன் முடிய, பழைய பிரகாரம், நிரந்தர மான பதவியை யடைந்து வழக்கம்போல் உழைக்கலாம்.வ்யாபாரம் மந்த மடையும். வழக்கமாய் வருபவர்களும் வரத்தவறுவார்கள். இன்ஜினியர் முதலியவர்களுக்கு உழைப்பு அதிகம் பொறுப்பு அதிகம் கஷ்டமதிகம். நூல் வியாபாரிகள், வேறு தொழில் செய்யலாமா என சிந்திக்குமளவு தொழிலில் வெறுப்புண்டாகும். சேவகர்களும் ஒத்துழைக்க மறுப்பார். போனஸ் என துடிப்பார். ஸ்பெகுலேஷன் லாட்டரி பந்தயம் முதலியன மூலம் மாத பிற்பகுதியில்தான் லாபம்கிடைக்கும். நூதனமாக ப்ரசுரிக்கும் எழுத்தாளர்களுக்கு வைகாசி மாதமே நன்று. படம் தயாரிப்பினும் வைகாசியில் ரிலீஸ் செய்தால் லாபம். விவகாரம் சாத்தின கோர்ட்டில் ஜயம்பெறலாம் அல்லது திறந்ததும் வெற்றி. விவாஹ விஷயமாய் இரண்டு மாதங்கள் கடந்து யத்தனிக்கலாம். மணம் புரிய ப்ராப்தமில்லா தவர்கள் வருவதும் வணங்குவதும் விருந்தளிப்பதுமாக வீணுக பொழுது போக, தாமதிக்க, மன வேதனையிருக்கும். நூதன காண்ட்ராக்ட் எடுக்கவும், பெரிய முதலாளியிடம் பிரதிநிதியாக அமையவும் நன்று. குளம் கிணறு வெட்ட யத்தனிப்பவர்கள் மாத முடிவில் ஆரம்பிக்கவும். மனைவியின் கஷ்டம் விலகும். புத்ரர் சிறு பிரயாணம் செய்யலாம்.

மகரராசி: உத்ராடம் 2, 3, 4 பாதங்கள். திருவோணம் அவிட்டம் 1, 2 பாதங்கள். தேகசுக மேற்பட்டுக்கொண்டு வரும். மந்த கால மொழிந்து வஸந்தகால மாரம்பம் கட்டுக் கடங்காச் சிலவு செய்ய நேரி னும், சமாளிக்க தெய்வானு கூலமும் நண்பரின் பூர்ண ஆதரவும் கிடைக் கும். சுப சோபனங்களும் சுப வ்ரயமுமதிகம். உத்யோகத்தில் உயர்வு உண்டாகலாம். வரும்படி யதிகரிக்கும். மேலதிகாரிகள் மேலும் நட்புடன் உற்சாகத்தையளித்து அதிக பொறுப்பையும் ஏற்கச்செய்து, திருப்தியுடன் உழைக்கச் செய்வார். சகோதரர் மூலம் சகாயம் உண்டு. வ்யாபாரம் வலுவடைய சிறு தொழிற்சாலை ஆரம்பிக்க, கூட்டாளி சேர, மிருகசீரிஷம் சித்திரை அவிட்ட நக்ஷத்ரங்களில் ஜனித்தோர் மூலம் கார்யசித்தி யுண்டாக, ஸினிமா தியேட்டர் முதலியன கட்ட, அரிசி மில் வைக்க, பெட்ரோல் பங்க் திறக்க உத்தமம். தொழிலில் முன்னேற்றம் இருக்கும். சேவகர்கள் ஒத்துழைப்பார்கள். அரசாங்கம் மூலம் 11 தேதிக்குள் நற் செய்தி கிடைக்கும். வெளியூர் சென்றிருந்த நண்பர் திரும்பி வரவும் அவர் மூலமும் லாபமிருக்கும். மதிப்பும் புகழும் ஓங்கும். எழுத்தாளர் இம்மாதம் முற்பகுதியில் எழுதி அச்சிட்டு வெளியிடலாம். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்கலாம். விவாஹம் நடைபெறும். இல்லற வாழ்க்கை இன்புற்றிருக்கும் தனக்கு தீங்கு எண்ணுபவருக்கும், இழைப்பவருக்கும் தெய்வம் தண்டனையளிக்கும் மாதம். எதிரி மறைவார் மனைவாங்க ஏற் பாடு செய்யவும். வீடு மாறினுலும் சுபமே $7\frac{1}{2}$ ஆண்டு சனி மூலம் வ்ரயமதிகம் என்பது உண்மையானுலும், திருப்திகரமான உற்சாகச்

சிலவே ஏற்படும் புத்ரர்களுக்கு மேன்மையும் லாபமுமுண்டு மனைவிக்கு நூதன பொருள் சேர்க்கையிருக்கும். தன் அபிமான மிருகங்களுக்கே (pet amimal) மிகக் கெடுதல்.

கும்பராசி: அவிட்டம் 3, 4 பாதங்கள் சதயம் பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் தன்கையே தனக்குதவி என தீர்மானிக்கும்படி, தான் தன் செய்கையாலேயே கார்ய ஸித்தியடைவார். தேகசுக மேற்பட்டு சிலவைக் குறைத்து, வரவை அதிகரிக்கப் பாடுபடுவார். நூதன நண்பர்கள் பலர் சேருவர். புனர்பூசம், விசாகம், பூரட்டாதியில் ஜனித்தோர் மூலம். ஸௌகர்யங்கள் பல உண்டாகும். உத்யோகத்தில் உயர்வு உண்டாக மேலதிகாரி சிபார்சு கிடைக்கும். சீக்ரம் மேண்மையுண்டு எனும் நம்பிக்கை ஏற்படும். டைபாய்ட் ஜுரத்தில் கஷ்டப்பட்டவன், குண மடைந்து திரும்ப பழையபடி வேலை செய்ய ஆரம்பிப்பதுபோல், பல வருடங்களாக கஷ்டப்பட்டவர்கள், இனி நன்றே என்று எண்ணும்படி சுப பலன் அதிகமாக நடைபெறும் எதிர்ப்பும் ஏமாற்றமுமிராது. தாமத மின்றி தடையுமின்றி யத்தனம் பலிக்கும். எண்ணங்கள் நிறைவேறும், வ்யாபாரம் முன்னேற்றமடைய பலவித ஆதரவுகள் கிடைக்கும். முடங்கிய தனம்பெறவும் கடனைத் தீர்க்கவும் ஆரம்பம். வைத்யர்களுக்கு அதிக லாபம். மருந்துக்கடை, இன்ஷ்யூரன்ஸ் ஏஜென்ட் இவர்களுக்கு திருப்திகரமாக தொழில் நடைபெறும். தொழில் மூலம் இனி வேதனையிராது. உபயோகமற்ற சேவகர்களும், இன்னலளித்தவரும் விலகி விடுவார். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி மூலம் சீக்ரம் நற்பல னடையலாம். விவாஹ விஷயமும் திருப்திகரமாக கூடிவரும். அடுத்த மாதம் மணம் புரியலாம். விவகாரம் எடுக்கப்பட்டு கேஸ் நடைபெறும். சற்று தாமதித்து ஜயத்தையளிக்கும் மனைவியின் தேகசுகம் கெடும். புத்ரர் ப்ரயாணம் செய்ய நேரும். பிதாவிற்கு நல்ல பலன்கள் நடைபெறும். தமயனுக்கே நல்லதல்ல. யத்தன பலிதமின்றி வருத்தப்படுவார்.

மீனராசி: பூரட்டாதி 4ம் பாதம். உத்ரட்டாதி ரேவதி எக்கார்யத்திலும் எச்சரிக்கையுடனிருக்கவும். எதிர் பார்ப்பதெல்லாம் எதிர்ப்பாகவே முடியும். சிலருக்கு ஆபத்து உண்டாகவும், நண்பர்களும் பகை கொண்டு மதிப்பைக் குறைத்து தூஷணை செய்ய நேரும். திருட்டு மூலம் நஷ்டமிருக்கலாம் திடீரென பல சிலவுகள் செய்ய நேரும். உத்யோகத்தில் புடுங்கல்களதிகமாக. வருடாந்தர உயர்வுகூட தாமதிக்கும்படியான ஸ்ரமமளிக்கும் மாதம். நன்மை பயின்ற மேலதிகாரி மாறவும், கடு கடுவென யிருப்பவர் அப்பதவி வகித்து கஷ்டமளிக்கவும் நேரும். வ்யாபாரத்திலிதுவரை இருந்து வந்த ஆதரவு குறையும். குறைகூறுபவர் அதிகமாவார்கள். லாபம் எதிர்பார்க்கலாகாது. வரி மூலம் கஷ்டமிருக்கலாம். முடங்கிய தனம் திரும்பப்பெற சில மாதங்களாகும். கடன் வாங்கியவர் கண்ணில் படார். கோர்ட்டில் போட்டாலும், கேஸெடுத்து நடத்தி தனத்தைப்பெற தாமதமிருக்கும். தனவந்தரானாலும், கடன் வாங்க நேரும் நம்பினவர்கள் கைநழுவ விடுவார். உலகம் இவ்வித மாகவா இருக்கிறது என அறியும் வண்ணம் விபரீத பலா பலன்கள் நடைபெறும். இவற்றிற்கெல்லாம் ஒரே வழிதான் வெளியூர் செல்வது. வ்யாபாரம் வலுவடைய முயற்சிப்பது. என்ன சிலவு வருமோ என சிக்கனமாயிருப்பது, க்ஷேத்ராடனமும் செய்து தெய்வ வழிபாடு செய்வது நன்று. விவாஹ விஷயமாய் சித்திரை கடைசியில் முயற்சி செய்ய ஆரம்பிக்கலாம். மேற்கூறிய கஷ்டங்களெல்லாம் ஆறு வாரமே. ஆகவே சீக்ரம் நன்மை யடைவோமெனும் திடமான எண்ணத்துடன், இம்மாதம் வரக்கூடும்; கஷ்டங்களை தைர்யமாக சமாளிக்கவும்.

[அடுத்தமாதம் சார்வரி வருஷப் பலனை சுருக்கயாகக் கூறி வழக்கம் போல் ராசிப்பலனும் எழுதப்படும்.]

கேள்விகளுக்குப் பதில்

கணபதி ஜோஸ்யர்

ஸௌ. விருத்தாம்பாள்,

மடத்துக்குப்பம்

தங்களுக்கு ஆனிமீ 7ம் தேதி சுமார் ஜூன் 22ல் 1960ம் ஆண்டு ஆசிரியை உத்யோகம் கிடைக்கும். அது வரை தாமதம் உண்டு.

வீடு முதலியன இப்பொழுது கை கூடி வராது. 1965ம் ஆண்டு சித்திரை மாதத்திற்குப் பின்பே தெய்வானுகூலமிருப்பதால், அதன் பின்பு தான் மனை விஷயம் கை கூடி வரும்.

மஹாலெக்ஷ்மியை வணங்கி வரவும். அல்லது Maryஐ ஸ்தோத்ரம் செய்யவும்.

ஜெ. லால். கோவை

பள்ளியும் முடியும். இல்லாளும் வருவாள். பெற்றோர்கள் விருப்பப்படியே நடைபெறும். உமக்கு மூன்றே குழந்தைகள்

ந்யாமலா. மதராஸ் 21.

யத்தனம் பலிதம் ஆக நான்கு மாதங்களாகும். தாமதத்தால் மனந் தளர வேண்டாம். கஷ்ட கிலே நிவர்த்தியாக மேலும் இரண்டு வருடங்களாகும்.

ஆராவமுதன், வெங்கடேசன்

தெரு தி. நகர்.

ஏற்கனவே கேட்ட கேள்விகளுக்குக் கொடுத்த பதில்கள் நூற்றுக்கு நூறு பொருந்தி நடந்தது என்று எழுதி மேலும் கேள்விகள் கேட்கிறீர், ஒரு மைல் தூரத்திலிருப்பவர் நேரே வரவும். இலவசமாக அறிந்து கொண்டு. ஜோதிடத்தின் மஹிமையை உணரவும். அருகில் உள்ளோருக்கு மாலாவில் அச்சிடுவது உசிதமல்ல.

ஆறுமுகம், மதுரை.

உமக்கு ஸ்ரமமின்றி, அத்ருஷ்ட வசமாகத் தனம்பெறும் பாக்ய முண்டு: 2, 4. 9, 11க்குடையர் கூடினும், பார்த்தாலும், 2க்குடையன் 5ம் பாவத்திலிருப்பினும், சந்திராத் அவ்விதமே அமையின் அத்ருஷ்டம். பாவச் சக்கிரம் போட்டு பார்த்தால் சனி, குரு முதலியன பாவத்தில் மாறும். 1962 ஆகஸ்டு மிக உத்தமம். இது முதலே சொந்த வியாபாரம் ஆரம்பம்.

வெ. ராமமூர்த்தி, மைலாப்பூர்.

இப்பொழுது ப்ரமோஷன் ஆகாது, வியாபாரம் ஆரம்பிப்பதும் நல்லதல்ல. ஆறு ஆண்டுகளுக்கு அப்பாலே அமைதியான வாழ்க்கை. அஷ்டமச் சனி கழிய வேண்டும்.

நாராயணன், கல்கத்தா, 26.

ஆனி மாதம் 10தேதி யளவில் வண்டி ஓட்டுவதில் தேர்ச்சியடைய அதுவே நிரந்தரமாகயிருக்கும்.

மாதுருபூதம், கோடம்பாக்கம்.

யாவருமே எத்தெய்வத்தை வணங்குவது என சிந்திக்கும் பொழுது. தனது பெயருக் கேற்ப தெய்வம் அல்லது தேவியை வணங் கும்படியாக இருப்பின் அவர்களை

யேவணங்குவது நன்று. கிரக நிலை யைக் கொண்டு. பெற்ரோர் மனதில் நமக்கு வைக்க வேண்டிய பெயர் உதயமாகும். ஆகவே நீங்கள் மாதர் பூதேஸ்வரரை வணங்கவும். கார்யம் பூர்த்தியாக கணபதி ஸ்தோத்ரம் படிக்கவும். இதர கேள்விகளுக்கு நேரே பதிலை கேட்டுக் கொள்ளலாம்.

ஜானகி. மதராஸ், 4.

சித்திரை மாதம் 10தேதியளவில் விவாஹம் கடைபெறும். கணவனுடன் கூடிய காலத்தை இன்பமாக கழிப்பீர். வசதிகள் ஏற்படும்.

ஆராவமுதன் திண்டுக்கல்.

1963 ஜூலை முதல் நல்லகாலம் ஒழிந்த காலத்தில் மேல் படிப் பிற்குப் படிப்பீர், பாஸாகும். அதனுலும் நன்மையுண்டு.

ராமசாமி. தாழையூத்து.

சுந்தரகாண்டம் படிக்கவும். எண்ணம் கைகூடும். சம்பளம் உயரும் சுக்ர தசாபலனை மாலாவில் அச்சிடுவதாஞல் ஒருவருக்கே ஒரு புத்தகம் போடவேண்டும். தசாபலனை நேரே எழுதி கேட்டுக்கொள்ளவும்.

விஜயலக்ஷ்மி. கும்பகோணம்.

சகோதரர் பிணி தீர மேலும் 3 வருடங்களாகும். காசி நாதர் கோயிலுக்குச்சனிக்கிழமை தோறும் சென்று வரவும். விவாஹம் 1962 ஜனவரியில் கடைபெறும். ஐயாறு மாதங்களில் திரு வையாறு திக்கில் பிறந்திருக்கும் பையன் மணம் புரிவார்.

ராமசாமி, ஹாரிங்டன் ரோடு.

சந்திர தசையே நன்று வ்ரயாதிபதி நாடி உத்திரத்திலேயே யிருக்க, அந்த சூரிய தசை நல்லதல்ல. உமக்கு ஓரளவு ஜோதிடம் தெரியலாம். உமது ஆராய்ச்சி முறை போதாது. நேரே வந்து சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளவும்.

கீதா, தாம்பரம்.

படிப்பாய். திருப்திகரமாக பரீட்சை தேறும். லிகிதம் தட்டும் பயிற்சி ஏற்படும். 1964ம் ஆண்டே மணம் புரிவீர்

ராமசாமி, கோபி.

கிடைக்கும். நவராத்ரி வரை யத்தனிக்கவும்.

ராஜாபாதர். பர்த்ராசப்ப முதலி தெரு,

கூபனிருக்கக் கேள்விகளைக் காணும். கேள்விகளை அனுப்பினுல் பதில்களைப் பெறலாம்

"நான் ஜோதிடம் கற்றதேன்?"

என எனது குருவும், பிதாவுமான ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் எனக்குக் கூறியவற்றை தொடர்ந்து எடுதப்படும். ஜோஸ்யம் சொல்கிறேனென வந்த சிலர் ஹேஷ்யத்தால் பலனளிக்க அதிக ஹாஸ்யமாய் முடிந்ததெனவும், உண்மையாகவே ஜோதிடம் சொன்னதால் நன்மை விளைந்ததெனவும் அறியலாம்.

கணபதி ஜோஸ்யர், சென்னை-15.

செய்திச் சுருள்

இந்தியாவில் நவீன தொழில்நுட்ப அபிவிருத்தி

அவ்வளவாக அபிவிருத்தி யடையாத ஒரு நாட்டில் சாதனங்களும் யந்திரக் கருவிகளும் உற்பத்தியாகின்றன என்பதே, அந்நாடு நவீன தொழில்நுட்ப அபிவிருத்தியில் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கு ஒரு சிறந்த அளவு கோலாகும்.

இந்தியா இப்போது கடைசல் யந்திரங்கள், துரப்பணக் கருவிகள், கருவிகளுக்குச் சாணை பிடிக்கும் யந்திரங்கள் ஆகியவை போன்ற அடிப்படை யந்திரக் கருவிகளையும் மாமூல் யந்திரக் கருவிகளையும் உற்பத்தி செய்து வருகிறது. பெரியதொரு உற்பத்தி பிரிவாகிய ஹிந்துஸ்தான் யந்திரக் கருவித் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிற கடைசலை யந்திரங்களில் இப்போது 95 சதவிகிதம் பாகங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவையாகும். அறைவை யந்திரங்கள், "ரேடியல் டிரில்கள்" ஆகியவைகளில் அடங்கியுள்ள உள்நாட்டுப் பொருள்களின் அளவு இப்போது 80 சதவிகிதத்தை எட்டியிருக்கிறது இன்னும் ஒரு வருஷத்துக்குள் இந்த இரண்டு சாதனங்களிலும் அடங்கியுள்ள உள்நாட்டுத் தயாரிப்புப் பொருள்களின் விகிதாசாரம் படிப்படியாக 95 சதவிகிதத்துக்கு அதிகரித்துவிடும்.

மிகச் சமீபகாலம் வரை சர்க்கரை ஆலையந்திர சாதனங்களில் அனேகமாய்ப் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்பட வேண்டியதாகவே இருந்தது. இப்போது உச்சவேக "சென்ட்ரிபியூஜுகள்" உட்பட இந்த யந்திர சாதனங்களில் சுமார் 80 சதவிகிதம் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன.

மின்சாரத் தொழிலில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது இந்தியா எல்லா மின்சார வினியோக டிரான்ஸ்பார்மர்களையும் மின்சார மோட்டார்களையும் உற்பத்தி செய்து வருகிறது. போப்டாவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிற கனரக மின்சாரத் திட்டம் உற்பத்தி துவங்கியவுடன் நாடு இத்துறையில் தன்னிறைவு நிலையை அடைந்துவிடும்.

1953-ம் வருஷத்தில் இந்நாட்டில் மோட்டார் கார்களுக்கான இணைப்புத் தொழிற்சாலைகள் மட்டும்தான் இருந்தன. இன்றோ, பல்வேறு ரக மோட்டார் வண்டிகளையும் எடுத்துக் கொண்டால், அவைகளில் அடங்கியுள்ள உள்நாட்டுத் தயாரிப்புப் பாகங்களின் அளவு 50 சதவிகிதம் முதல் 73 சதவிகிதம் வரை இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசிவாக்கில் அது 75 சதவிகிதம் முதல் 85 சதவிகிதம் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

பெனிஸில்லின் தொழிற்சாலையொன்றை, உருவ அமைப்பிலிருந்து தயாரிப்பு வரை பூரணமாக நிர்மாணிக்கும் முயற்சியொன்று இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; அத்தொழிற்சாலை இவ்வருஷம் மத்தியவாக்கில் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தொழில் துறை முன்னேற்றத்துக்கு மாமூல் அளவுகோல்களில் ஒன்றாக இருந்து வருகிற சல்ப்யூரிக் ஆசிட் உற்பத்தியானது 1951-ல் 1,00,000 டன்னாக இருந்தது 1958ல் சுமார் 2,50,000 டன்னாக அதிகரித்திருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்னர் வரை இத்தொழிற்சாலை யந்திரங்கள், சாதனங்கள் ஆகியவை முழுவதும் இறக்குமதி

செய்யப்பட்டு வந்தன. சமீபத்தில் புதிய யந்திர சாதனங்களில் 50சத விகிதம் இந்தியாவிலேயே தயாரிக் கப்பட்டவையாகும்.

சிந்திரி ரசாயன உரத் தொழிற் சாலையானது, வெளிநாட்டு விஞ் ஞானிகளால் உருவமைக்கப்பட்டு முழுவதும் அவர்களாலேயே நிர் மாணிக்கப்பட்ட தொன்றாகும். அத் தொழிற்சாலையை நடத்தி வருகிற வர்கள், ரூர்க்கேலாவில் புதிதாக ஏற்படுத்தப்படுகிற ரசாயன உரத் தொழிற்சாலையின் நிர்மாண வேலை யில் 8 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள வேலைக்கான ஒப்பந் தத்தை போதிய அளவு துணிச்ச லுடன் மேற்கொண்டிருக்கின்றனர்; அப்புதிய தொழிற்சாலையைக் கட்டி முடிக்க மொத்தம் சுமார் 16 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது; அந்த 8கோடி ரூபாய் வேலையில் குறைந்தது 5 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலை உள்நாட்டிலே செய்யப்படும்.

ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த 12 வருஷ காலத்துக்குள், அங்கே 24 நவீன ரக டீஸல் சரக் கேற்றும் கப்பல்கள் கட்டப்பட்டு அவைகளின் சொந்தக்காரர்களுக்கு டெலிவரி செய்யப்பட்டுள்ளன. மேலும் மூன்று சரக்குக் கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நான்கு கப்பல்களுக்கு வேலை துவங்கி யிருக்கிறது. இவற்றின் மூன்று கப்பல்கள் 9,500டன் எடை யுள்ளவை. அந்த தளத்தில் கட்டப் பட்ட கப்பல்களில் சரக்கேற்றும் கப்பல்கள், சரக்கு பிரயாணி கப்பல் கள், சர்வே கப்பல்கள், மூரிங் கப்பல்கள், பெரிய படகுகள், இழுவைக் கப்பல்கள் ஆகியவை அடங்கியுள்ளன.

பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலையில், முன்னர் தயா ரிக்கப்பட்ட பெட்டி ஒவ்வொன்றுக் கும் சுமார் 37,000 ரூபாய் பெறு மான கச்சாப் பொருள்களும் உறுப்புகளும் வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்ய வேண் டியதாக இருந்தது; ஆனல் சமீபத் தில் தயாரிக்கப்பட்ட பெட்டிகளில் இது 18,000 ரூபாய்க்குக் குறைந்து விட்டது. 1960-61-ல் உருக்குப் பாலங்களும் உருக்குத் தகடுகளும் உள் நாட்டிலேயே கிடைக்க ஆரம் பித்தவுடன், அங்கே தயாரிக்கப் படுகிற ரயில் பெட்டி 95 சதவிகிதம் உள்நாட்டுப் மூலப் பொருள்கள் அடங்கியதாக இருக்கும்.

நங்கல் ஹைடல் கால்வாய்க்கு பக்ராத் தேக்கத்திலிருந்து தண்ணீர் சப்ளை

கங்குவால்-கோட்லா மின்சார நிலையங்களில் மூன்றாவது உற்பத்திப் பிரிவு நிர்மாணிக்கப் படுகிறது.

கங்குவால்-கோட்லாவில் உள்ள நங்கல் ஜல மின்சார உற்பத்தி நிலையக் கால்வாய்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இரட்டை மின்சார உற்பத்தி நிலையங்கள் ஒவ்வொன்றும் 48,000 கிலோ வாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்கின்றன. அந்த நிலையங்கள் பஞ்சாபுக்கும் டில்லி யூனியன் நிர் வாகப் பிரதேசத்துக்கும் மின்சார சக்தியை சப்ளை செய்கிற மின்சார 'கிரிட்டு'களுடன் இணைக்கப்பட் டுள்ளன.

இந்த இரண்டு மின்சார உற் பத்தி நிலையங்களிலும் தானே இயங்குகிற அதி நவீன பாதுகாப்பு சாதனங்கள் பொருத்தப்பட் டுள்ளன. இந்த நிலையங்களுக்கு நங்கல் ஜல மின்சார உற்பத்திக் கால்வாய் மூலமாக தண்ணீர் சப்ளை ஆகிறது. அந்தக் கால்வாய்க்கு சட்லெஜ் நதியில் அமைக்கப்பட் டுள்ள பக்ரா நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் சப்ளை ஆகிறது.

1959 டிசம்பரிலிருந்து 1960 பிப்ரவரி வரையுள்ள மழை குறை வான குளிர் காலத்தில், சட்லெஜ் நதியின் நீரோட்டம் நங்கல் ஜல மின்சார உற்பத்தி நிலையக் கால் வாய்க்குத் தேவையான மாமூல் அளவுக்கும் கீழ் குறைந்துபோன போது இந்த மின்சார நிலையங் களுக்குத் தண்ணீர் சப்ளை செய்வ

தற்கு ஒரு துணை ஏற்பாடாக, பக்ரா நீர்த்தேக்கத் தண்ணீர் பயன்படுத்தப்பட்டது.

1959 அக்டோபர் 6-ந் தேதியிலிருந்து டிசம்பர் 10-ந் தேதி வரையில், மின்சார உற்பத்திக்கும் "ரபி" பருவ விதைப்புக்குமாக மொத்தம் 9,84,700 ஏக்ரா அடி தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது. அதாவது ஆற்றில் விடப்படுகிற மாமூல் அளவுத் தண்ணீரோடுகூட அதிகப்படியாக வினாடிக்குச் சராசரியாய் 7,460 கன அடித் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டது.

மீண்டும், 1959 டிசம்பர் 11-ந் தேதியிலிருந்து 1960 ஜனவரி 20-ந் தேதி வரையில், பக்ரா அணையில் சேமித்து வைக்கப்பட்ட தண்ணீரிலிருந்து செய்யப்பட்ட சப்ளையின் மொத்த அளவு 78,600 ஏக்ரா அடி ஆகும்; அதாவது வினாடிக்கு 958 கன அடி.

1960 ஜனவரி 21-ந் தேதியிலிருந்து 1960 பிப்ரவரி 15-ந் தேதி வரையில் சப்ளை செய்யப்படுகிற தண்ணீரின் அளவும் கனிசமாகவே இருந்தது; அதாவது மொத்தம் 18,210 ஏக்ரா அடி தண்ணீர் விடப்பட்டது.

கங்குவால்—கோட்லா மின்சார உற்பத்தி நிலையங்களில் தற்போது இரண்டு உற்பத்திப் பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு நிலையத்திலும் மூன்றாவது உற்பத்திப் பிரிவு ஒன்று 1961 ஆரம்பத்தில் துவக்கி வைக்கப்படும். அப்போது இரண்டு நிலையங்களின் மொத்த உற்பத்தி சக்தி 1,54,000 கிலோ வாட்டாக இருக்கும்.

போஷாக்குக் குறைவை ஈடுகட்டுவதற்கான உணவுப் பொருள்கள் :

நாட்டில் பெருவாரியான மக்கள், புரோட்டின் சத்தும், வைட்டமின்களும் கனிச் சத்துள்ள பொருள்களும் மிகவும் பற்றாக்குறையாக உள்ள உணவை உட்கொண்டு வருகின்றனர் என்பதாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட உணவு, போஷாக்கு ஆகியவை சம்பந்தப்பட்ட விவர நுட்ப பரிசீலனைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. ஆதார உணவுப் பொருள்களும், காப்பு உணவுப் பொருள்களும் நாட்டில் போதிய அளவு உற்பத்தி செய்யப்படாதது தான் அதற்கு முக்கிய காரணமாகும். அதன் விளைவாக பெருவாரியான மக்கள், முக்கியமாக குறைந்த வருமானப்பிரிவைச் சேர்ந்தவர்கள் போதிய அளவு உணவு பெறுவது. புரோட்டின் சத்துக் குறைவு காரணமாக ஏற்படும் பல வியாதிகளுக்கு உள்ளாகின்றனர்.

காப்பு உணவுப் பொருளின் முக்கியத்துவம், முக்கியமாக குழந்தைகள், கர்ப்பிணிகள், பால் குடிக்கும் கைக்குழந்தைகள் உள்ள தாய்மார்கள் ஆகியோருக்கு அவற்றின் முக்கியத்துவம் அளவிட முடியாததாகும். குழந்தைகளின் மரண விகிதம் மிகவும் அதிகமாக இருந்து வருவதற்கும், உயிருள்ளவற்றின் உடல் நலம் மிகவும் மோசமாக இருந்து வருவதற்கும், முக்கிய காரணம் போஷாக்கு குறைவேயாகும். ஆகவே காப்பு உணவுப் பொருள்களுக்குப் பதிலாக சத்துள்ள பொருள்கள் சேர்த்துப் பக்குவப் படுத்தப்பட்ட உணவுப் பொருள்களை உபயோகத்துக்குக் கொண்டுவருவது மிகவும் அவசியமாகிவிட்டிருக்கிறது.

போஷாக்குக் குறைவு பற்றிய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்கும், அப்பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக முயற்சிக்கும், உலகம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்துறையில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பலனாக, பலகாரிய உணவுப்பொருள், புது முறைப் புழுங்கலரிசி, மரவள்ளிக் கிழங்கு சேமியா, நிலக்கடலையிலிருந்து தாவரப்பால், புரோட்டீன் சத்து மிகுந்த உணவுப் பொருள்கள் ஆகியவை போன்ற உணவுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அப்பொருள்களைத் தயா

ரிப்பதற்கான செய்முறைகள், டில்லியில் நடத்தப்பட்டு, வருகிற உலக விவசாயச் சந்தையில் மத்திய உணவு விவசாய மந்திராலயத்தைச் சேர்ந்த உணவு இலாகாவின் விஞ்ஞான தொழில்துறை ஆராய்ச்சிக் கௌன்சில் காட்சி அரங்குகளில் நிதரிசனமாக விளக்கிக் காட்டப்பட்டு வருகின்றன.

பலகாரிய உணவுப் பொருள் தயாரிப்பு.

மைசூரில் உள்ள மத்திய உணவுத் துறைத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம், விஷேசமாகப் பக்குவப்படுத்தப்பட்ட, குறைந்த கொழுப்புச் சத்துள்ள நிலக்கடலை உணவுப்பொருள் ஒன்றை வெற்றிகரமாகத் தயாரித்துள்ளது. இத்துடன் கடலைப் பருப்பு சேர்க்கப்பட்டு, புரோட்டீன் சத்து மிகுந்த உச்ச போஷாக்குச் சக்தியுள்ள உணவுப் பொருள் கிடைக்கிறது.

இந்திய பலகாரிய உணவுப் பொருள் என்று பெயர் கொடுக்கப்பட்ட இந்த துணை உணவுப்பொருளுடன் வைட்டமின்கள் ஏ, பி, பி 2, டி ஆகியவையும் கால்சியம்போன்ற கனிப்பொருள்களும் சேர்க்கப்பட்டு வலுவூட்டப்படுகிறது.

இந்த உணவுப் பொருளை உட்கொள்ளுவதில், மாமூலான உணவுப் பழக்க வழக்கங்களை எவ்வகையிலும் மாற்றிக்கொள்ள வேண்டியதில்லையென்பது அதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்திய பலகாரிய உணவுப் பொருள், மத்திய உணவுத்துறைத் தொழில்நுட்ப நிலையத்தில் இப்போது தயாரிக்கப்படுகிறது. சம்பாரப் பொருள் சேர்க்காமலும், சம்பாரப் பொருள் சேர்க்காது அத்துடன் ஏடெடுத்த பால்தூளைச் சேர்த்தும் வலுவூட்டப்படும் மூன்று வகையில் அது தயாரிக்கப்படுகிறது.

இந்த உணவுப் பொருளின் உபயோகம் சம்பந்தமாக பரீட்சித்துப் பார்த்ததில் அது இந்திய உணவுகளில் துணை உணவுப் பொருளாக சிறந்த முறையில் உபயோகித்து வரலாம் என்று நிதரிசனமாகத் தெரிய வந்துள்ளது. இவ்வுணவுப் பொருள் மைசூரைச் சேர்ந்த விடுதியொன்றில் குழந்தைகளுக்குத் தினந்தோறும் கொடுத்து வந்து பரீட்சித்துப் பார்த்ததில் ஐந்து மாத காலத்துக்குப் பின்னர், குழந்தைகளின் உடல் வளர்ச்சியிலும் போஷாக்கு அம்சத்திலும் நல்ல அபிவிருத்தி காணப்பட்டது.

மத்திய உணவுத்துறைத் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையத்தின் பிரிவு இப்பொழுது தினந்தோறும் அரை டன் வீதம் தயாரித்து வருகிறது; மொத்தம் 1,50,000 பவுண்டுக்கு மேல்-நாட்டில் உள்ள பல்வேறு நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

புது முறையில் புழுங்கலரிசி தயாரிப்பு.

மைசூரில் உள்ள மத்திய உணவுத் துறைத் தொழில்நுட்ப ஆராய்ச்சு நிலையம், நெல்லைப் புழுக்கி புழுங்கலரிசி தயாரிப்பதற்கான புதிய முறையொன்றைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்த முறைக் கையாளுவதனல், புழுங்கலரிசியில் வாடை எதுவும் அடிப்பதில்லை; மற்றும் தற்போது கையாளப்பட்டு வரும் முறையில் தேவைப்படும் கால அளவைக்காட்டிலும் குறைந்த காலத்தில் அதை ஊறவைக்க முடிகிறது. மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஜாதப்பூர் சர்வ கலா சாலையின் பயன் துறை விஞ்ஞான இலாகாவும் இதே அடிப்படைகளில் ஆனல் உபயோகிக்கப்படும் உபகரணங்களில் மட்டிலும் சிறிது மாறுதல்களுடன், புழுங்கலரிசி தயாரிப்புக்கான புதுமுறையொன்றைக் கண்டுபிடித்திருக்கிறது.

நெல் விளையும் ராஜயங்களில், நெல்லைப் புழுக்கி புழுங்கலரிசி தயாரிப்பது பரம்பரையாக நடைபெற்று வரும் ஒரு நடைமுறையாகும். இந்த ஏற்பாட்டின் மூலம் நெல்லின் உமியை நீக்குவதற்கு மிகவும் எளிதாவதுடன், அரிசியை அது பின்னல் கெட்டிப்படுத்துகிறது. ஆகவே புதிதாக அறுவடை செய்த நெல்லை அரிசியாக அறைக்

கும்போது, அது தீட்டப்படுகையில் நொறுங்கி நொய் விழுவதனுல் ஏற்படக்கூடிய சேதாரம் இம்முறையில் தவிர்க்கப்பட்டு, 5 சதவிகிதம் முதல் 10 சதவிகிதம் வரை கூடுதலாக அரிசி கிடைக்கிறது. மற்றும் அதன் சேமிப்பு காலத்தில் அரிசி கெடுவதில்லே. சாதம் குறையாமல் சமைப்பதற்கும் அது எளிதாக இருக்கிறது.

புழுங்கலரிசி போஷாக்குச் சத்துக்கள் மிகுந்ததாகும். வெண்மையாகத் தீட்டப்பட்ட பச்சை அரிசியைக் காட்டிலும் அதிக அளவு வைட்டமின்களும், கனிப்பொருள்களும் அதில் உள்ளன. மற்றும் இச்சத்துப் பொருள்கள் சமைப்பதற்கு முன் அரிசியை நீர்விட்டு களேயும்போது எளிதில் கரைந்து விடுவதில்லே.

ஆனல் புழுங்கலரிசி தயாரிப்பதற்குத் தற்போது கையாளப்பட்டு வரும் முறையில். அரிசி ஒருவித வாடை யடிப்பதுடன் சமையல் செய்த பிறகு அது பின்னும் அதிகமாகி விடுகிறது. மற்றும் அரிசி பார்ப்பதற்கும் அவ்வளவு ரம்மியமாக இருப்பதில்லே.

புது முறையில், நெல்லே ஊற வைப்பதற்கு பச்சைத் தண்ணீருக்குப் பதிலாக வெந்நீர் உபயோகிக்கப்படுகிறது. மற்றும் ஊறிய நெல்லே வெயிலில் காயவைப்பதற்குப் பதிலாக அது நீர்வற்றி உலரச் செய்யும் யந்திர சாதனங்களில் செலுத்தப்பட்டு காய வைக்கப்படுகிறது. இம்முறையில் வாடையும், அரிசி நிறம் மாறுவதும் தவிர்க்கப்படுவதுடன், பல அனுகூலங்கள் அதன் மூலம் கிடைக்கின்றன. இந்த செய்முறையை அடிப்படையாகக் கொண்டதொரு புழுங்கலரிசி தயாரிக்கும் ஆலே ஒன்று மைசூர் ராஜ்யத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

நெல்லேப் புழுக்குவதனுல், அரிசி கெட்டிப்படுவதுடன் சாதம் குழைவதும் தடுக்கப்படுகிறது. இந்தப் புதிய அரிசியை நீராவியின் உஷ்ணத்தில் பக்குவப் படுத்துவதன் மூலம் அவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட அரிசி வெண்ணிறத்துடன், பழைய பச்சரிசிபோன்று தோற்றமளிக்கிறது. தவிர அதை உபயோகிப்பதால் பொல பொல வென்று சாதம் வடிவதுடன், பழைய அரிசியைப் போலவே அதிக அளவு காண்கிறது.

புரோட்டீன் சத்துமிகுந்த கலப்பு உணவுப்பொருள் தயாரிப்பு:

கர்ப்பிணிகள், பால் குடிக்கும் குழந்தைகள் உள்ள தாய்மார்கள் ஆகியோருக்கும், உடல் நலம் குறையச் செய்யும் வியாதிகள், புரோட்டீன் சத்து பற்றுக்குறை காரணமாக ஏற்படும் வியாதிகள், பொது உடல் நலக்குறைவு, வயிற்றுப் புண். ஆகியவற்றினுல் அவதிப்படும் நோயாளிகளுக்கும், முழுதும் புரோட்டீன் சத்துக்கள் அடங்கிய முக்கியமாக சோடியம் கேக்னேட் அல்லது கரையக்கூடிய பால கேசின் சத்துப் பொருள்கள் அடங்கிய உணவுத் தயாரிப்புகள் அத்தியாவசியமெனக் கருதப்படுகிறது. இத்தகைய பொருள்கள் இப்பொழுது வெளிநாடுகளிலிருந்தே பெருமளவு இறக்குமதியாகி வருகிறது. கரையக்கூடிய கேசின் பொருளே செறிவுமிகுந்த வகையில் தயாரிப்பதால் ஏற்படுகிற பல



"என வாயை மூட யாராலும் முடியாது!"
"உங்கள் மீசையைத் தவிர......"

சங்கடங்கள் காரணமாக, இந்தியாவில் இப்பொருளைத் தயாரிப்பதற்கு இதுவரை முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை.

மைசூரில் உள்ள மத்திய உணவுத்துறை தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம் சோடியம் கேசினேட்டை ஆதாரப் பொருளாகக் கொண்ட வலுவூட்டப்பட்ட புரோட்டீன் உணவுப் பொருள் ஒன்றைத் தயாரிப்பதற்கான செய்முறையைக் கண்டு பிடித்திருக்கிறது. இந்த முறையில் கேசின் சத்துப்பொருள் கரையக் கூடியதான பொருளாக மாற்றப்பட்டு, அத்துடன் வாசனைப் பொருள்கள் சேர்க்கப்பட்டு கனிப் பொருள்களும், வைட்டமின்களும் சேர்த்து வலுவூட்டப்படுகிறது.

இந்த புரோட்டீன் உணவுப் பொருள், மிகுந்த கவர்ச்சியைத் தருவதாகவும், நல்ல ருசியுள்ளதாகவும் இருக்கிறது. அதை தண்ணீரிலோ, பாலிலோ எளிதில் கரைத்து உபயோகிக்க முடியுமாதலால், அதை பல்வேறு உணவுத் தயாரிப்புகளில் சேர்த்துக் கொள்ளலாம். குவாஷியோர்கோர் வியாதியினால் அவதியுற்று வந்த குழந்தைகளுக்கு அதைக் கொடுத்து பரீட்சித்துப் பார்த்ததில் அது நோயைக் குணப்படுத்துவதில் அதன் மருந்து முக்கியத்துவம் வெளியாகியிருக்கிறது. அதைப் பள்ளிக் குழந்தைகளுக்கு இரண்டு மாத காலம் கொடுத்து வந்ததில் அவர்களுடைய வளர்ச்சியிலும், போஷாக்கு அம்சத்திலும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டது.

அழகிய கலர் அச்சு வேலைகளுக்கு

சிறந்த இடம்

ஸ்ரீ ஸுதர்சன் பிரஸ்

"காங்கிரஸ் பில்டிங்ஸ்"

111, மவுண்ட் ரோட், தேனாம்பேட்டை

சென்னை-6

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் சிபாரிசுகளில் ஒன்று வேலை விஷயத்தில் வழி காட்டுதல் என்பதாகும். 1952ம் வருடம் நியமிக்கப்பட்ட செகண்டரி கல்வி கமிஷன் பள்ளிகளில், கைத் தொழில் உற்பத்தி வேலைகளை வற்புறுத்தியது 1954ல் மத்திய அரசாங்கம் கல்வி, வேலை பெற வழிகாட்டல் விஷயத்திற்கான மத்திய நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியது மத்திய அரசாங்க கல்வி இலாகா, வேலை பெற வழிகாட்டும் துறையில் பூர்வாங்கமாக உழைக்க, பிறகு தொழில் இலாகா இளைஞர்களுக்கு தகுந்த வேலையைத் தேடித்தரவோ, பயிற்சி அளிக்கவோ உதவுகிறது. இவ்வித முறையிலே கண் பார்வையற்ற பெண்கள் கம்பளம் நெய்யும் வேலையில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்,

ஸ்ரீ வாசுதேவாச்சாரின் ஸாஹித்யங்கள்

என். ஆர். பூவராகன்

ஸங்கீத பிதாமஹரான புரந்தர தாஸர் காலம் தொடங்கி தற்காலம் நம்மிடையே நிலவும் மைசூர் வாசுதேவாச்சார் வரை அனேக வாக்கேயகாரர்கள், கர்னாடக ஸங்கீத வளம் பெற்று திகழ, ஆயிரக்கணக்கான சூளாதிகள், வர்ணங்கள், கீர்த்தனைகள், ஸ்வரஜதிகள்,ஸ்லோகங்கள், பதங்கள், ஜாவளிகள், தில்லானாக்கள், தருக்கள் இன்னும் இதர உருப்படிகளை இயற்றி இருக்கிறார்கள். இந்த மஹனீயர்களின் அடிச்சுவட்டில், ஸம்பிரதாயமான ஸங்கீதம் நிலைபெற்று வளர, தியாகராஜ சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவரும் பட்டணம் சுப்பிரமணிய ஐயரின் பிரதம மாணவருமான, மைசூர் வாசுதேவாச்சார் இன்று கீர்த்தனங்களைக் கவனம் செய்து, பகவத் அர்ப்பணம்செய்து வருவது நாம் செய்த மஹத்தான பாக்யம் என்று கருதவேண்டும். இம்மஹா பூஜ்யரின் அன்பையும் ஆதரவையும், நட்பையும் பெரும் புண்யம் எனக்குப் பல வருஷங்கள் கிடைத்தது பற்றி இறைவனை அடி பணிந்து அஞ்சலி செய்கிறேன்.

இந்த முது பெரும் வாக்கேயகாரரின் உருப்படிகளை 'மாலா' இதழில் மாதந்தோறும் ஸ்வரப்படுத்தி வெளியிட எனக்கு அனுமதி கொடுத்ததற்கு, இப்பத்திரிகையின் போஷகரான, வைஜயந்திமாலாவுக்கு என் நன்றி உரித்தாகுக, கர்னாடக ஸங்கீதத்தின் லக்ஷணலக்ஷியங்களை நன்கு பரிசோதித்து, முற்றிலும் ஸம்பிரதாய பூர்வமாக இயற்றியுள்ள அரிய ஸாஹித்யங்கள் சுமார் அறுநூற்றுக்குமேலே இருக்கும். பகவானுக்கு இவர் அர்ப்பணம்செய்துள்ள இந்த கீர்த்தனைகள் எல்லாம், ஸங்கீதமும் ஸாஹித்யமும் இழைந்தது, பூரணப் பொலிவுடன் பிரகாசிக்கின்றன. ஒவ்வொன்றிலும் ராகரஸம் ததும்புகிறது.

ஸாஹித்யச் சிறப்பு

வாசுதேவாச்சாருடைய ஸாஹித்யங்களின் மகிமையை, ஸங்கீத வித்வான்கள்தான் கண்டு பூரணமாய் அனுபவிக்க முடியும். ஸம்ஸ்கிருதத்திலும், தெலுங்கிலும், கன்னடத்திலும், சுமார் அறுநூறு உருப்படிகள்,வர்ணங்கள்,ஸ்வரஜதிகள்.கீர்த்தனைகள்,ஸ்லோகங்கள். ராகமாலிகைகள், தில்லானாக்கள் உள்பட புனைந்திருக்கிறார். அனேக கச்சேரிகளில்பிரபல வித்வான்கள், அரியக்குடி, மஹாராஜபுரம், மதுரைமணி ஐயர், ஜி.என்.பி., எம்.எஸ். பட்டம்மாள்,இவர்கள் இம்மஹானின்கீர்த்தனைகளைப் பாடி கேட்பவரைப் பரவசமடையச் செய்துகொண்டுவருகிறார்கள். இதுவே இந்த உருப்படிகளின் மகிமையை விளக்குகின்றது. கமாஸ் ராகத்தில் அமைந்த ''ப்ரோசே வாரெவருரா'' தேவமனோஹரியில்''பலுகவதேமிரா,''பிலஹரியில் ''ஸ்ரீசாமுண்டேஸ்வரி'' இவைகளை அனேகம் ரஸிகர்கள் அறிந்திருக்கலாம். ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் நூற்றாண்டு நிறைவிழாவின் போது ''ஸ்ரீமதாதி தியாகராஜ'' என்ற கல்யாணி கீர்த்தனையும், கலாக்ஷேத்திராவுக்கு வந்தவுடன் ஸ்வாமிகளைக் குறித்து கவனம் செய்த ''ஸ்ரீ ராமசந்திர பாதாப்ஜே'' என்னும் பஞ்ச ராகமாலிகையும் ராகபாவமும் அர்த்தபாவமும் ததும்பும்படி பிரகாசிக்கின்றன. வால்மீகியின் ராமாயண ஸ்லோகங்களுக்கு அரிய வர்ணமெட்டுகளை அமைத்து, காலக்ஷேத்திர மாணவ மாணவிகள் நடிக்க ''ஸீதா ஸ்வயம்வரம்'' என்னும் நாட்டிய நாடகம் இவருடைய உயர்ந்த கற்பனைத் திறனை விளக்குகிறது.

வாசுதேவாச்சாருக்கு வயது தொண்ணூற்றைந்து ஆனாலும் சாரீரத்தில் வாலிப முருக்கு இன்னும் தளரவில்லை. நீண்டநாழி பாட முடியாவிட்டாலும், அவ்வப்போது

பளிச், பளிச் என்று மின்வெட்டுப் போல் ராக ஸ்வரூபமும் தாளம் பாடும் முறையும், கல்பனு ஸ்வர அழகும் தாண்டவமாடுவதை இவருடைய ஸங்கீதத்தை ஊர்ந்து கேட்பவர்களுக்குத் தெரியும். நாத பிரம்மத்தை உபாஸிப்பதில் ஈடு, இணை இல்லாதவர். ஸதா ஸங்கீதம், ஸாஸ்திரம், இதே நினைவு, இதே பேச்சு. ஸங்கித நுணுக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறவோ, பாடவோ ஆரம்பித்து விட்டால், ஒரே பிரவாகம்தான். தன்னையும் மறந்து ஸங்கீதத்தில் ஆழ்ந்து விடுவார். ஒரு சமயம் ஸ்ரீ அரியக்குடி ராமனுஜ ஐயங்காரை நான் இவரிடம் அழைத்துக் கொண்டு சென்ற பொழுது, ஆச்சாருக்கு ஆனந்தமும், மகிழ்ச்சியும் பொங்கிப் பெருகிற்று. தன்னுடைய அறையில் உட்கார்ந்து, தான் கவனம் செய்த ஸாஹித்யங்களைப் பற்றிச் சொல்லி ஐயங்காரை அவைகளைப் பாடச் சொல்லி தானும் பாடினுர். மற்ருெரு முறை ராகம் தாளம், பல்லவி பாடும் முறையை எங்களுக்குச் சொல்லி, ஸம்பிரதாயமான பழைய பல்லவிகளில் ராகபாகமும் லயமும் சேர்ந்து இழைவதை எடுத்துக் காட்டி உதாரணமாய் தான் கவனம் செய்த பேகட ராகத்தில் ரூபக தாளத்தில் அமைந்த "கைலாஸபதே, பசுபதே, உமாபதே, நமோ நமஸ்தே என்னும் பல்லவியைப் பாடி ஐயங்காரை மெய்மறக்கச் செய்தார்.

வாசுதேவாச்சார் தன்னுடைய மூன்று பேரன்களுக்கும் ஸங்கித அப்பியாஸம் செய்வித்திருக்கிருர். இவர்களுள் கலாக்ஷேத்திரத்தில் இருக்கும் ராஜாராம், இவருக்குத் தக்கபடி கைங்கர்யம் செய்து வருகிருர். தாத்தாவின் கீர்த்தனைகளை அப்பழுக்கின்றி ஸ்வரப்படுத்தி அனேக மாணவ மாணவிகளுக்குக் கற்பிக்கும் பணியை வெகு சிரத்தையுடன் செய்து வருவது மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். ஆச்சாரின் முக்கிய சிஷ்யர்களுள் மைசூரில் இருக்கும், பத்மனையா, சென்னகேசவய்யாவும், தற்பொழுது கலாக்ஷேத்திராவில் உபாத்தியாயராக இருக்கும் டி. பசுபதியும் குறிப்பிடத் தக்கவர்கள். இந்த ஸங்கித மஹனீயர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து, ஸங்கிதத்தின் சிறப்பை வித்வான்களுக்கும், ரஸிகர்களுக்கும் போதிக்க வேண்டும் என்று பகவானைப் பிரார்த்திக்கிறேன்.

அட்டைப் படம்

மாசியும் பங்குனியும் சேரும் தினம் மங்கைகளுக்கு ஓர் புனித நாள். மங்களகரமான நாள். அன்று தங்கள் கணவன்மாரின் க்ஷேமம் கோரி பரம்பொருளைவேண்டி நோன்பு நோற்று கழுத்திலே சரடு அணிந்து மகிழும் நாள். படத்திலே இவ்வரிய நோன்பிலே ஈடுபட்டுள்ள நங்கையும் அதைக் கண்டு மகிழும் கணவனும் அவர்களது அருந்தவப்புதல்வனுமாகக் காட்சியளிக்கின்றனர்.



பம்பாயிலே ஷண்முகானந்தா பைன் ஆர்ட்ஸ் அண்ட் சங்கீத சபாவின் ஆதரவில் ஸ்ரீமதி வைஜயந்திமாலா அவர்கள் இரண்டு நடனக் கச்சேரிகள் நிகழ்த்தினார்கள், கச்சேரிகள் பிரமாதம் என்று பாராட்டப்பட்டன. இரண்டாவது நாள், மத்திய அரசாங்க தற்காப்பு இலாகா மந்திரி கனம் வி. கே. கிருஷ்ண மேனன் தலைமை வகித்தார். படத்திலே அமைச்சருடன் கலைஞர்.

★ ★

சோவியத் யூனியன் ஜனாதிபதி வார்ஷிலோவ் அவர்கள் பம்பாய்க்கு வந்தபோது பம்பாய் ராஜபவனத்தில் ஸ்ரீமதி வைஜயந்திமாலா அவர்களது நடனத்தைக் கண்டு களித்தார். அவ்வமயம் எடுத்த படம் மேலே காணப்படுகிறது.

அரங்கேற்றம்

சௌ. ஹைமா

டாக்டர் ஸி. பி. ராமசாமி அய்யரின் காரியதரிசி ஸ்ரீ. எஸ். சிதம்பரம் அவர்களின் மருமாளும் சௌ. கே. ஜே. சரஸா அவர்களின் சிஷ்யையுமான சௌ. ஹைமாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் மைலாப்பூர், பைன் ஆர்ட்ஸ் கிளப் அரங்கில்நடைபெற்றது. சௌ. பத்மினி அவர்கள் தலைமை வகித்தார். அன்றுநல்ல கூட்டம். பல பிரபலஸ்தர்கள், கலைஞர்கள் ரஸிகர்கள் குழுமியிருந்தனர். டாக்டர் ஸி. பி. ராமசாமி அய்யர் அவர்களும் ஆஜராகி இருந்தார். அலாரிப்பு. ஜதிஸ்வரம் இவைகளுக்கு பின் வந்த சப்தம் அயிட்டத்திலே குமாரியின் நடனம் சிறப்பாயிருந்தது. வர்ண அயிட்டத்திலே போதிய விறுவிறுப்பும் கலைஞானமும் காணப்பட்டது. தாயே யசோதாவில் சில புது வித அபிநயங்கள் சிறப்பாக அமைத்தன. ‘நடனமாடினார்’ அயிட்டத்தையும்குறிப்பிடவேண்டும் மற்ற அயிட்டங்களும் சிறப்புற அமைந்தன. சௌ. பத்மினி அவர்கள் சௌ. ஹைமாவைப் பாராட்டிப் பேசினார்.

ஹைமாவிற்கு வசிகரத் தோற்றமும் உடற்கட்டும் அமைந்துள்ளது. லாகவத்துடன் சிறப்புற ஆடுகிறார். நல்ல அநுபவம் பெற்றால் நடனம் மேலும் சோபிக்கும்

வானவில் தேநீர்க் கச்சேரி

சென்ற மாதம் சென்னை உட்லண்ட்ஸ் ஹோட்டலிலே ஹிந்துஸ்தான் லிவர் பிரதர்ஸார் நடத்திய வானவில் தேநீர்க் கச்சேரி பிரமாத முறையிலே அமைந்தது. லக்ஸ் டாய்லட் சோப் வானவில்லின் நான்கு நிறங்களில் விற்பனைக்கு வந்துள்ளதை யொட்டிய விழா இது. விழாவிற்கு சட்டசபை அங்கத்தினர்கள், வழக்கறிஞர்கள் நக்ஷத்திரங்கள் பத்திரிகையாளர்கள் குழுமியிருந்தனர். சென்னைக்கிளை கமர்ஷியல் மானேஜர் எம். எம். மேனன் யாவரையும் வரவேற்றார். விழாவிற்கு டைரக்டர் கே. சுப்ரமண்யம் தலைமை தாங்கினார். அவர் விளம்பரத்தின் அவசியம் பற்றிப் பேசி, ஹிந்துஸ்தான் லிவர் பிரதர்ஸாரின் திறன் பற்றிப் பாராட்டிப் பேசினார். ஹிந்துஸ்தான் லிவர் சோப் பிரிவு விளம்பர ஜெனரல் மானேஜர் ஜி. வி. பால் லிவர் ஸ்தாபனத்திற்கும் நக்ஷத்திரங்களுக்கும் உள்ள நல்லுறவு பற்றிக் குறிப்பிட்டார். ஒரே வித சோப்புப் பல வித வர்ணங்களில் மார்க்கெட்டில் வழங்கப்படுவது இதுதான் முதல் தடவை என்று குறிப்பிட்டார்.

மந்திரஜால நிபுணர் மிஸ்டர் மெஸ்திரி அவர்கள் சில மந்திர ஜாலக் காட்சிகளைச் செய்து காட்டினார். இறுதியில் அவர் வானவில் நிறங்களில் லக்ஸ் டாய்லட் சோப்புக் கட்டிகளையும் வெள்ளைக்கட்டியையும் ஒரு காலிப் பெட்டியிலிருந்து வெளியே இழுத்துக் காண்பித்து விழாவிற்குப் பொருத்தமான காட்சியாகச் செய்தார். இவர் சபையினர் கர கோஷங்களைப் பெற்ற வண்ணமிருந்தார். பிறகு ஸ்ரீ சிவானந்தம், ஸ்ரீமதி சாரதா ஆகியவர்களின் இரு வீணைக் கச்சேரி நடந்தது. விழா முடிந்து வீட்டிற்குச்செல்லுகையிலே வந்திருந்தவர்களுக்கு ஒரு அழகிய பெட்டியில் வானவில் நிற லக்ஸ் சோப்புகள் வெகுமதியாக அளித்தனர். வந்திருந்தவர்களை வரவேற்றும். அதிகாரிகளுக்கு அறிமுகப் படுத்தியும், விழாவின் ஊடே ஓடி ஆடி கவனித்து சதா சுறு சுறுப்புடனும், புன்னகையுடனும் விளங்கினார் லிண்டாஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். வி. வேணுகோபாலன் அவர்கள். விழா ஒரு நூதன விழா. வானவில் தேநீர்க் கச்சேரி வனப்பு மிக்கதாய் (colourful) விளங்கியது.

ஸ்ரீ ரங்க விமானத் தோற்றம்



ஸ்ரீரங்க விமானத்தின் மற்றொரு தோற்றம்.

போட்டோக்கள் : சாமி



ஸ்டுடியோ செய்திகள்

கப்பலோட்டிய தமிழன்

பத்மினி பிக்சர்ஸார் கப்பலோட்டிய தமிழனை தயாரிக்கப் போகின்றனர். இதில் வ. உ. சி. யாக நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடிப்பார். பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்கிறார். இந்தப் படத்திற்கான வசனங்களை எஸ். டி. சுந்தரம் எழுதுவார்.

வாழ்க்கைப் படகு

புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள ப்ரேம் பிக்சர்ஸார் 'வாழ்க்கைப் படகு' என்ற படத்திற்கான ஆரம்ப விழாவை பிப்ரவரி 26ம் தேதியன்று வாஹினி ஸ்டுடியோவில் நடத்தினர். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ஓ. வி. அழகேசன் தலைமை வகித்தார். நீதிபதி கனம் என். சோமசுந்தரம் முதல் படப்பிடிப்பிற்கான ஸெட்டைத் திறந்து வைத்தார்.

பொன்னித் திருநாள்

'தை பிறந்தால் வழி பிறக்கும்' படத்தில் வெற்றி கண்ட ஸ்ரீ. ஏ.கே. வேலன் இப்போது 'பொன்னித் திருநாள்' என்ற பெயரில் ஒரு படத்தைத் தயார் செய்து வருகிறார். அவரே கதை வசனம் எழுதி டைரக்ஷன் பொறுப்பையும் வகித்து வருகிறார்.

பட்டிணத்தார்

பிரபல இசை அமைப்பாளர் ஜி. ராமநாதன் அவர்கள் 'பட்டிணத்தாரை' மீண்டும் எடுக்கத்திட்டமிட்டுள்ளாராம். இதில் பட்டிணத்தாராக பிரபல பின்னணி பாடகர் சௌந்திரராஜன் நடிப்பாராம். இது ஒரு செய்தி

கடவுளின் குழந்தை

'வெற்றிவேல் பிலிம்ஸ்' என்ற கம்பெனி மூலம் வீர சிவாஜியின் சரிதத்தை சிறு குழந்தைகளைக் கொண்டே தயாரிக்கத் திட்டமிட்டிருந்த திரு. சின்ன அண்ணாமலை அத்திட்டத்தைக் கைவிட்டு விட்டு 'கடவுளின் குழந்தை' என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார். சிவாஜி கணேசன் முன்பே வீர சிவாஜியை படமாக்கத் திட்டமிட்டிருந்ததால் அதற்கு இடையூறாக இருக்கவேண்டாம் என்பதற்காகவே சின்ன அண்ணாமலை தம் முயற்சியைக் கைவிட்டு விட்டாரெனத் தெரிகிறது.



திருப்தி வேண்டும்

ஓர் ஊரில் ஓர் கல் தச்சன் இருந்தான். அவன் தினமும் அதிகாலையில் எழுந்திருந்து வண்டியை மலை அடிவாரத்திற்கு ஓட்டிச் செல்வான். அங்கு பெரிய பெரிய பாராங்கற்களை, நெற்றி வியர்வை நிலத்தில் விழ பகல் முழுவதும் பாடுபட்டு துண்டு துண்டுகளாக வெட்டி வண்டியிற் போட்டுக் கொண்டு, ஊரில் உள்ள கடையில் விற்று கூலி பெறுவது அவன் வழக்கம். மிகக் கஷ்டப்பட்டும் அவனுக்குக் கிடைத்த ஊதியம் மிகக் குறைவாகவே இருந்தது. மனைவியையும், பிள்ளைகளையும் கொண்ட அவனுடைய குடும்பம் கஷ்டமான நிலையில்தான் இருந்தது.

ஒரு நாள் அவன் கடைவீதி வழியே சென்று கொண்டிருக்கையில் வெண்ணெய்க்கடை ஒன்றின் வாயலில் மக்கள் கூட்டமாக இருப்பதைக் கண்டு அங்கு நின்று வேடிக்கைப் பார்க்கலானான். வெண்ணைக் கடைக்காரன் வெண்ணையைக் கத்தியினால் வழித்து எடுத்து தராசில் வைத்து எடை போட்டு நிறுத்திய பிறகு அதை இலையில் வைத்து கட்டிக் கொடுத்தான். நிறைய மக்கள் ஒருவர் பின் ஒருவராக வாங்கிச் சென்ற வண்ணமாக இருந்தார்கள். அவனுடைய பணப்பெட்டியும் சீக்கிரமாகவே நிரம்பிக் கொண்டிருந்தது. இதைக் கண்ட தச்சன் தன் மனதிலேயே நினைத்துக் கொண்டான், "நாம் நாள் முழுதும் மிக்கக் கஷ்டத்துடன் கல்லை வெட்டி விற்றால் அதனால் கிடைக்கக் கூடிய ஊதியம் மிகச்சொற்பமாக இருக்கிறது. ஆனால் இந்த வெண்ணெய் கடைக்காரனோ சுலபமாகக் காரியத்தை செய்து விட்டு நிறைய வருமானத்தைப் பெறுகிறான். கடவுளின் வஞ்சகச் செயல் தான் என்ன! கடினமான வேலையைக் கொடுத்து சொற்ப வருமானத்தையும், சுலபமான வேலையைக் கொடுத்து நிறைந்த வருமானத்தையும் அல்லவா கொடுக்கிறார்! பாராங்கற்களை வெண்ணெய் போல் மிருதுவாக செய்தால் நானும் சிரமமின்றி கற்களைச் சுலபமாக, இப்பொழுது வெட்டுவதைப் போல் பன்மடங்கு வெட்டித் தள்ளுவேன்" என்று கூறிக்கொண்டே மேலும் நடக்கலானான்.

பிறகு மற்றொரு தெரு வழியாகச் செல்லும் பொழுது அங்கு ஒரு கடை வாயலில் ஒரு வண்டி நிற்பதைக் கண்டான். பெரிய பெரிய

பஞ்சுமூட்டைகளை, ஒருவன் பின் ஒருவனாகத் தூக்கி வந்து வண்டியில் அடுக்கினார்கள். பிறகு தத்தம் கூலிகளைப் பெற்றுச் சென்றார்கள். இதைக் கண்ட கல் தச்சன் மறுபடியும், கடவுள் தன்னிடம் கருணை காட்டாது இருக்கிறார் என்று வருந்தினான். அவன் நினைத்தான்; நான் தினமும் வெட்டித்தள்ளும் கற்கள் பஞ்சுபோல் மிருதுவாக இருந்தால் வண்டியில் கற்களை ஏற்றுவது எவ்வளவு சுலபமாக இருக்கும். மற்றும் பன்மடங்கு கற்களை அதிகமாக ஏற்றிக்கொண்டு, கடையில் விற்று நிறைய பணம் சம்பாதிக்க முடியுமே ''என்று நினைத்தவாறே சென்றான்.

இதைக்கண்ட கடவுள் தச்சனுக்கு நல்லதோர் பாடம் கற்பிக்க எண்ணி. அவன் விருப்பப்படியே மலைஅடி வாரத்திலுள்ள பாறைகளைமிருதுவாகவும்.பஞ்சுபோல் லேசாக இருக்கும்படியாக செய்தார்.

வழக்கம்போல் தச்சன் மறுநாள் அதிகாலையில் கற்களை உடைக்க மலை அடி வாரத்திற்குச் சென்றான். கற்களை உடைப்பதற்காக உளியை எடுத்து கல்லின் மீது வைத்தான். உளி மெதுவாக கல்லுக்குள் சென்றது. வெண்ணெய் போல் அவ்வளவு மிருதுவாக கல் இருப்பதைக் கண்ட தச்சனுக்கு ஆச்சர்யம் அளவு கடந்து விட்டது. மேலும் கல்லைத் தூக்கிப்பார்த்தான். பஞ்சுபோல் மிகவும் லேசாக கனமின்றி இருப்பதைக் கண்டான். "ஆஹா, என் வருத்தத்தைச் செவி யேற்ற கடவுள் என்மீது கருணை கொண்டு இக்கற்களை மிகவும் மிருதுவாகவும், லேசாகவும் செய்துவிட்டார். இனிமேல் எனக்கு யோகம்தான். இன்று வழக்கம் போல் இல்லாமல், பன்மடங்கு அதிகமாகவே கற்களை வெட்டிச் சென்று கடையில் விற்று நிறைய சம்பாதிப்பேன்" என்று கூறியவாறே கற்களை வெட்ட முற்பட்டான்.

கனமின்றி லேசாக உள்ள கற்களை நிறைய வண்டியில் ஏற்றி ஊருக்குள் சென்றான், விற்பனைக்காக. அன்று கல் தச்சனிடமிருந்து ஒருவருவது கற்களை வாங்கவில்லை, காரணம். லேசாகவும், கனமும் இல்லாத கற்களை வாங்கிக் கொண்டு என்ன செய்ய முடியும்? வழக்கம்போல் கிடைக்கக் கூடிய சொற்ப ஊதியம் கூட அன்று அவனுக்குக் கிடைக்கவில்லை. அவன் பேராசை நிராசையானதைக் கண்டு வருந்தினான். கலங்கிய கண்களுடன் வீட்டுக்குச் சென்றான். அன்று அவன் குடும்பமே பட்டினியால் அவதியுற்றது.

''கடவுளே, என் அறியாமைக்காக வருந்துகிறேன். ஒருவன் நிறைய வருமானத்தைப் பெறுகிறானே என்று பொறாமைப் படுவதில் யாதொரு பயனுமில்லை. அவர் அவரவர்களுக்குக் கிடைக்கக்கூடியது தான் கிடைக்கும். தான் செய்யும் தொழிலில் மேலும் மேலும் நன்றாக உழைத்து அதிகம் ஊதியம் பெற முயல வேண்டும். மறுபடியும் கற்களைக் கெட்டிப்படுத்தி என்னைக் காப்பாற்ற வேண்டும். என்று வேண்டிக் கொண்டான். கல் தச்சனின் வேண்டுகோளின் படி கடவுள் மறுபடியும் கற்களைக் கெட்டியாக இருக்கும்படி செய்தார். வழக்கம்போல் கல் தச்சன் தன் வேலையை செய்து கிடைத்த ஊதியத்தைக் கொண்டு திருப்தியுடன் வாழ்ந்து வரலானான்.

உள்ளதைக் கொண்டு திருப்தி அடைதல் வேண்டும்.

—சேலம்வேணு

Mg. Editor & Publisher: M. D. Raman, Southern Avenue, Alwarpet, Madras-18
Edited and Printed by S. S. Sarma at Sri Sudarsan Press,
111/33, (Congress Bldgs) Teynampet, Mount Road. Madras-6
Associate Editor T. R. Rajagopalan (Tha. Ra. Ra.)

பிரபல நட்சத்திரங்கள் ஒருங்கே நடிக்கும்

ராஜமாணிக்கத்தின்

மகோன்னத படம்

ராஜ பக்தி

டைரக்ஷன் : கே. வேம்பு

மணங்கமழும்
தென்றல்
வீச

அணங்கே நின் அழகைப் பேச...

பூர்த்திபெற்ற அழகியாக விளங்குவதற்கு இன்றியமையாதது நேர்த்தியான மேனியெழிலே என்ற உண்மையை நன்குணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய பத்மினி பிரியதரிசினி கூறுகிறார். "அதனால்தான் அதிமென்மை வாய்ந்த லக்ஸ் மீது எனக்குப் பூரண நம்பிக்கை. வெண்ணெய் திரண்டதுபோன்ற அதன் நுரை எனது சருமத்தை மழமழப்புடனும் சோபையுடனும் நிலைபெறச் செய்கிறது!" உங்கள் அழகும் உன்னத அழகாக மிளிர-உபயோகியுங்கள் லக்ஸ்!

LUX
TOILET SOAP

சினிமா நட்சத்திரங்களின் தூய, மென்மை குலவும் அழகுசாதன சோப்.

ஜீ. கே. ப்ரொடக்ஷன்ஸ்
'சகோதரி'யில் தோன்றும்
அழகு நட்சத்திரம்
பத்மினி பிரியதர்சினி.

LTS.48-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

Sri Sudarsan Press, Madras-6.